பகுதி II

பகுதி II

இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

	பக்கம்
மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல்	(I)
கணக்குகளும் நிதியும்	(IV)
வங்கி மேற்பார்வை	(XIX)
நாணய வெளியீடு	(XXIII)
உள்நாட்டுத் தொழிற்பாடுகள்	(XXV)
பொருளாதார ஆராய்ச்சி	(XXVIII)
ஊழியர் சேமநிதியம்	(XXX)
செலாவணிக் கட்டுப்பாடு	(XXXIII)
தகவல்	(XXXVII)
நூலகமும் தகவல் நிலையமும்	(XXXVIII)
தகவல் தொழில்நுட்பம்	(XXXVIII)
பன்னாட்டுத் தொழிற்பாடுகள்	(XLII)
சட்டம்	(XLIV)
முகாமைக் கணக்காய்வு	(XLIV)
முகாமை அபிவிருத்தி நிலையம்	(XLVI)
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு	(XLVI)
பணிமனை	(XLIX)
பொதுப்படுகடன்	(XLIX)
பிரதேச அபிவிருத்தி	(LIV)
செயலகம்	(LVII)
பாதுகாப்புப் பணிகள்	(LVII)
புள்ளிவிபரங்களும் கள அளவீடுகளும்	(LVIII)
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை	(LX)
வங்கித்தொழில் ஆய்வு நிலையம்	(LXII)
பயிற்சி	(LXIII)
நலன்புரி	(LXV)
மனிதவளங்களின் அபிவிருத்தி	(LXV)

சிறப்புக் குறிப்பு II -I

மத்திய வங்கியினை நவீனமயப்படுத்தல்

1. அறிமுகம்

நிதியியல் சந்தைகளில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் சிக்கல் வாய்ந்த தன்மைகளும், மாற்ற மடைந்துவரும் உலகில் பொருளாதாரக் கொள்கைகள், மத்திய வங்கியின் மற்றும் பங்கு ஆகிய இரண்டும் பற்றிய புதிய சிந்தனைகள் என்பன உலகம் முழுவதிலு முள்ள மத்திய வங்கிகள் வினைத் திறன் மிக்க முறை யில் செயலாற்றும் விதத்தில் தம்மைத்தாமே மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தினை உருவாக்கி யுள்ளன. 1950 இல் நிறுவப்பட்ட மத்திய வங்கி காலத்திற்குக்காலம் பல மாற்றங்களுக்கு உட்பட்டிருந்த தெனினும்,1996 இன் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து வங்கியை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாடுகள் தொடங்கப்பட்ட பின்பே அனைத்தையு முள்ளடக்கிய நவீனமயப்படுத்தலொன்றின் அவசியம் பெருமளவில் அவசரமாக உணரப்பட்டது. இக்கால கட்டத்தில் வங்கியானது வரையறுக்கப்பட்டளவு அலுவலர் களுடனும் இடவசதியுடனும் அதன் அனைத்து தொழிற்பாடுகளையும் எந்த விதமான இடையூறுகளுமின்றி மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இது, வங்கி அதன் மையத் தொழிற் பாடுகளை மீளவரையறுத்துக் கொள்வதன் மூலம் குறைந்த எண்ணிக்கையான அலுவலர்களுடன் வினைத்திறன் மிக்க முறையில் தொழிற்பட முடியும் என்பதனை வங்கி நேரகாலத்துடன் உணர்ந்து கொண்டமையினை உறுதிப்படுத்தியது. நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சிதிட்டமானது இந்நோக்கத் திற்காக பல தடவைகள் பிரத்தியேக இடமொன்றில் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள வங்கி அலுவர்களினாலேயே விருத்தி செய்யப்பட்டது. 1998-2000 காலப்பகுதியில் பல்வேறு பின்னடைவுகளைச் சந்தித்தனர். இறுதியாக 2001 இல் இது முறையாக ஆரம்பமாயிற்று.

2. நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

நவீன மயப்படுத்தலின் குறிக்கோள் யாதெனில் நவீன வழிமுறையில் வினைத்திறனையும் குறைந்தளவு ஊழியர்களையும் கொண்ட மத்திய வங்கி யொன்றினை உருவாக்குவ தேயாகும். மாற்றமடைந்து வரும் உலகின் வேகத்திற்கு இணையாக வளர்ந்துவரும் பொருளாதாரமொன்றின் தேவையினை பூர்த்தி செய்வதற்கு, முறைகளையும் நடைமுறைகளையும் தரமுயர்த்தல், ஆளுகை முறைகளை மேம்படுத்தல் மற்றும் மைய நிதியியல் முறை உட்கட்டமைப்பினை நிறுவுதல் என்பன தேவைப்படுகின்றன.

இந்நிகழ்ச்சித் திட்டம் 2001-2005 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 37 மில்லியன் செலவில் நடைமுறைக் கிடப்பட்டது. மத்திய வங்கி ஐ.அ.டொலர் 10.7 மில்லியனை நிதியிட்ட வேளையில் உலக வங்கியும், சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரும், முறையே ஐ.அ.டொலர் 25.3 மில்லினையும் (இலகு கடன்), ஐ.அ.டொலர் 1 மில்லியனையும் (கொடை) வழங்கின.

3. நவீன மயப்படுத்தலின் முக்கியக் கூறுகள்

நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் பின்வரும் முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தது.

(அ) சட்ட மற்றும் நிறுவன அமைப்பு ரீதியான மாற்றங்கள்
(ஆ) மனிதவளசீர்திருத்தங்களும் அபிவிருத்தியும்
(இ) புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகம்
(ஈ) ஆளுகை முறையில் மேம்பாடு

4. சாதனைகள் மீதான புள்ளிப் பதிவேடு

(அ) சட்டம் மற்றும் நிறுவன அமைப்பு ரீதியான மாற்றங்கள்

எண்	விடயம்	மேற்கொள்ளப்பட்ட மாற்றம்	பூர்த்தியடைந்த ஆண்டு	மாற்றத்தின் விளைவு
1.	ஏற்கனவேயுள்ள பல்வேறு குறிக்கோள்களை கொண்டிருத்தல்	இரு மையக் குறிக்கோள்களான பொருளாதார, விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய இரு மையக் குறிக்கோள்களை கொண்டிருக்கும் விதத்தில் நாணய விதிச்சட்டத்திற்கு திருத்தம்	2002	• மற்றைய முக்கியத்துவமற்ற சிறு நடவடிக்கைகளில் கவனத்தை குறைத்து மத்திய வங்கி அதன் மையக் குறிக்கோள்களை வினைத்திறன் மிக்க விதத்தில் அடைந்து கொள்வதில் தற்பொழுது முழுக் கவனத் தையும் செலுத்த முடியும்.
2.	நவீன வங்கித் தொழில் நடவடிக்கைகளுடன் இணங்கிச் செல்லாத நிதியியல் துறைச் சட்டங்கள்	நாணய விதிச் சட்டத்திற்கும் வங்கித்தொழில் சட்டத்திற்குமான திருத்தங்கள் மற்றும் புதிய சட்டவாக்கங்களை வரைதல்	2002 மற்றும் 2004	• நிதித்துறைக்கான பூரணமான சட்டவாக்கம் இதன் மூலம் நவீன வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கப்படுகின்றது
3.	நவீன மயப்படுத்தப்பட்ட வங்கியின் திருத்தியமைக்கப்பட்ட தொழிற் பாடுகளை மேற் கொள்வதற்கும் பொருத்தமற்ற நிறுவன அமைப்பு	புதிய குறிக்கோள்களுக்கு ஏற்ற விதத்தில் புதிய நிறுவன அமைப்பினை நிறுவுதல்	பெரும்பாலான விடயங்கள் 2004 இல் முடிவடைந்தன நடைபெற்று வருகின்றது	• உற்பத்திகளை அளவிடுகின்றதும் பூரணமாக நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வழி நடத்துவதற்கு மான இயலாற்றலைக் கொண்ட சிறிய நிறுவன அமைப்பினை வங்கி கொண்டுள்ளது.
4.	மையமல்லா நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்	மையமல்லா/ முகவர் தொழிற் பாடுகளை உரிமை மாற்றல் செய்தலுடன் வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுதல்.	2003	• குறைந்த எண்ணிக்கையான அலுவலர்களுடன் மையத் தொழிற்பாடுகளை மேற்கொள்ள வசதியளித்தல்.

சிறப்புக் குறிப்பு II -I தொடர்ச்சி

(ஆ) மனிதவள சீர்திருத்தங்களும் அபிவிருத்தியும்

எண்	விடயம்	மேற்கொள்ளப்பட்ட மாற்றம்	பூர்த்தியடைந்த ஆண்டு	மாற்றத்தின் விளைவு
1.	மாற்றமடைந்து வருகின்ற நடைமுறைகளின் வேகத்துடன் ஒத்துச் செல்லத் தவறுகின்ற மனிதவள கொள்கைகள்	விருத்தியடைந்த மனிதவள முகாமைத்துவத்தினையும் தகுதியினை அடிப்படையாகக் கொண்ட செயலாற்ற மதிப்பீடுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், ஒன்றுதிரண்ட இழப்பீடு போன்ற அபிவிருத்தி கொள்கைகளையும் அறிமுகப்படுத்தல்	நடைபெற்று வருகின்றது	♦ வங்கியின் இலக்குகளை அடைவதற்கான மிகக் கூடியளவு உள்ளார்ந்த வளங்களைப் பயன் படுத்தக் கூடிய விதத்தில் மனித மூலதன இருப்புக்களை அபிவிருத்தி செய்தல் ♦ வங்கியை முன்மாதிரியான முன்னேற்ற தொழில் தருநராகச் செய்தல்
2.	நவீன முறைகளுக்கு இணையாக அபிவிருத்தியுறாத மனித மூலதன இருப்பு	அனைத்தையுமுள்ளடக்கிய பயிற்சி, பயிலும் கலாச்சாரத்தினை ஊக்குவித்தல், முகாமைத்துவ பயிற்சி நிலையத்தினை நிறுவுதல்	நடைபெற்று வருகின்றது	♦ உறுதியான அடிப்படையில் ஊழியர்கள் தாமாகவே மேற் கொள்ளும் தேர்ச்சியை தரமுயர்த்தல். ♦ வங்கி கற்கின்ற நிறுவனமாக மாற்றப்பட்டிருக்கின்றது
3.	வங்கியின் தேவைக்கு மிகையாக அலுவலர்களைக் கொண்டிருத்தல்	சுயவிருப்பிலான ஓய்வூதியத்திட்டம் வழங்கப்பட்டமை	2001	♦ தொழிற்பாடுகளை பயனுறு முறையில் கையாளக்கூடிய இயலாற்றலைக் கொண்ட சிறிய நிறுவனஅமைப்பு ♦ கடப்பாடுடைய அர்ப்பணிப்பு என்பன அலுவலர் களைக் கொண்டித்தல்.
4.	நவீனமயமான வங்கிக்குப் பொருத்தமான அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்	வங்கிக்கு சேர்தல் மற்றும் வங்கியிலிருந்து விலகிச்செல்லல் மற்றும் செய்யத்தக்க ஓய்வூதியங்கள் மாற்றல் தொடர்பான புதிய கொள்கைகள்	நடைபெற்று வருகின்றது	♦ தகுதி வாய்ந்த அலுவலர்களின் கிடைக்கத்தக்க இருப்பு

(இ) புதிய தொழில் நுட்பத்தினை அறிமுகப்படுத்தல்

எண்	விடயம்	மேற்கொள்ளப்பட்ட மாற்றம்	பூர்த்தியடைந்த ஆண்டு	மாற்றத்தின் விளைவு
1.	இடர்நேர்வு மிக்க வினைத் திறனற்ற கொடுப்பனவு முறை	அ.மொ.தீ.முறை/ ப.பி.தீ.முறை, காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்ட நிறுத்தல், மற்றும் அரச கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளை அறிமுகப்படுத்துவதனூடாக கொடுப்பனவு சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.	2003/2004 மற்றும் 2005	♦ தீர்ப்பனவு இடர்நேர்வுகள் குறைக்கப்பட்டமை ♦ கொடுப்பனவு முறையின் அதிகரித்த வினைத்திறன் ♦ பாதுகாப்பான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை நிறுவப்பட்டமை ♦ தீவு முழுவதும் காசோலைகளை தீர்ப்பனவு செய்வதற்கான நியம நேர அட்டவணை ♦ கொடுப்பனவு முறைகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கு மேற்பார்வையிடல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரம் வழங்கப்பட்டமை. ♦ காசோலைகளை மின்னியல் ரீதியாக சமர்ப்பிப்பதனை இயலச் செய்திருக்கின்றமை.

(ஈ) ஆளுகை முறையின் மேம்பாடும், மையத் தொழிற்பாடுகளின் முகாமைத்துவமும்

சிறப்புக் குறிப்பு II-I தொடர்ச்சி

எண்	விடயம்	மேற்கொள்ளப்பட்ட மாற்றம்	பூர்த்தியடைந்த ஆண்டு	மாற்றத்தின் விளைவு
1.	உலகளாவிய போக்குடன் கணக்கீடு மற்றும் கணக்காய்வுகளை இணங்குவிக்க வேண்டிய தேவை	கணக்காய்வாளர் நாணயத்தினால் மேற்கொள்ளப்படும் கணக்காய் விற்குப் புறம்பாக கணக்கீடு மற்றும் கணக்காய்வு கட்டமைப்பொன்றாக பன்னாட்டு கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களைப் பின்பற்றுதல்	2002	♦ மத்திய வங்கியின் கணக்கீட்டு முறை உலகளாவிய கணக்கீட்டுப் போக்குகளுடன் இணங்கு விக்கப்பட்டது.
2.	வெளிப்படையான தன்மையும் பொறுப்புக்கூற வேண்டிய தன்மையும் போதுமானதாக இல்லாமை	தொழில்நுட்ப மதியுரை குழுக்களை உருவாக்கிய நாணயச் சபையின் விரிவாக்கம், மேம்பட்ட வெளிப் படுத்துகை கொள்கைகளை பின்பற்றுதல் என்பனவற்றினூடாக தீர்மானம் மேற்கொள்ளும் செயன் முறையினை ஒழுங்குமுறைப்படுத்தல்	2003	♦ சிறந்த ஆளுகையினைப் பின்பற்றுதல் ♦ பன்முகப்படுத்தப்பட்ட தேர்ச்சி மற்றும் அனுபவங்களை உள்ளீடு செய்தல் ♦ சந்தைப் பங்கேற்பாளர்களினால் பெருமளவு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படல்
3.	கையினால் அவ்வப்போது செய்யப்படும் கணக்கீடும் அதனோடு தொடர்பான முறைகளும்	பொதுப்பேரேட்டினைத் தன்னியக்கப் படுத்தல் மற்றும் திறைசேரி வணிகப்படுத்தல் அறை முகாமைத்துவ முறையினை அறிமுகப்படுத்தல்	2004	♦ பிரிவுகளற்ற கணக்கீட்டு மற்றும் முகாமைத்துவ தகவல் முறைக்கு மத்திய வங்கித் தொழில் பாடுகளை ஒருங்கிணைத்தல் ♦ சிறந்த பன்னாட்டு நடைமுறை களை பின்பற்றுதல் ♦ வெளிநாட்டு சொத்துப் பட்டியல்கள் மற்றும் அதனுடன் தொடர்பான இடர்நேர்வுகளின் மேம்பட்ட முகாமைத்துவம் .
4.	நாணயக்கொள்கை செயற்பாட்டு நடைமுறைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான தேவை	நாணயச்சபைக்கு மதியுரை வழங்கு வதற்காக மூத்த அலுவலர்களை உள்ளடக்கிய நிலையியல் நாணயக் கொள்கை குழுவினை நிறுவுதல்	2003	♦ நாணயக் கொள்கை நிலையினை கிரமமாக மீளாய்வு செய்தலுடன் அதன் பெறுபேறுகளை முன் கூட்டியே அறிவிக்கப்பட்ட அட்டவணையின்படி சந்தைக்கு அறிவித்தல்.
5.	நிதியியல் முறை உறுதிப்பாட்டு நடவடிக்கையினை மேம்படுத்துவதற்கான தேவை	நாணயச்சபைக்கு மதியுரை வழங்கு வதற்காக மூத்த அலுவலர்களை உள்ளடக்கிய நிதியியல் உறுதிப்பாட்டு குழுவினை நிறுவுதல்	2003	♦ முறைமையிலான உறுதிப் பாட்டினை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல், உறுதிப்பாட்டு அறிக்கைகளை வெளியிடுதல்
6.	வங்கியிலான ஆளுகையினை சுதந்திர மாக மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை	நாணயச்சபை உறுப்பினர் ஒருவரை யும் இலங்கையிலுள்ள இரண்டு முன்னணி பன்னாட்டு கணக்காய்வு நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மூத்த பங்காளர் களையும் உள்ளடக்கிய கணக்காய்வுக் குழுவினை நியமித்தல்	2001 மற்றும் நடைபெற்று வருகின்றது	♦ பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் வங்கியின் நிதியியல் கூற்றுக் களைத் தயாரிக்க வழிகாட்டுதல் ♦ சிறந்த முறைமைகள், நடைமுறை கள் மற்றும் கட்டுப்பாடுகள் ♦ இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை நிறுவுதல் ♦ மத்திய வங்கிகளின் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

கணக்குகளும் நிதியும்

கணக்கீட்டுக் கொள்கைகளின் கூற்று

(1) அறிக்கையிடுகின்ற நிறுவனமும் நியதி அடிப்படையும்

இவை, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பனவற்றிற்கு பொறுப்பான அதிகார சபையாக திருத்தப்பட்டவாறு (நா.வி.சு) 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய சட்ட விதியின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் (வங்கி அல்லது இ.ம.வ) நாணயக் கூற்றுக்களாகும். இக்கூற்றுக்கள் 2004 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்குப் பொருந்தத் தக்கனவாகும்.

2. தயாரிப்பிற்கான அடிப்படை

நிதியியல் கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு நியாயமான பெறுமதிகளில் அளவிடப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடம் வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள் தவிர்ந்த, ஏனையவை வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

3. சமா்ப்பித்தல் நாணயம்

வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, இலங்கை ரூபாவின் அனைத்துத் தொகைகளும் ஆயிரத்திலேயே தரப்பட்டுள்ளன.

4. இணங்குவிப்புக் கூற்று

2004 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

5. வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்

கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற நாளன்று ஏற்புடைத்தான செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் ஏற்புடைத்தாயிருந்த செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றிற்கு கொண்டு செல்லப்பட்டன. மீள்மாற்றல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்கள் பின்வருமாறு.

அட்டவணை II-1

ஐந்தொகை திகதியின்படி செலாவணி வீதங்கள்

வெளிநாட்டு நாணயத்திற்கான இலங்கை ரூபா

	2004	**2003**
யூரோ	142.3203	121.6048
இசுடேர்லிங் பவுண்	201.3699	172.1988
இந்தியன் ரூபா	2.3954	2.1247
யப்பானிய யென்	1.0179	0.9044
ஐ.அ.டொலர்	104.605	96.7382
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	162.4520	143.7500

6. நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானம் மற்றும் செலவுப் பாய்ச்சல்களையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கை ளிடையே வேறுபடுத்திக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியினது வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ தொழிற்பாடுகளிலிருந்து எழுகின்றது. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கையினை நடைமுறைப் படுத்தல், வழங்கப்படுகின்ற நாணயங்களின் ரூபாப் பெறுகைகளின் முதலீடு மற்றும் மத்திய வங்கியின் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பனவற்றுடன் தொடர்பான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரதிபலிக்கின்றன.

வங்கியின் நிதி நிலைமை, நிதியியல் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைச் சிறந்த முறையில் வழங்குவதற்காக இந் நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுவது நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியினை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங் காணப்பட்டதுடன், இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவைத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்துக் கிரமமான வழிக் கொள்வனவுகளும் விற்பனைகளும் (அதாவது ஒழுங்கு விதிகளின் மூலம்

இலங்கை மத்திய வங்கி
வருமானக் கூற்று
2004 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	குறிப்பு	2004 (ரூபா '000)	2003 (ரூபா '000)
தொழிற்பாட்டு வருமானம்:			
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்			
வட்டி வருமானம்	15	6,021,254	5,103,780
விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்)		185,631	(1,873,732)
விலை மாற்றங்களிலிருந்து தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்)		1,769,157	1,411,203
வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்		7,976,042	4,641,251
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்			
வட்டிச் செலவு	16	(1,236,140)	(919,300)
வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு		(1,236,140)	(919,300)
தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்		18,453,354	6,903,079
வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்		25,193,256	10,625,030
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்			
வட்டி வருமானம்	15	4,339,104	4,329,656
வட்டிச் செலவு		(506,938)	(986,032)
உள்நாட்டு நாணயநிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்தவருமானம்		3,832,166	3,343,624
ஏனைய வருமானம்	17	813,015	739,697
மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்		29,838,437	14,708,351
தொழிற்பாட்டுச் செலவுகள்:			
ஆளணிச் செலவுகள்	18	(1,547,601)	(1,822,266)
பெறுமானத்தேய்வு		(359,677)	(422,530)
பொருட்பட்டியல் செலவு		(1,089,207)	(1,064,409)
நிருவாகம்	19	(522,883)	(383,845)
அறவிடமுடியா மற்றும் ஐயப்படுகடன்கள் மற்றும் தேறிய சில்லரைகளின் பதிவளிப்பு		(46,753)	(8,598)
மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்		(3,566,121)	(3,701,648)
வருமான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்		26,272,316	11,006,703
வருமானவரி		(589,029)	(188,397)
சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான தேறிய இலாபம்		25,683,287	10,818,306

இலங்கை மத்திய வங்கி
ஐந்தொகை
2004 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு

	குறிப்புக்கள்	2004 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டு (ரூ.000)	2003 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டு (ரூ.000)
சொத்துக்கள்			
வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்			
காசு நிலுவை	1	143,510,890	77,940,229
வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தல் பிணைகள்	2	44,768,751	84,932,644
தங்கம்	2	7,620,907	6,654,602
விற்பனைப் பிணையங்களுக்கான வெளிநாட்டு நாணயக் கிடைப்பனவுகள்		21,377,058	49,329,149
பெறத்தக்கவை	2	151,423	82,670
ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள்	3	67,177,196	59,486,061
		284,606,225	278,425,355
உள்நாட்டு நாயண நிதிச் சொத்துக்கள்			
இலங்கை அரச பிணைகள்		82,839,235	33,182,981
அரசுக்கான கடன்	4	34,791,100	31,203,900
ஏனைய நிறுவனங்களுக்கான கடன்	5	29,878	29,878
பெறத்தக்கவை		696,755	705,415
நிதி மற்றும் ஏயை நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள்	6	501,641	599,529
		118,858,609	65,721,703
ஏனைய சொத்துக்கள்			
பொருட்களின் இருப்பு	7	950,789	497,491
தங்க இருப்பு		59,766	59,766
நானாவிதச் சொத்துக்கள்		1,399,073	1,324,063
சொத்துக்கள், பொறிகள், இயந்திரங்கள்	8	8,238,062	8,554,160
		10,647,690	10,435,480
		414,112,524	354,582,538
பொறுப்புக்களும் பஞ்குகளும்			
வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்			
வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்படவேண்டிய தொகை	9	4,758,324	5,616,874
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை		37,889,263	17,603,949
ப.நா.நி தொடர்பான பொறுப்புக்கள்	10	101,645,332	100,784,234
ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள்		128,346	31,668
		144,431,265	124,036,725
உள்நாட்டு நாயணநிதிப் பொறுப்புக்கள்			
வர்த்தக வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்		55,051,087	42,641,572
அரச, அரச முயற்சிகளின் வைப்புக்கள்	11	892,435	1,229,705
திறைசேரி உண்டியல்களும் பிணைகளும் (மீள் கொள்வனவுகள்)		7,213,000	20,974,201
ஊழியர் நன்மைகள் திட்டத்துடனான வைப்புக்கள்	12	7,525	152,168
கொடுபடத்தக்கவை		717,364	686,894
		63,881,411	65,684,540
ஏனைய பொறுப்புக்கள்			
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்		115,908,969	98,784,636
பிற்போடப்பட்ட அரச கொடைகள்		429,459	588,781
ஒதுக்குகள்	13	465,334	1,012,795
பல்வகைப் பொறுப்புக்கள்		99,464	331,364
பங்குடமையாளர் பங்குகள்		116,903,226	100,717,576
மூலதனம்	14	15,000	15,000
ஒதுக்குகள்		88,881,622	64,143,697
		414,112,524	354,582,538

கணக்காளர் நாயகத்தின் குறிப்பு

2004 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 இற்கு அமையவும் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42(2)இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இதுவரையான எனது பரீட்சிப்புக்களிலிருந்து கண்டறியப்பட்ட எனது அபிப்பிராயத்தின்படியும் எனக்குக் கிடைத்ததகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களின்படியும். நிதியியல் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்கான 1-24 வரையான குறிப்புக்களில் எடுத்துக்காட்டப் பட்டவாறான குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கிணங்கவும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன்; 2004 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் நிதி நிலைமை தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான கருத்துக்களையும் அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் பெறுபேறுகளையும் காசுப் பாய்ச்சல்களையும் தருகிறது.

மேற்குறிப்பிட்ட நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2)இன் நியதிக்கிணங்க இக் கணக்குகள் மீதான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் நிதியமைச்சருக்கு முகவரியிடப்பட்ட ஒப்படைக்கவேண்டிய எனது அறிக்கையில் உள்ளடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
கொழும்பு.7.
12 ஏப்பிறல் 2005

எஸ். சீ. மாயதுன்ன கணக்காய்வாளர் நாயகம்	எஸ். மென்டிஸ் ஆளுநர்	டி. எல். கட்டுவாவல முதன்மைக் கணக்காளர்

இலங்கை மத்திய வங்கி
காசுப்பாய்ச்சல் கூற்று
2004 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	குறிப்பு	2004 (ரூபா '000)	2003 (ரூபா '000)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:			
மூலம்:			
பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம்		6,429,721	4,352,505
பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை		43,641	68,740
திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும்		1,769,157	1,411,203
பெறப்பட்ட செலாவணி இலாபம்/ (இழப்பு)		(35,947)	(359,933)
கட்டணம், தரகு, பெறப்பட்ட ஏனைய பல்வகை வருமானம்		304,009	761,815
		8,510,581	6,234,330
பகிர்ந்தளிப்புக்கள்:			
செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம்		1,166,276	921,403
செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம்		335,991	986,032
ஊழியர்களுக்கான கொடுப்பனவு		989,528	975,045
நிரம்பலர்களுக்கான கொடுப்பனவு		3,525,649	1,161,205
செலுத்தப்பட்ட வருமானவரி		567,029	188,397
		6,584,473	4,232,082
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்:	20	1,926,108	2,002,248
முதலீட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:			
மூலம்:			
ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு) / குறைப்பு		(75,484)	(65,576)
ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் மீள் பெறுகைகள்		79,258	121
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை/ மீட்டல்		119,685	43,563
சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை		267	567
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் மீதான வருமானம்		86,412	117,953
மீள விற்பதற்கான உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு		(13,761,201)	9,818,516
		(13,551,063)	9,915,144
பகிர்ந்தளிப்புக்கள்:			
வெளிநாட்டு நாணய சந்தைப்படுத்தத்தக்க பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு)		(77,194,471)	38,025,386
ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு)		(58,635)	(170,732)
ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு)		(18,507,734)	(9,948,239)
ஏனைய உள்ளூர் வைப்புக்களிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு)		144,643	41,680
கொடைகள் தவிர்ந்தசொத்து பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு		42,421	260,702
தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு)		74,272	
		(95,499,504)	28,208,797
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		81,948,441	(18,293,653)
நிதியிடல் நடவடிக்கைகளில்ருந்தான காசுப்பாய்ச்சல்			
மூலம்:			
சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடல்		115,993,628	108,826,986
சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை புறக்கீடு செய்தல்		(98,869,295)	(98,350,124)
சுற்றோட்டத்திலுள்ள தேறிய நாணய வழங்கல்		17,124,333	10,476,862
கழிக்குக:			
அரச கொடுக்கல் வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் (புறக்கீடுகள்)	21	49,237,087	(23,867,571)
வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடுகள்)	22	(12,409,516)	(4,555,797)
சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடு)		(19,703,238)	38,900,230
மேலதிக வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்கள்		-	7,197,831
		(19,703,238)	46,098,061
பகிர்ந்தளிப்புக்கள்:			
வெளிநாட்டு நாணய தவணைப்பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு		(11,456,546)	(2,869,497)
அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள்		(1,000,000)	(10,000,000)
		(12,456,546)	(12,869,497)
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		(32,159,784)	33,228,564
காசு மற்றும் காசுக்குச்சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு		51,714,765	16,937,159
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் மீதான செலாவணிவீதத் தாக்கம்		13,855,896	5,129,963
சனவரி 1இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		77,940,229	55,873,107
திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	23	143,510,890	77,940,229

இலங்கை மத்திய வங்கி
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
2004 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

குறிப்பு		2004 (ரூபா '000)	2003 (ரூபா '000)
1.	**வெளிநாட்டிலுள்ள காசும் வங்கி நிலுவையும்**		
	வெளிநாட்டு வங்கிகளிலுள்ள நிலுவைகள்	1,070,545	1,172,891
	வெளிநாட்டு தாள் மற்றும் நாணயக் கணக்கு	1,611	1,081
	வெளிநாட்டு வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்கள்	96,686,319	44,433,079
	ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையான வைப்புக்கள்	4,485,742	5,439,958
	பெடரல் ஒ.வங்கியுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கை கணக்கு	41,266,673	26,893,220
		143,510,890	77,940,229
2.	**வெளிநாட்டு நாணயப் பிணையங்களும் தங்கமும்**		
	வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தல் பிணையங்கள்	44,768,751	84,932,644
	தங்க நடைமுறைக் கணக்கும் நிலையான வைப்புக்களும்	7,620,907	6,654,602
	விற்பனைக்கான பிணையங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டு நாணயம்	21,377,058	49,329,149
		73,766.716	140,916,395
3.	**பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள்**		
	பன்னாட்டு நாணய நிதியத்துடனான சிறப்பு எடுப்பனவு உரிமையிலுள்ள உடைமைகள்	19,539	59,811
	பன்னாட்டு நாணய அனுமதிப்பங்கு	67,157,657	59,426,250
		67,177,196	59,486,061
4.	**அரசுக்கான கடன்களும் முற்பணங்களும்**		
	அரசுக்கான கடன்களும் முற்பணங்களும்	34,791,100	31,203,900
		34,791,100	31,203,900
5.	**ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**		
	வெளிநின்ற மூலதனம்	2,547,400	2,626,658
	பெறத்தக்க வட்டி	4,732,762	4,349,153
	பெறத்தக்க மொத்தம்	7,280,162	6,975,811
	கழிக்குக: ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஏற்பாடு	(2,517,522)	(2,596,780)
	இடைநிறுத்தப்பட்ட வட்டி	(4,732,762)	(4,349,153)
	தேறிய பெறத்தக்கவை	29,878	29,878
6.	**நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்**		
	பிரதேச அபிவிருத்தி வங்கிகள்	430,113	517,469
	கொடுகடன் தகவல் பணியகம்	12,278	12,310
	தேசிய அபிவிருத்தி வங்கி	26,250	26,250
	பிச் ரேட்டிங் லங்கா லிமிடெட்	3,500	3,500
	என்.டி.பீ. வங்கி லிமிடட்	-	10,500
	லங்கா கிளியர் பிளாபேட் லிமிட்	29,500	29,500
		501,641	599,529
7.	**இருப்புக்கள்**		
	சுற்றோட்டத்திற்கான தாள்கள்	518,834	286,002
	சுற்றோட்டத்திற்கான நாணய குத்திகள்	184,325	248,723
	இடைப்போக்கிலுள்ள நாணய குத்திகள்	287,501	-
		990,660	534,725
	கழிக்குக: மெதுவாக அசையும் விடயங்களுக்கான ஏற்பாடு	(64,700)	(64,700)
		925.960	470,025
	எழுதுகருவிகள் மற்றும் நானவிதப் பொருட்கள்	24,829	27,466
	குறைந்தசெலவில் மொத்த இருப்புக்களும் பெறத்தக்க தேறிய பெறுமதியும்	950,789	497,491

8. சொத்து பொறி மற்றும் கருவிகள் கொண்டிருக்கும் பெறுமதி

	காணியும் கட்டடமும் ரூபா '000	கருவிகள் ரூபா '000	அலுவலகத் தளபாடமும் பொருத்துக்களும் ரூபா '000	ஏனையவை ரூபா '000	மொத்தம் ரூபா '000 2004	மொத்தம் ரூபா '000 2003
ஒன்று சேர்ந்த தேய்மானம் பெறுமதிக் குறைப்பிற்கான ஏற்பாடு நீங்கலாக சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு	7,683,178	713,625	151,447	5,910	8,554,160	8,127,448
புதிதாக வாங்கப்பட்டவை	791	18,588	20,066	2,976	42,421	849,484
விற்பனை செய்யப்பட்டவை, ஒன்றுசேர்ந்த தேய்மானம் நீங்கலாக			(61)		(61)	**(205)**
கணக்கீட்டு மதிப்பீடுகளில் செய்யப்பட்ட மாற்றங்களின் தாக்கம்					-	**(79,789)**
நேர்மாற்றியமைக்கப்பட்ட பழுதுகளுக்கான ஒதுக்கு				1,219	1,219	
ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம்	(114,600)	(216,300)	(25,871)	(2,906)	(359,677)	**(342,778)**
ஒன்றுசேர்ந்த தேய்மானம் நீங்கலாக திசெம்பர் 31ஆம் நாள் உள்ளவாறு	7,569,369	515,913	145,581	7,199	8,238,062	**8,554,160**

குறிப்பு		2004 ('000 ரூபா)	2003 ('000 ரூபா)
9.	**வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க தொகை**		
	வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	4,485,742	5,439,958
	ஏனையோருக்குச் செலுத்தவேண்டியவை	272,582	176,916
		4,758,324	5,616,874
10.	**பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள்**		
	பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள்		
	வட்டியுடனான கடன்கள் - நடைமுறையற்ற	26,548,718	33,525,734
	வட்டியுடனான கடன்கள் - நடைமுறை	4,197,354	4,519,140
	சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு	11,512,648	10,187,275
	ப.நா.நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ஏனைய தொகைகள்	30,552,522	27,037,469
	அனுமதிப் பங்குப் பொறுப்பு	28,834,090	25,514,616
		101,645,332	100,784,234
11.	**அரசு மற்றும் அரச முயற்சிகளுடனான நிலுவைகள்**		
	அரசுடனான நிலுவைகள்	532,673	568,906
	அரச முயற்சிகளுடனான நிலுவைகள்	369,762	456,007
		892,435	1,024,913
12.	**ஊழியர் நன்மைகள் திட்டங்களிலுள்ள நிலுவைகள்**		
	சேமநிதியம்	2,701	107,466
	ஓய்வுதிய நிதியம்	2,067	38,767
	விதவைகள் அநாதைகள் நிதியம்	2,757	5,935
		7,525	152,168
13.	**ஒதுக்கங்கள்**		
	கொடுகடன் உத்தரவாதங்கள்	-	168,673
	ஊழியர் ஒய்வூதியத்திட்டங்கள்	306,374	712,006
	விதவைகள் அநானாதைகள் திட்டங்கள்	148,860	121,624
	வெகுமதி கொடுப்பனவுகள்	10,100	10,492
		465,334	1,012,795

குறிப்பு	2004 (ரூபா '000)	2003 (ரூபா '000)
14. பங்கு மூலதனம்		
மூலதனம்	15,000	15,000
நடுத்தர நீண்டகால கொடுகடன் ஒதுக்குகள்	4,925,000	4,925,000
மிகை	985,000	985,000
மூலதனப் பங்களிப்பு கணக்கு	577,859	577,859
நிலையான சொத்து மீள்மதிப்பீட்டுக் கணக்கு	662,382	662,382
சந்தைப் பெறுமதியிடல் ஒதுக்கு - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள்	185,717	275,356
கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்கு	13,026,726	42,760,506
ஆண்டுக்கான இலாபம்	25,683,287	10,818,306
பன்னாட்டு ஒதுக்கு மீள்மதிப்பீடு	43,207,085	3,675,000
	88,896,622	64,143,697
15. நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்		
காசுக்குச் சமமானவைகள்	2,656,598	1,386,721
வர்த்தகப்படுத்தக்க மற்றும் விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள்	3,302,531	3,665,204
பன்னாட்டு நாணய நிதியம்	62,125	51,885
வெளிநாட்டு நாணய நிதியச் சொத்துக்களிலிருந்ததான மொத்த வட்டி வருமானம்	6,021,254	5,103,780
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டிவருமானம்		
முதலீட்டுச் சொத்துப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள்	4,254,941	3,901,213
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தொகுதிக்கடன்களின் மீதான வட்டி வருமானம்	40,522	45,901
ஏனைய கடன்களும் முற்பணங்களும்	43,641	382,542
உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த தேறிய வட்டி வருமானம்	4,339,104	4,329,656
நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்	10,360,358	9,433,436
16. நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு		
ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்	179,811	92,070
பன்னாட்டு நாணய நிதியம்	1,054,075	823,282
ஏனைய	2,254	3,948
	1,236,140	919,300
17. ஏனைய வருமானம்		
பங்கிலாப வருமானம்	45,890	78,169
சொத்துக்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனையின் மீதான இலாபம்	207	363
நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகளை விற்பதன் மீதான இலாபம்	21,797	213,257
பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு	159,730	148,710
பல்வகை வருமானமும் மிகையான ஒதுக்கங்களின் நேர்மாற்றமும்	585,391	299,198
	813,015	739,697
18. ஆளணிச் செலவுகள்		
தொழில்தருநரினால் செலுத்தப்பட்ட உழைக்கும்போதே செலுத்தும் வரி உட்பட கூலிகளும் சம்பளங்களும்	854,362	850,530
ஓய்வூதியச் செலவு	446,518	627,852
ஏனைய வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு	115,484	211,070
வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்ட செலவுகள்	131,237	132,814
	1,547,601	1,822,266
19. நிர்வாகச் செலவுகள்		
திருத்தங்களும் பேணல்களும்	272,048	210,125
தகவல்	77,322	57,639
தொழில்ரீதியான பயணம்	21,630	-
வாடகைச் செலவுகள்	-	15,633
அச்சிடல்	32,326	36,147
கணக்காய்வுக் கட்டணம்	9,300	825
நாணயச்சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள்	795	560
பல்வகை	109,462	62,916
	522,883	383,845

குறிப்பு		2003 ('000 ரூபா)	2003 ('000 ரூபா)
20.	**தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலுடன் மீளிணக்கப்படுத்தல்**		
	தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்	25,683,287	10,818,305
	கூட்டுக (கழிக்குக) காசல்லா விடயங்கள்		
	தேய்மானம்	359,677	422,567
	பெறப்பட்ட வட்டி - உள்ளூர் நாணயம் - முதலீட்டுச் சொத்துப் பட்டியல்	(3,239,803)	(4,807,971)
	அறவிடமுடியாக்கடன் பதிவழித்தல்	(79,258)	8,598
	வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஊழியர் நன்மை திட்டங்களுக்கான தேறிய ஒதுக்கு	358,252	676,991
	பெறப்படாத தேறிய வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்) / இழப்பு	(18,489,302)	(7,263,012)
	ஏனைய ஒதுக்கங்கள்	(906,932)	-
	கூட்டுக (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலத விடயங்களின் அசைவுகள்		
	இருப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைப்பு	(453,299)	262,854
	பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/ குறைப்பு	(647,192)	155,484
	பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைப்பு)	(483,074)	195,448
	கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைப்பு)	262,810	(3,162)
	ஏனைய பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு/ (குறைப்பு)	(26,213)	-
	கூட்டுக (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்		
	முதலீடுகளிலிருந்தான வருமானம்	(67,893)	(337,585)
	பெறப்படாததேறிய சந்தைப் பெறுமதி மாற்றங்கள்	(185,630)	1,873,731
	பிற்போடப்பட்ட அரச கொடைகள்	(159,322)	-
	தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்	1,926,108	2,002,248
21.	**அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல்/ (புறக்கீடு)**		
	இலங்கை அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சி	(78,680,476)	(66,146,340)
	முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு	127,281,072	47,376,541
	பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டு சொத்துப்பட்டியல்	(3,199,282)	(4,807,971)
	இலங்கை அரசுக்கான கடன்கள் முற்பணங்களின் அதிகரிப்பு / (குறைப்பு)	3,587,200	170,900
	அரச, அரச முயற்சிகளுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைப்பு	248,573	460,701
		49,237,087	23,867,571
22.	**வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடுகள்)**		
	வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு	(9,387,516)	(7,577,797)
	வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான ஒரு நாளுக்குள்ளான திரவ வசதி(அதிகரிப்பு)/ குறைப்பு	(3,022,000)	3,022,000
		(12,409,516)	(4,555,797)
23.	**முடிவில் காசு நிலுவைகள்**		
	வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்		
	ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள்	143,510,890	77,940,229
	முடிவில் காசு நிலுவைகள்	143,510,890	77,940,229

அல்லது சந்தையின் மரபு வழிமுறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் வழங்கலைத் தேவைப்படுத்துவன) வர்த்தகம் செய்யப்பட்ட திகதியில் இனங் காணப்படுகின்றன.

6.1 வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தகப்படுத்தல் பிணையங்கள்

வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தகப்படுத்தல் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்களின் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங் காணப்படுகின்ற வேளையில் ஏற்படும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங் காணப்படுகின்றன.

பிணையம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள்மதிப்பீட்டிலிருந்து பெறப்படாத இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (பிணையத்தின் விற்பனை மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும்.

6.2 வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் ஐந்தொகையில் ஒதுக்குகளின் கீழ் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் இழப்புக்களும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கும் வரை அல்லது வேறுவிதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை பங்கின் தனியொரு கூறாக (ஐந்தொகையில் ஒதுக்குகளின் கீழ் காட்டப்படுகிறது) இனங் காணப்படுகின்றது. அந்த நேரத்தில் முன்னர் மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது இழப்பு வருமானமாக உள்ளடக்கப்படும்.

6.3 வர்த்தகப்படுத்தல் பிணையங்கள்–தங்கம்

வெளிநாடுகளிலுள்ள இணைக்கிணை நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் தங்கப் பிணையங்கள் ஆரம்பத்தில் கிரயச் செலவில் குறிப்பிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் ஐந்தொகையில் தங்கத்தின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங் காணப்படும்.

தங்கத்தின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங் காணப்படும். தங்கம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (தங்கத்தினை விற்பதன் மூலமாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்படும் இலாபமாகப் பதியப்படும்.

6.4 பன்னாட்டு நாணய நிதியத்தின் நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுவதனைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில் ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப்பங்கிற்காக ப.நா.நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகின்றது. ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகைத் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து ப.நா.நி. சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள் பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங் காணப்படும்.

ப.நா.நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கணக்கில் உடனடியாகப் பதிவு செய்யப் படுகின்றன.

6.5 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசும் காசிற்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் உள்ள காசு

மற்றும் மூன்று மாதம் அல்லது அதற்குக் குறைவான ஆரம்ப முதிர்ச்சிகளுடன் கூடிய குறுங்கால வைப்புக் களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயத்திலான நடவடிக்கைளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் மேற்கொள்கின்றது. இவை காசின் நகர்வுடன் தொடர்பானவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன் முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினுடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையில், ஏலங்களில் கோரப்படாத திறைசேரி உண்டியல்களின் பகுதியின் கொள்வனவு; இப்பிரிவின் 6.8 இன் கீழ் குறிப்பிடப்பட்ட தற்காலிக முற்பணங்கள் உட்பட அரசிற்கான வங்கியாளர் என்ற ரீதியிலமைந்த கடன்வழங்கல் தொழிற் பாடுகள் என்பனவற்றைக் உள்ளடக்கு கின்றன. அத்தகைய கொள்வனவுகள் விற்பனைகள் அல்லது அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவேடுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 20, குறிப்பு 21, குறிப்பு 22 என்பன வற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏக அதிகாரம் கொண்ட அதிகார சபையாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி நாணயவிதிச் சட்டத்திற்கு இணங்க, பொதுமக்களுக்கு நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வழங்கல் செய்யப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப் பொன்றாகவுள்ள வேளையில், உடமையாளரின் கையில் காசு விடயமாகவுள்ளது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திலான அசைவானது காசுப்பாய்ச்சல் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கின்ற, மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்றுறை முறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவு கட்டளை செயற்பாடுகளூடாக நாணயத்தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில் பெறப்பட்ட பொருள்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசினை பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களுடன் அல்லது வர்த்தக வங்கிகளிலுள்ள மீதிகளுடன் சேர்க்கப் படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசு பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு கொடுப்பனவு கட்டளையின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலான காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

6.6 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின்கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் ஐந்தொகையில் சந்தைப்படுத்தக்கூடிய அல்லது விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களாக தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தினையும் பிரதிபலிப்பதுடன் இவை வருமானக்கூற்றில் செலவினமாகக் காட்டப்படுகின்றன.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) ஐந்தொகையில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

6.7 முதலீட்டுப்பட்டியல்– இலங்கை அரச பிணையங்கள்

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை வங்கியினால் உருவாக்கப்பட்ட கடன்களை பிரதிநிதித்துவப்

படுத்துவதனால் ஐந்தொகையில் இச்சொத்துப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப்படும் செலவில் பதியப்படுகிறது.

6.8 அரசிற்கான கடன்கள்

திருத்தப்பட்டவாறான 1949 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

6.9 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்ப தொகைகளிலிருந்து சேகரிக்கப்பட முடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன்களுக்கான (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏற்பாடு செய்யப்பட்ட தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப்பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிட முடியாக்கடன்கள் அடையாளம் காணப்படும்போது பதிவழிக்கப்படுகின்றன.

6.10 வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள்

வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன் தீர்ப்பனவுக் கிரயச்செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப்பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாகத் தோன்றும் இலாபங்களும் இழப்புக்களும் உடனடியாகவே வருமானக்கணக்கில் செலவுகளாக இனங்காட்டப்படுகின்றன. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது இழப்போ விலை மீள்பெறுமதியிடலி லிருந்தான பெற்றுக்கொள்ளப்படாத இழப்பாக (இலாபமாகப்) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவினூடாக) அது விலை மாற்றங் களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்புக்களாக (இலாபம்) பதிவு செய்யப்படுகின்றது.

6.11 பெறுதிக் கருவிகள்

பெறுதிக்கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களில் காணப்படுகிறது. அத்தகைய பெறுதி நிதியியல் கருவிகள் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப்பெறுமதியாக, இதையொத்த முதிர்ச்சி தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்பான வீதங்களில் கணிக்கப்படுகின்றன.

இலாப அல்லது இழப்பு நிலையிலுள்ள அனைத்து பெறுதிக்கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது ஐந்தொகையிலுள்ள விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

6.12 ஏனைய நிதியியற் சொத்துக்களும் பொறுப்புக்களும்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக்காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங் காணப்படுகின்றன.

7. துணை நிறுவனங்களில் முதலீடு

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச்செலவு முறையில் கணிக்கப்படுகின்றன.

8. தங்க இருப்பு

உயர்ந்த திரவத்தன்மையைக் கொண்ட பண்டமான தங்கஇருப்பு கிரயச்செலவில் வைத்திருக்கப்படுகிறது.

9. இருப்புக்கள்

இருப்புக்கள் குறைந்த கிரயச்செலவிலோ அல்லது விற்றுப் பெறக்கூடிய பெறுமதியிலோ வைத்திருக்கப் படுகின்றன. கிரயச்செலவு நிறையேற்றப் பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

10. சொத்து, பொறி மற்றும் கருவி

சொத்து, பொறி மற்றும் கருவி தொடர்பான சகல விடயங்களும் ஆரம்பத்தில் கிரயச்செலவில் பதியப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து காணியும் கட்டடங்களும் அவற்றின் நியாயமான பெறுமதிகளுக்காக ஒவ்வொரு சொத்துக்களின் அடிப்படையில் மீளமதிப்பிடப்படுகின்றன. முன்கொண்டு செல்லப்படும் தொகை ஐந்தொகைத் திகதியில் காணப்படும் அவற்றின் நியாயமான பெறுமதியிலிருந்து

குறிப்பிடத்தக்களவில் வேறுபடாதிருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு போதிய ஒழுங்கு முறைகளுடன் மீள்பெறுமதியிடல் மேற்கொள்ளப் படுகின்றது.

மீள்பெறுமதியிடப்பட்ட மற்றும் கிரயச்செலவில் அளவிடப்பட்ட முன்கொண்டு செல்லப்படும் தொகைகள் இரண்டும் அவற்றின் மீளப்பெறக்கூடிய தொகையை விட விஞ்சிய அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பது ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் முன்கொண்டு செல்லும் தொகை மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின் சொத்துக்கள் பெறுமதி பதிவழிக்கப்படும்.

சொத்து ஒன்று மீளப்பெறுமதியிடப் படுமிடத்து, முன்பு செலவினமாக இனங்காணப்பட்ட அதே சொத்து சார்ந்த முன்னைய மீள்பெறுமதியிடல் வீழ்ச்சியை மாற்றாதவிடத்து, முன்கொண்டு செல்லல் அளவிலான எந்த ஒரு அதிகரிப்பும் நேரடியாக மீள்பெறுமதியிடல் மிகைக்கு வரவு வைக்கப்படும். இச்சந்தர்ப்பங்களில் அதிகரிப்பானது முன்பு பதிவழிக்கப்பட்ட அளவிற்குச் சமமான வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. மீள்பெறுமதியிடலின் காரணமாக சொத்தொன்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதி வீழ்ச்சியடைந்தவிடத்து, அவ்வீழ்ச்சியானது அச்சொத்து தொடர்பான முன்னைய அதிகரிப்பினை மாற்றாதவிடத்து செலவினமாக இனங் காணப்பட்டுள்ளது. இந்த விடயத்தில், அவ்வீழ்ச்சியானது அதே சொத்துக்கள் தொடர்பாக மீள்பெறுமதியிடல் ஒதுக்கில் வைத்திருக்கப்படும் தொகையை விஞ்சாதிருக்குமிடத்து எந்த ஒரு தொடர்பான மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கும் எதிராக இது விதிக்கப்படும். சொத்தொன்று தொடர்பாக மீள்பெறுமதியிடல் ஒதுக்கில் ஏதாவது நிலுவை காணப்படுமாயின் சொத்துக்களின் முதிர்வு அல்லது அகற்றலின்போது அது நேரடியாக பிடித்துவைத்திருக்கும் வருவாய்களுக்கு மாற்றப்படும்.

பெறுமானத்தேய்மானமானது மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தினைத் கவனத்தில் கொண்டு நேர்கோட்டு விதிமுறையில் கணிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II - 2

நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு

சொத்துக்களின் வகை	பெறுமான தேய்வு வீதம்
கட்டிடம்	50 ஆண்டுகளுக்கு மேல்
குத்தகைக் காணி, கட்டிடம்	குத்தகைக் காலத்திற்குமேல்
கருவிகள்	5-20 ஆண்டுகள்
அலுவலக தளபாடம், பொருத்துக்கள்	4-10 ஆண்டுகள்
உந்து ஊர்திகள்	5 ஆண்டுகள்
ஏஎஸ் 400 கணனி/வலையமைப்பு	4-5 ஆண்டுகள்

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகளை மீள ஏற்படுத்தவோ அல்லது பேணும்பொருட்டு சொத்து, பொறி மற்றும் கருவியின் திருத்தவேலைக்கோ அல்லது பேணலுக்கோ ஏற்பட்ட செலவினம், அது ஏற்பட்ட நேரத்தில் காணப்பட்ட செலவினமாகக் கொள்ளப்படும்.

11. பெறக்கூடிய கணக்குகள்

பெறக்கூடிய கணக்குகள், ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்கினைச் செய்தபின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

12. நானாவிதச் சொத்துக்கள்

நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப்பெறத்தக்க பெறுமதியில் முன் கொண்டு செல்லப்படுகின்றன.

13. ஏற்பாடுகள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், தேவைப்படுவதுடன் இக்கடப்பாட்டு தொகையை நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறியமுடியும். ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும்வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

14. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திற்கான பொறுப்பு ஐந்தொகையில் முகப்பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

15. ஊழியர்களுக்கான நன்மைகள்

ஓய்வூதியம்

1998 சனவரி 1ஆம் நாளுக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்களுக்கு நன்கு திட்டமிடப்பட்ட ஓய்வூதியத்திட்டமொன்றை வங்கி தொழிற்படுத்துகின்றது. 1998 சனவரி 1ஆம் நாளிலிருந்து வங்கிக்கு புதிதாக நுழைந்தவர்களுக்கு இந்த ஓய்வூதிய வசதி

வழங்கப்படவில்லை. இது உதவுதொகை செலுத்தாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதனால் நன்மையின் முழுச்செலவும் வங்கியினாலேயே பொறுப்பேற்கப் படுகின்றது. தனியாக நிருவகிக்கப்படும் நிதியமொன்றிற்கு வங்கி உதவுதொகையினைச் செலுத்தி வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகுக் கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப் படுகிறது. ஒவ்வொரு தனிஆளுக்குமான திட்டத்திற்கான திரண்ட இனங்காணப்படாத உண்மை இலாபங்களோ அல்லது இழப்புக்களோ தெளிவாக குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் 10 சதவீதத்தினை விஞ்சுமிடத்தும் மதிப்பிடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியினையும் விஞ்சுமிடத்து வருமானமாக அல்லது செலவாக இனங்காணப்படுகிறது. உண்மை இலாபங்களும், இழப்புக்களும் இலாபமாகவோ அல்லது இழப்புக்களாகவோ இத்திட்டங்களில் பங்கேற்கும் ஊழியர்களின் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சியிருக்கும் வேலைக்காலத்தினால் இனங்காணப்படுகின்றன.

ஓய்வூதிய வெகுமதி

ஓய்வூதிய வெகுமதி நன்கு திட்டமிடப்பட்ட நன்மையளிக்கும் ஒரு திட்டமாகும். வங்கி, ஓய்வூதியத்திட்டத்திற்கு தகைமை பெறாத ஊழியர்களுக்கு வெகுமதியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும். பணி தொடங்கிய முதல் ஆண்டு தொடக்கம் தகைமையுடைய ஒவ்வொரு ஊழியருக்கும் அவர்கள் பூர்த்தி செய்த ஒவ்வொரு பணியாண்டிற்கும், நிதியாண்டின் இறுதி மாதச் சம்பளத்தின் அரைவாசியை அடிப்படையாகக் கொண்ட சூத்திரத்தினைப் பயன்படுத்தி, கணக்கிடப்பட்ட அளவிற்குச் சமமான தொகை ஐந்தொகையில் ஏற்பாடொன்றாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. ஆண்டின் ஆரம்பத்திலிருந்து முன்னோக்கிக் கொண்டு வரப்பட்ட ஏற்பாடுகளுக்கும், ஆண்டினிறுதியில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாடுகளுக்குமிடையிலான வேறுபாடு வருமானக்கூற்றுக்கான பற்று ஒன்றாக விளங்கும். வெகுமதிப் பொறுப்பு நிதியிடப்பட்டதோ அல்லது உண்மையாக பெறுமதியிடப்பட்டதோ அல்ல. இவ்விடயம் ஐந்தொகையில் ஏற்பாடுகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர்கள், தொடர்பான நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க, ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேமநிதியத்திற்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டுவரும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உதவு தொகைத் திட்டங்களாகும்.

16. கொடைகள்

கொடைகள் பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து கொடைகள் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்கு முறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக்கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சாதாரண பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொடர்பான சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, தொடர்பான சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானக்கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

17. ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச்செலவினையும் உள்ளடக்குகிறது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்றுசேரும் விடுப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

18. தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்துசெல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற்கொண்டு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகிறது.

19. வருமான வரி

திறைசேரி உண்டியல்கள், திறைசேரிமுறிகள் உட்பட எந்த வைப்புப்பணம் மீதான வருவாய் அல்லது வட்டி தவிர்ந்த வங்கியின் வருமானம், 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 8(அ)(xxii) இன் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின்படி அத்தகைய பங்கிலாபமோ அல்லது வட்டியோ 10 சதவீத பிடித்துவைத்தல் வரிக்கு உட்பட்டதாக இருக்கும்.

20. பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்பட்ட தொகை இந்த நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

21. வருமானம் மற்றும் செலவினங்கள்

வங்கிக்கு பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டுவரக்கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் உள்ளபோது வருமானமானது இனங்காணப்படுகின்றது. உறப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பாகவும் சொத்து, பொறி மற்றும் கருவியை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் உறப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும், செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

21.1. வட்டி

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்றுசேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்தான வருவாய்களையும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும்பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும்வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

21.2 பங்கிலாபங்கள்

பங்குடமையாளர்கள் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டவுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது.

21.3 பல்தரப்பட்டவை

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனை மீதான வருமானத்தன்மையின் தேறிய இலாபங்களும், இழப்புக்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கணக்கில் காட்டப்பட்டுள்ளன. மீளப்பெறுமதியிடப்பட்ட சொத்து, பொறி மற்றும் கருவியின் விற்பனவின் போதும் இச்சொத்து சார்பாக மீளப்பெறுமதியிடல் ஒதுக்கில் எஞ்சியிருக்கும் தொகை நேரடியாக திரண்ட இலாபத்திற்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

எதிர்பாராத நடவடிக்கைகள் மற்றும் முக்கிய வருமானத்தினை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

22. அறிக்கையிடுகின்ற வடிவம்

வங்கியானது நிதியியற் சொத்துக்களையும், நிதியியற் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும், செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு என்பவற்றின் கீழ் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

23. ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் உள்ளிட்ட எதிர்பாராத மற்றும் கடப்பாட்டு விடயங்கள்

ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடு என்பன ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் என இனங் காணப்பட்ட தொடர்பான தலைப்புக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளன.

24. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றுவதற்கு

அல்லது மேற்கொள்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது வழிமுறைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம், என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறைமுகவராண்மையாகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- நாணய மற்றும் செலாவணிவீத கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- நாணய வெளியீடு.
- நிதியியல் முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டினையும் வசதிப்படுத்தல்.
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்.
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தலும்.
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும், முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் பொருட்டு அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டு செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக (வெளிநாட்டு ஒதுக்குகள்) வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் வெளிநாட்டு ஒதுக்குகள் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, இசுடேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பன காணப்படுகின்றன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது அரச பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் தீர்ப்பனவு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக்காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிட மிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சல் களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்ததுடன் பெருமளவிற்கு தொடர்புடைய தாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற் பாடுகளூடாக மேற் கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பட்டியலொன்றைக் கொண்டிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் தேறிய மூலதனத்தின் முதலீட்டினையும் பிரதிபலிக்கின்றது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

வங்கி மேற்பார்வை

வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும் வலுவாற்றலையும் உறுதிப்படுத்தும் பொருட்டும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2004 இறுதியில் 36 உரிமம் பெற்ற வங்கிகள், அதாவது 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 14 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்பட்டன. 2004 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

(அ) முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வழங்குதல்

2004 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மூலதனப் போதுமை விகிதம், கொடுகடன் தரமிடல் வெளிக்கணக்காய்வாளர்கள், நியதி திரவச்சொத்துக்கள் விகிதம், வங்கிகளில் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் மீதான தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கைகள், தனியொரு கடன்படுநருக்கான வரையறை, அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களின் பகுப்பாய்வு, வங்கிகளினால் வழங்கப்பட்ட கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள், சேமிப்பு கணக்குகளிலிருந்து பணம் மீளப்பெறல், படுகடன் தீர்ப்பனவின் ஒரு பகுதியாக பிணையங்களை பற்றுக் காசாக்குவதன் மூலம் கையேற்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீடு ஆகிய துறைகளை உள்ளடக்கிய பல முன்மதியுயை ஒழுங்கு விதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியது.

(ஆ) வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள்

2004 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க கிளைகளைத் திறக்கவும் வேறோரிடத்தில் அமைப்பதற்குமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் விடப்பட்ட கோரிக்கைகளை தொடர்ந்து பரிசீலித்து ஒப்புதலளித்தது. இவ்வாண்டில் இது தொடர்பாக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் 22 புதிய கிளைகள், 50 கிளைகளை வேறிடங்களில் அமைத்தல், கொடுப்பனவு அலுவலகம், அடகுபிடித்தல் நிலையம், மாணவர் சேமிப்பு பிரிவு போன்ற 20 புதிய மற்றைய வங்கித்தொழில் நிலையங்கள், அத்தகைய ஏனைய வங்கித்தொழில் நிலையங்களில் 11 இனை வேறிடங்களில் அமைத்தல் மற்றும் 4 இனைத் தரமுயர்த்தல், 9 தன்னியக்க கூற்றுப் பொறிகளை தலத்திற்கு வெளியே அமைத்தல், மற்றும் ஒரு தன்னியக்ககூற்றுப் பொறியினை வேறிடத்தில் அமைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இதன்படி 2004 இறுதியில் 1,481 கிளைகள், 970 ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் மற்றும் 829 தன்னியக்கக்கூற்றுப் பொறிகள் என்பன தொழிற்பாட்டிலிருந்தன. 2005 இன் வரவுசெலவுத் திட்டத்தின் முன்மொழிவின் நியதிகளின்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக எஸ்.எம்.ஈ. வங்கி லிமிட்டெட் என அறியப்படும் சிறிய நடுத்தர தொழில்முயற்சி வங்கியினை ஏற்படுத்துவதற்கு நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் உரிமமும் வழங்கப்பட்டது.

(இ) உரிமம் பெற்ற வங்கிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறை

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவ்வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் கண்காணிக்கின்றது. திரட்டப்பட்ட தகவல்கள் தனிப்பட்ட வங்கிகளினதும் வங்கித்தொழில் முறை முழுவதினதும் இடர்நேர்வுகளுக்கு உட்படக்கூடிய தன்மைகளைக் கண்டறிவதற்காக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இது, வங்கிகளின் நிதியியல் நிலைமைகளின் மீது ஏற்படும் குறிப்பிடத்தக்கதும் முக்கியமானதுமான மாற்றங்களை இனங்கண்டு குறிப்பிட்ட வங்கிகளின் பாதிப்புக்குள்ளாகக்கூடிய தன்மை குறித்து முன்எச்சரிக்கையொன்றை வழங்குவதற்கு அல்லது மேலதிக புலனாய்வும் பரீட்சிப்பும் தேவைப்படுகின்ற துறைகளைக் கண்டறிவதற்கும் உதவுகின்றது. முழு நிதியியல் முறையினதும் உறுதிப்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் தற்போதைய தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை தரமுயர்த்தும் பொருட்டு, வங்கித்தொழில் துறை மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்

என்பனவற்றை உள்ளடக்கி அவற்றின் தொழிற்பாடுகளை முழுமையாக கண்காணிப்பதற்காக மத்திய வங்கியில் உடனடி மத்திய தரவுத் தளமொன்றினைக் கொண்ட புதிய முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு 2004 இல் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது. 2004 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் தலத்திற்கு வெளியேயான வங்கியின் கண்காணிப்புடன் தொடர்பான தரவுத்தளம் பரீட்சிப்புக் கட்டத்தில் இருந்தது.

(ஈ) உரிமம் பெற்ற வங்கிகளின் நியதித் தல பரீட்சிப்புக்கள்

நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் நாணயச்சபையினால் நிர்ணயிக்கப்படும், தற்பொழுது இரண்டாண்டுகளாகவுள்ள ஒவ்வொரு பரீட்சிப்புக் காலப்பகுதியிலும் ஒரு முறையாவது நியதிச் சட்ட பரீட்சிப்புக்களுக்கு உட்பட வேண்டும். உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மீதான தலப்பரீட்சிப்புகள் வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கி மேற் பார்வைத் திணைக்களம் தற்பொழுது முழுமையாக புதிய அணுகுமுறையொன்றினை பின்பற்றி வருகிறது. இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்பு செயன்முறையானது இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதிலும், இவ்விடர்நேர்வுகளை முகாமைப் படுத்துவதிலும், இவ்விடர்நேர்வுகளை தணிப்பதற் கேற்ற விதத்தில் மூலவளப்போதுமையை மதிப்பிடுவதிலும் கவனம் செலுத்தியது. 2004 இல், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 31 நியதிப் பரீட்சிப்புக்களை மேற் கொண்டது. இது 2004 இல் தொடங்கி 20 பரீட்சிப்புக்களையும் 2003 இல் தொடங்கிய பூர்த்தி செய்யப்பட்ட 11 பரீட்சிப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. 2004 இல் தொடங்கிய 20 வங்கிகளில் 10 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 10 பரீட்சிப்புக்கள் நிறைவடையும் நிலையிலுள்ளன. இதன்படி வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2004 இல் 21 பரீட்சிப்புக்களை பூர்த்தி செய்துள்ளது.

(உ) வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை இடைநிறுத்தல்

2002 ஒத்தோபரில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரம் இடை நிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து நாணயச்சபை பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வங்கித்தொழில் உரிமத்தினை இரத்துச் செய்யத் தீர்மானித்ததுடன் நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி பிரமுக சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு கட்டளையிட்டது. இத்தீர்மானம் 2002 திசெம்பர் 18ஆம் நாளன்று பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கிக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் நாணயச்சபையின் தீர்மானத்தினை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வைப்பாளர்கள் குழுக்களினாலும் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவத்தினாலும் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்களைத் தொடர்ந்து சட்டத்தின் நியதிகளுக்கிணங்க பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை மீளத் தொடங்குவதற்கான சாத்தியங்களை மத்திய வங்கி மேலும் பரிசீலனைக்கெடுத்தது. இது தொடர்பாக, பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியினை மீளமைப்பதற்கும் வியாபாரத்தினை மீண்டும் தொடங்குவதற்கும் பல தரப்பினரும் ஆர்வத்தினை வெளிப்படுத்தினர்.

இது தொடர்பாக, முன்மொழிவுகளை/ கருத்துக்களடங்கிய பத்திரங்களை சமர்ப்பித்த தரப்பினருடன் மத்திய வங்கி கலந்துரையாடல்களை நடத்தியது. எர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனம் இந்நோக்கத்திற்காக மத்திய வங்கியின் ஆலோசனையாளராக நியமிக்கப்பட்டது. நாணயச்சபை ஏசியா கப்பிட்டல் லிமிட்டெட்டினை தலைமையாகக் கொண்ட முதலீட்டாளர் குழுமத்தினால் வழங்கப்பட்ட முன்மொழிவுகளைப் பரிசீலனைக்கெடுத்தது. கரிசனைக்குரிய சில விடயங்களும் அத்துடன் சில முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவது பல முன்நிபந்தனைகளுடன் தொடர்புபட்டதாகவும் காணப்பட்டபோதும் முன்மொழிவின் சாத்தியத்தன்மை பற்றி முற்றுமுழுதாக நிராகரிக்க முடியாது என்பது நாணயச்சபையின் கருத்தாக இருந்தது. இத்தீர்மானத் திற்கு வருகையில், வங்கியை ஒடுக்குவதன் மூலம் இறுதியில் வைப்பாளர்கள் மூலதன வைப்புக்களில் நியாயமானளவு தொகையினை பெறக்கூடியவர்களாக இருந்தபோதும், பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் பணச்சந்தை உண்டியல்களில் நிதிகளை முதலீடு செய்துள்ளவர்கள் போன்ற மற்றைய கடனீந்தோர் வங்கி ஒடுக்கலின்போது வைப்பாளர்களாகக் கருதப்பட மாட்டார்களாகையால் ஒடுக்கலின்போது அவர்கள் எந்த ஒரு கொடுப்பன விற்கும் உரித்துடையவராகார் என்ற உண்மையினையும் நாணயச்சபை உணர்ந்து கொண்டிருந்தது. பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி வியாபாரத்தினைத் தொடர்ந்தும் மேற்கொள்வதனை இயலச்செய்யும் விதத்தில் அதனை மீளமைக்கும் பொறுப்பினை குழுமம் பொறுப்பேற்றுக் கொள்வதா என்ற இறுதித்

தீர்மானத்தினை எடுப்பதற்கான நுணுக்கமான விடயங்களை மேற்கொண்டிருந்த வேளையில், குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 30 (3) இன் நியதிகளுக்கிணங்க 2004 சனவரி 22 ஆம் நாளிலிருந்து வரையறுக்கப்பட்டளவிலான வியாபாரத்தினைத் தொடங்க பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினை அனுமதிப்பதென நாணயச்சபை தீர்மானித்தது.

மத்திய வங்கி, குழுமத்துடன் பல கலந்துரையாடல்களையும் கடிதத் தொடர்புகளையும் மேற்கொண்டிருந்ததுடன் முன்மொழிவினைத் தொடர்வதற்கு அவசியமான நிதியியல் தகவல்களையும் வழங்கியது. இச்செயற்பாட்டின்போது குழுமம் 2003 திசெம்பர் 24 ஆம் நாள் சமர்ப்பித்த அதன் ஆரம்ப முன்மொழிவிற்குப் பின்னர் அதன் முன்மொழிவுகளை மூன்று தடவைகள் திருத்தியது. நாணயச்சபை குழுமத்தினால் முன்மொழியப்பட்ட வைப்புக்களின் தீர்ப்பனவுத் தகைமைகளுக்கு எதிராக ஒடுக்கிவிடுவதற்கான சாத்தியம் பற்றி சுதந்திரமான கருத்தொன்றினை எனர்ஸ்ட் அன்ட் யங்கிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைப் பணித்தது. இதன்படி வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பொறுத்த வரையில் ஒடுக்கிவிடுதல் சிறந்த தீர்வாக இருக்குமென்பது ஆலோசனையாளர்களின் கருத்தாக இருந்தது. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட சுதந்திரமான மதிப்பீடொன்றும் குழுமத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளிலும் பார்க்க ஒடுக்கிவிடுவதன் வாயிலாகவே வைப்பாளர்கள் சிறந்த பலனைப் பெறமுடியும் என்பதனை எடுத்துக்காட்டின. பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் சொத்துக்களினது அவதானமான பெறுமதியிடலின் அடிப்படையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி 10 ஆண்டு காலப்பகுதியில் குழுமத்தினால் மீளச்செலுத்தப்படவுள்ள 63 சதவீதத்துடன் உடன் ஒப்பிடுகையில் ஒடுக்கிவிடுதலின் மூலம் வைப்பாளர்களின் 70 சதவீத மான மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். மேலும், உத்தேச வைப்புக்கள் மற்றும் கொடுகடன்களின் மீள் கொடுப்பனவு தொடர்பாக பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வைப்பாளர்கள் மற்றும் கடன் வழங்கியோரின் சம்மதத்தினை பெற்றுக் கொள்ளுமாறு குழுமத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. எனினும் வைப்புக்கள் மற்றும் படுகடன்களின் 31 சதவீதமான வற்றிற்கான சம்மதத்தினை குழுமத்தினால் பெற முடியவில்லை.

மற்றைய அம்சங்களுடன் மேற்குறிப்பிட்ட விடயங்களையும் கவனத்திற்கொண்ட நாணயச்சபை வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 எம் (1) இன் நியதிகளின்படி பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை 2004 ஓகத்து 3 ஆம் நாளன்று இடைநிறுத்துவதற்கு நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 30 (3) இன் கீழ் பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியினை மூடிவிடுவதற்கு உரிய நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யுமாறும், நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 30 (10) (ஆ) இன் நியதிகளில் பிரமுக சேமிப்பு வங்கியின் வங்கித்தொழில் உரிமத்தினை இரத்துச் செய்யுமாறும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரை பணிப்பதற்கு தீர்மானித்தது. இதன்படி பிரமுக சேமிப்பு வங்கியினை மூடிவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 168/சி.ஓ. என்ற இலக்கத்தினைக் கொண்ட வழக்கினைத் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் தாக்கல் செய்தார். ஒடுக்கிவிடும் நடவடிக்கைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரமுக சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் பிரமுக சேமிப்பு வங்கியினை ஒடுக்கி அதன் உரிமத்தினை இரத்துச் செய்வதென்ற நாணயச்சபையின் தீர்மானத்தினை நீக்கிவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 1955/ 2004 என்ற இலக்கம் கொண்ட வழக்கினைத் தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விசாரணையும் இறுதித் தீர்மானமும் எடுக்கப்படும்வரை மூடிவிடும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை வழங்கியது. இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் மேற்குறிப்பிட்ட தீர்மானம் பற்றி பொதுமக்களுக்கு அச்சு மற்றும் மின் ஊடகங்களூடாக தொடர்பான விபரங்களை அறிவித்தது.

(ஊ) வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நிருவகித்தல்

1987 இல் தொடங்கிய சுயவிருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. இத்திட்டம், மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களுக்கும், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்புடையதாகும். தற்பொழுது மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே அவற்றின் கிராமிய வங்கிகளினது வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பாக இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி வசதியைப் பெற்றுக் கொண்டுள்ளன. 2004 திசெம்பர் 31 ஆம் நாளன்று வைப்புக் காப்புறுதி நிதியம் சேகரிக்கப்பட்ட கட்டணங்களையும் 1997 இல் மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் உள்ளடக்கி ரூ.171 மில்லியன்களாகக் காணப்பட்டது. இந்நிதிகள் திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் முதலீடு

செய்யப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூ.193 மில்லியன்களுக்கு அதிகரித்துள்ளது. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான கொள்கைப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளதுடன் முன்மொழிவுகள் பற்றிய கலந்துரையாடல்களையும் நடத்தியது. இக்காப்புறுதித் திட்டம் தற்போதைய சுயவிருப்புத் திட்டத்தினை பதிலீடு செய்யும் மேலதிக கலந்துரையாடல்களுக்காக இம்முன்மொழிவுகள் பொருளாதார அபிவிருத்திக்கான தேசியசபையின் நிதியியல் துறை கொத்தணிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(எ) வங்கித்தொழில் துறையுடனான கூட்டங்கள்

2004 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பின்வரும் கூட்டங்களை ஒழுங்கு செய்தது.

(I) வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் மாதாந்தக் கூட்டம்

இக்கூட்டங்கள்: வங்கித்தொழில் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்ககான ஒரு அரங்கமாக விளங்குவதுடன் இது மத்திய வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்குமிடையில் நெருங்கிய உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் உதவுகின்றது. வங்கிகளிலிருந்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்குகின்ற தடைகள், வலையமைப்புச் சந்தைப்படுத்தல் பிரமிட்டுக்களுக்காக பன்னாட்டுக் கொடுகடன் அட்டைகளை அங்கீகாரமின்றி பயன்படுத்தல் மற்றும் "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" விதியினைப் பின்பற்றுதல், வர்த்தக வங்கித் தொழில் துறையின் உயர்ந்த இடையீட்டுச் செலவு மற்றும் வட்டி வேறுபாடுகளைக் குறைக்க வங்கிகள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை, கொடுகடன் தரமிடலைப் பெறல் மற்றும் பாசல் II மூலதன உடன் படிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவு என்பன கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களில் சிலவாகும். மேலும் மிகக் கூடுதலான தகவல்களைக் கொண்ட வியாபார தீர்மானங்களை எடுப்பதற்கு பயனுள்ள தகவல்களை வழங்கும் நோக்குடன் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு நாட்டின் பொருளாதாரம் மற்றும் நாணய அபிவிருத்திகள் தொடர்பாக கிரமமாகத் தெரிவிக்கப்பட்டது.

(II) நிதியியல் முறை உறுதிப்பாடு மற்றும் சீர்திருத்தங்கள் மீதான இரு குழுக்களின் கூட்டங்கள்

(1) நிதியியல் துறை சீர்திருத்தங்கள்: நிதித்துறை சீர்திருத்தங்களை ஆரம்பித்து, ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2002 மார்ச்சில் மத்திய வங்கியினால் நிறுவப்பட்ட நிதியியல் துறை சீர்திருத்தக்குழு 2004 யூனில் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் நிதியியல் துறைக் கொத்தணி அமைக்கப்படும் வரையில் 2004 இல் 10 கூட்டங்களை நடத்தியுள்ளது. நிதியியல் துறைக் கொத்தணியின் இரு முக்கிய குறிக்கோள்களாக நிதியியல் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் உள்ளூர் தொழில்முயற்சியாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கிராமியத்துறை என்பன நிதி வசதிகளைப் பெறும் தன்மையினை அதிகரித்தல் என்பன விளங்கின. 11 உறுப்பினர்களைக் கொண்டுள்ள நிதியியல் துறைக் கொத்தணிக்கு மத்திய வங்கியின் துணை ஆளுநரும் திறைசேரியின் துணைச் செயலாளரும் இணைத் தலைவர்களாக இருப்பர். மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்களும் நிதியியல் சீர்திருத்த செயற்பாட்டில் தொடர்புபட்டுள்ள தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அவசியமானவிடத்து கூட்டங்களில் கலந்து கொள்ள அழைக்கப்படுவர். நிதியியல் துறைக் கொத்தணி 2004 யூனில் அது தொடங்கப்பட்டதிலிருந்து 8 கூட்டங்களை நடத்தியுள்ளது.

(2) நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு: இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு 2004 இல் 11 கூட்டங்களை நடத்தியது. நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவின் பொறுப்பு யாதெனில் நாட்டின் முக்கிய நிதியியல் முறைமையினை உறுதிப்பாட்டின்மைக்கு இட்டுச்செல்லக்கூடிய இடர்நேர்வுகளையும் பாதிப்பிற்குள்ளாக்கக்கூடிய தன்மைகளையும் மதிப்பிடுவதும், மத்திய வங்கியின் நியதிக் குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கு கொள்கைகளை விதந்துரைப்பதுமேயாகும். 2004 இறுதியில் நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு திணைக்களத் தலைவர்களாகவுள்ள 13 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன், இவர்களின் தொழிற்பாடுகள் நிதியியல் முறை உறுதிப்பாட்டின் மீது நேரடி தாக்கத்தினை செய்திருந்தன. 2004 ஆம் ஆண்டுப் பகுதியில், நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு காலக்கிரமத்தில் வெளியிடப்படவுள்ள முதலாவது நிதியியல் துறை சீர்திருத்தங்களை மீளாய்வு செய்வதில், நிதியியல் முறை தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் பொருட்டு துண்டுப் பிரசுர தொடர்களைத் தயாரித்தல், நிதியியல் பாதுகாப்புவலைக் கருவியாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்ட முன்மொழிவினை வடிவமைத்தல், வங்கிகள் மற்றும் நிதியியல் கம்பனிகளின் உடனடித் தகவல்களைக் கண்காணிப்பதற்காக மத்திய தரவுத் தளத்திற்கான செய்முறைகளை நடைமுறைப்படுத்தல்

மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு மிக இன்றியமையாததான கொடுப்பனவு முறையினை மேற்பார்வையிடுவதற்கான பொறிமுறையினை மேம்படுத்தல் என்பனவற்றில் ஈடுபட்டிருந்தது.

(ஏ) நிதியியல் நிறுவனங்கள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு

நிதியியல் முறை தொடர்பாகப் பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் 2004 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மூன்று வெளியீடுகளை வெளியிட்டது.

(i) "வங்கிகளின் வட்டி வீதங்கள் மற்றும் கட்டணங்களுக்கானதொரு வழிகாட்டி" என்பது தொடர்பாக ஒரு பக்க வங்கி விளம்பரமொன்று 2004 மே இறுதி வாரத்தில் அனைத்து முக்கிய செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது.

(ii) "பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள்" என்ற தலைப்பிலான அரைப்பக்க விளம்பரமொன்று 2004 செத்தெம்பர் இறுதி வாரத்தில் அனைத்து முக்கிய செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது.

(iii) "இலங்கையில் நிதியியல் பணிகளுக்கானதொரு வழிகாட்டி" என்ற நூலின் திருத்தப்பட்ட பதிப்பு 2004 திசெம்பரில் வெளியிடப்பட்டது.

நாணய வெளியீடு

இலங்கையில் நாணயத்தினை வெளியிடும் அதிகாரம் கொண்ட தனியொரு நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2004ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்துவதற்காக சட்டரீதியான நாணயத்தை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2004ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் அளவு 2003 இன் இறுதியில் காணப்பட்ட ரூ.99 பில்லியனுக்கு எதிராக ரூ.116 பில்லியனாகக் காணப்பட்டது. இது, நாட்டின் நாணயச் சுற்றோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த அளவாகும். சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 97 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன. முன்னைய ஆண்டின் ரூ.264 மில்லியன் மொத்தப் பெறுமானம் கொண்ட 103 மில்லியன் குத்திகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகளின் எண்ணிக்கை 112 மில்லியன் குத்திகளாகவும் அதன் மொத்தப் பெறுமதி ரூ.272 மில்லியனாகவும் காணப்பட்டது. 2000 – 2004 காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குத்திகளின் அளவும் பெறுமதியும் அட்டவணை II-3 இல் தரப்பட்டுள்ளன.

போலி நாணயத் தாள்களை கண்டுபிடித்தல்

போலி நாணயத் தாள்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை மிகவும் குறைப்பதற்குமாக திணைக்களம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள்கள் பணியகத்தின் மிக நெருக்கமான ஒத்துழைப்புடன் பணியாற்றியது. நாணய விதிச்சட்டத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு மத்திய வங்கியின் உறுதிப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போலி நாணயத்தாள்களின் எண்ணிக்கையானது 2003 இன் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 1.75 தாள்கள் என்ற அளவிலிருந்து 2004 இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 4.46 தாள்கள் என்ற அளவுக்கு அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் இரண்டு நாணய சரிபார்ப்பு கணக்கிடல் மற்றும் பிரித்தலை மேற்கொள்ளும் பொறிகள் 124 மில்லியன் கொண்ட பாவிக்கக்கூடிய மற்றும் பாவிக்க முடியாத நாணயத் தாள்களை செய்முறைப்படுத்தின.

அட்டவணை II-3
வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குத்திகளின் அளவும் பெறுமதியும் 2000– 2004

ஆண்டு	அளவு (குத்திகளின் எண்ணிக்கை ஆயிரத்தில்)										மொத்தப் பெறுமதி
	ரூபா.10	ரூபா.5	ரூபா.2	ரூபா.1	50 சதம்	25 சதம்	10 சதம்	5 சதம்	2 சதம்	1 சதம்	மொ.அளவு	(ரூ.000)
2000	10,693	15,413	16,186	4,876	6,936	4,320	1,955	1,287	75	430	62,171	226,057
2001	6,136	20,726	22,668	19,328	4,286	5,996	2,380	399	60	205	82,184	233,557
2002	10,965	16,820	19,968	11,991	8,466	5,752	1,770	396	185	425	76,738	251,553
2003	5,735	23,512	27,187	29,160	8,276	5,964	2,905	294	195	220	103,448	264,384
2004	5,670	24,677	25,218	34,093	9,220	9,184	2,785	549	105	80	111,581	271,829

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் விற்பனை

இத்திணைக்களம் நாணய அறிவியலாளர்களுக்கும் சேகரிப்பவர்களுக்கும் ஞாபகார்த்த நாணயக் குத்திகளைத் தொடர்ந்தும் விற்பனை செய்தது. தங்கம் மற்றும் வெள்ளியிலான ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் விற்பனை விலைகள் 2004 ஒத்தோபரிலிருந்து தங்கம் மற்றும் வெள்ளியின் நாளாந்த சந்தை விலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. தங்கம் மற்றும் வெள்ளியிலான ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் விற்பனை விலைகள் தினசரி நாணயத் திணைக்களத்தின் பணம் கொடுக்கும் மேடைப்பகுதியில் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் மத்திய வங்கி இணையத் தளத்திலும் வெளியிடப்படுகின்றது. மத்திய வங்கியில் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஏனைய ஞாபகார்த்த நாணயத் தாள்களும் குத்திகளும் அவற்றின் விற்பனை விலைகளுடன் அட்டவணை II-4 இல் தரப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டுக் காலத்தில் நாணயம் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.27.3 மில்லியன் பெறுமானங் கொண்ட 5.2 மில்லியன் நாணயக் குத்திகள் மத வழிபாட்டு இடங்களிலிருந்து இத்திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டன.

பயிற்சியளித்தலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும்

போலி நாணயத் தாள்களை இனம் காணல் மற்றும் சுத்தமான நாணயத்தாள் கொள்கை என்பன தொடர்பாக வங்கி அலுவலர்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகள், பொதுமக்கள் ஆகியோருக்கு அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொது விரிவுரைகள் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்கள் என்பவற்றினூடாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நாணயத் திணைக்களம் நடாத்தியது. நாணயத் திணைக்களம் நாணயத்தினை பழுதாக்காமலும், சிதைக்காமலும் உரிய முறையில் பயன்படுத்தல், போலி நாணயத்தாள்களை இனம் காணுதல், நாணயக் குத்திகளை உண்டியல்களிலும் சேகரிப்புப் பெட்டிகளிலும் வைத்திருத்தலினால் ஏற்படும் பாதகமான தாக்கங்கள், என்பவை பற்றிய விழிப்புணர்வை 15 – 19 வயதுத் தொகுதி பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாக்குவதற்காக சிங்கள மொழி மூலம் பேச்சு போட்டியொன்றை நடாத்தியது.

ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களமானது "உங்கள் சொந்த வங்கி நாணயத் தாள்கள் பற்றி தெரிந்து கொள்ளுங்கள் எவ்வகை பாதுகாப்பு அம்சங்களை கவனிப்பது மற்றும் போலி நாணயத்தினை எவ்வாறு அடையாளம் காணலாம்" என்ற விடயங்களில், வங்கி நாணயத் தாள்கள் மீதான விழிப்புணர்வினையும் அறிவுத் தன்மையினையும் உருவாக்கும் முகமாக 2004 யூனில் இரண்டு ஆய்வரங்குகளை ஒழுங்குபடுத்தியது. இவ் ஆய்வரங்குகள் மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் ஐக்கிய இராச்சியத்திலுள்ள டி–லா–றூ நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. முதலாவது ஆய்வரங்கு வர்த்தக வங்கிகளுக்கும், சட்ட நடைமுறைப்படுத்தல் அலுவலர் களுக்குமாக நடாத்தப்பட்டதுடன் இது அநுராதபுரம் பிரதேச அலுவலகத்தில் இடம் பெற்ற வேளையில், இரண்டாவது ஆய்வரங்கு மத்திய வங்கியிலும் வர்த்தக வங்கிகளிலும் நாணய தொழிற்பாடுகளை கையாளுகின்ற அலுவலர்களுக்காக மத்திய வங்கி தலைமை அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

2004 ஒத்தோபரில் ஐக்கிய இராச்சியத்திலுள்ள றோயல் மின்ட் ஆதரவுடன் 'இலங்கைக்காக மீள குத்திகை வார்த்தல்' என்ற விடயத்தின் மீதான இரண்டு ஆய்வரங்குகள் வர்த்தக வங்கிகள் மற்றும் மத்திய வங்கி அலுவலர்களுக்காக வங்கித் தலைமையகத்திலும் மற்றையது வர்த்தக வங்கி அலுவலர்களுக்காக கண்டியிலும் நடாத்தப்பட்டது.

அட்டவணை II-4
விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணயக் குத்திகளும் தாள்களும்

எண்.	விபரணம்	வழங்கப் பட்ட ஆண்டு	முகப்புப் பெறுமதி (ரூபா)	உலோகம்	விற்பனை விலை (ரூபா)
1.	சனாதிபதி ஆர். பிரேமதாசவின் மூன்றாவது ஆண்டுநிறைவு (உறை)	1992	1	செப்பும் நிக்கலும்	250
2.	ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு (உறை)	1995	5	நிக்கல் செம்பு	200
3.	இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு)	1998	200	பொலிமர்	400
4.	இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி)	1999	1	நிக்கல் முலாமிடப்பட் உருக்கு	400
5.	இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி)	2000	1	செம்பும் நிக்கலும்	500
6.	இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி)	2000	1	நிக்கல் முலாமிடப்பட் உருக்கு	200
7.	சியாமோபாலி மகா நிக்காய (தாள் மடிப்பு)	2003	ரூபா 5x10	செம்பும் நிக்கலும்	100

திணைக்களத்திலுள்ள அலுவலர்களின் தொழில்சார் தகுதியினை உயர்த்துவதன் பொருட்டு பயிற்சிக்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. இதன்படி 4 உயர்பதவி அலுவலர்களும், 36 உயர் பதவியல்லா அலுவலர்களும் மத்திய வங்கியின் வங்கித் தொழில் ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட வேளையில் 2 உயர்பதவி அலுவலர்களும் 2 உயர் பதவியல்லா அலுவலர்களும் வெளிநாட்டுப் பயிற்சியினைப் பெற்றனர்.

கண்காட்சிகளில் பங்குபற்றுதல்

திணைக்களமானது பின்வரும் கண்காட்சிகளில் பங்கு பற்றியது.

1. 2004 செத்தெம்பர் 20ஆம் நாளிலிருந்து 26ஆம் நாள்வரை கொழும்பில் இடம்பெற்ற கலாச்சார மற்றும் தேசிய பாரம்பரிய அமைச்சினால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட தேசிய கலை விழா
2. 2004 ஒத்தோபர் 19 - 21 வரை களனிப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் திணைக் களத்தினால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட கண்காட்சி

இவ்விரு கண்காட்சிகளிலும் மத்திய வங்கியின் கண்காட்சி நிலையமானது பள்ளிக்கூட மாணவர்களினதும், பொது மக்களினதும் மிகுந்த ஆதர வினைப் பெற்றிருந்தது. வங்கியின் நாணய தொல் பொருட் காட்சிச்சாலைக்கு இவ்வாண்டில் கிட்டத்தட்ட 7000 வரையிலான மாணவர்களும் பொதுமக்களும் வருகை தந்தனர்.

உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் வங்கியின் நாணயக் கொள்கையினை நடை முறைப்படுத்துவது, மற்றும் வர்த்தக வங்கிகளுக்கும் அர சாங்கத்திற்கும் வங்கியாளராகத் தொழிற்படுவது ஆகிய இரு தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் "லங்கா செட்டில்" என்ற குறியீட்டுப் பெயரால் அழைக்கப்படும் நாட்டின் மின்னியல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் சுமுகமான தொழிற் பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை வழங்குகின்ற துணைப்பணியினையும் மேற்கொள்கின்றது.

1. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

(i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

2003 இல் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் இவ்வாண்டில் மேற் கொள்ளப்பட்டன.[1] இம்முறைமையின் கீழ் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் (அ) ஒன்றில் மிகையான திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கு அல்லது திரவத் தன்மையில் பற்றாக்குறை காணப்படுமாயின் திரவத் தன்மையினை உள்புகுத்துவதற்கான நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகளுக்காக நாளாந்த அடிப்படையில் நாளாந்த ஏலங்களை நடத்துதல். (ஆ) துணைநில் வசதிகளின் கீழ் மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளுக்கான ஏற்பாடுகள் (இ) நீண்டகால அடிப்படையில் திரவத் தன்மையினை ஈர்ப்பதனை அல்லது அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் தற்றுணிபின்படியான திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள் அல்லது திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுகள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளில்) மற்றும் திறை சேரி முறிகளின் (இரண்டாந்தர சந்தையில் மட்டும்) கொள்வனவுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. திறைசேரி உண்டியல்கள் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையாகப் பயன்படுத்தப்பட்ட வேளையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் என்பன நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்லுக்காக பயன்படுத்தப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் அனைத்து வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தொடர்ந்தும் பங்கேற்கும் நிறுவனங்களாக விளங்கின.

2004 பெப்புருவரியில் அரச பத்திரங்கள் தொடர்பாக பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையின் நடைமுறைப்படுத்தலுடன் பின்னரங்க அலுவலகம் மற்றும் லங்கா செட்டில் என்பனவற்றுடன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் முன்னரங்க அலுவலகம் எதிரெதிர் கணனிகளுடன் இணைக்கப்படும் தன்மை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பத்திரங் களற்ற அரச பிணையங்களில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் தன்னியக்கப்படுத்தப்பட்டு மேற் கொள்ளப்பட்டன. இது தொழிற்பாடுகளின் வினைத் திற னை மேம்படுத்தியிருக்கும் வேளையில், பத்திரவடிவில் பிணையங்களை வணிகம் செய்வதுடன் இணைந்து

1. விபரங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2002இன் சிறப்புக் குறிப்பு 20 இனை பார்க்கவும்.

காணப்படும் இடர்நேர்வுகளையும் ஒழிக்கிறது. மேலும் 2004 யூலையில் அறிமுகப்படுத்தப்பட்ட "பணச்சந்தைத் தொழிற்பாடுகளுக்கான உடனடி மின்னியல் அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்புமுறை" யானது உடனடியாகக் கண்காணிப்புக்களை மத்திய வங்கி மேற்கொள்ளவும் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தைகளின் கொடுக்கல் வாங்கல்களையும் அவசியமானவிடத்து வட்டி வீதங்களில் உறுதிப் பாட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதனையும் இயலச் செய்தது.

பங்கேற்கும் நிறுவனங்களுக்கான நிலையியல் வசதிகள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவு வீதங்களில், வழங்கப்படுவதுடன் இவை 2004 நவெம்பர் 12ஆம் நாளன்று 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.5 சதவீதத்திற்கும் 9.0 சதவீதத்திற்கும் மேல் நோக்கித் திருத்தப்படும்வரை 7 சதவீதத்திலும் 8.5 சதவீதத்திலும் மாற்றமின்றிக் காணப்பட்டன.

(அ) மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

ஏலமிடும் முறை

இவ்வாண்டில், சராசரியாக நாளொன்றிற்கு ரூ.6.6 பில்லியன் கொண்ட மிகையான திரவத் தன்மை காணப்பட்டது. ஆகவே, திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு வேலைநாளும் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏலங்கள் நடத்தப்பட்டன. சராசரியாக நாளொன்றுக்கு ரூ.5 பில்லியன் ஏலங்களில் வழங்கப்பட்டதுடன் விலைக் கோரல்கள் ஏலமிடப்பட்ட முழுத்தொகைக்கும் பெறப் பட்டன. எனினும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் நாணய விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் தேவையினைத் தோற்றுவித்தமையினால் ஆண்டின் பெரும்பாலான பின்னரைப்பகுதியில் ஏறத்தாழ மதிப் பிடப்பட்ட மொத்த மிகைத் திரவத்தன்மையும் ஏலங்களுக்கு வழங்கப்பட்டன. இதன் விளைவாக, 2004 சனவரி – மே காலப்பகுதியில் 7.02 –7.05 சதவீத குறுகிய வீச்சில் காணப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி ஏல வீதம் 2004 நவெம்பர் 10ஆம் நாளவில் 7.41 சதவீதத் திற்கு படிப்படியாக அதிகரித்தது. 2004 நவெம்பர் 12ஆம் நாளன்று மத்திய வங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளினால் மேல் நோக்கித் திருத்தப்பட்டமையின் காரணமாக ஏல வீதங்கள் 7.86 சதவீதத்தற்கு அதிகரித்தன. 2004 நவெம்பர் 12 – 2004 திசெம்பர் 24 காலப்பகுதியில் ஏல வீதங்கள் சராசரியாக ஏறத்தாழ 7.88 சதவீதமாகக் காணப்பட்டன. ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் சுனாமி அனர்த்தத்தின் காரணமாக ஏற்பட்ட இடர்ப்பாடுகளின்கீழ், பணச்சந்தை மற்றும் கொடுப்பனவு தீர்ப்பனவு முறைகளின் சுமுகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் ஏலங்களினூடாக ஈர்த்துக் கொள்ளப்பட்ட தொகை கணிசமாகக் குறைக்கப்பட்டது.

வரைபடம் II - 1
திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீள்கொள்வனவு ஏலங்கள் - 2004
மாதாந்த சராசரிகள்



துணைநில் வசதிகள்

ஏலங்களில் தமது தேவைப்பாடுகளைப் ஈடுசெய்து கொள்ள இயலாமல் போன பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியின் மீள் கொள்வனவு வீதத்தில் துணைநில் வசதிகளை நாடின. இதன்படி, துணை நில் வசதிகளின்கீழ் நாளொன்றுக்கான மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் ரூ.2.3 பில்லியனாகக் காணப்பட்டன. இத்தொகை நாளொன்றில் ஈர்த்துக் கொள்ளப்படும் மொத்தத் திரவத் தன்மையில் சராசரியாக 34 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும் மிகையான திரவத்தன்மையில் பெருமளவு நாளாந்த ஏலங்களினூடாக ஈர்த்துக் கொள்ளப்படுவதனால் துணைநில் வசதிகளூடாக ஈர்த்துக் கொள்ளப்படும் சார்புரீதியான முக்கியத்துவம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் ஏறத்தாழ 15 சதவீதத்திற்கு குறை வடைந்தது.

வரைபடம் II - 2
மாதாந்த மீள்கொள்வனவு அளவுகள்
(2003 மற்றும் 2004)



மொத்த அளவு

ஏலமுறை மற்றும் துணை நில் வசதிகள் இரண்டின் கீழுமான மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் (ஓரிரவிற்குச் சமமானது) மொத்தப் பெறுமதி 2003 இன் ரூ.4,331 பில்லியனிலிருந்து 2004 இல் ரூ.2,512 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2004 இல் இக் கொடுக்கல் வாங்கல்களில் பெரும்பாலும் முழுவதும் பங்கேற்கும் நிறுவனங்களினுடையனவாகக் காணப்பட்ட விடத்து 2003 இல் மத்திய வங்கியின் உள்ளக ரீதியாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் இக் கொடுக்கல் வாங்கல்களில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறின. 2004 சனவரி 30ஆம் நாள் தொடக்கம் உள்ளக ரீதியாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் அவற்றின் முதலீட்டினை வர்த்தக வங்கிகளூடாகவும் முதனிலை வணிகர்களூடாகவும் மேற்கொண்டன.

(ஆ)நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

2004 இல் சந்தை திரவத் தன்மை கொண்டதாக விளங்கியமையினால் நாளாந்த அடிப்படையில் ஏலங்களூடாக திரவத்தன்மையினைப் புகுத்த வேண்டிய தேவை காணப்படவில்லை. சந்தையில் மிகையான திரவத்தன்மை காணப்பட்டபோதும், பல நாட்கள், ஒரு சில பங்கேற்பாளர்கள் துணைநில் வசதிகளின்கீழ் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களினூடாக கடன்பாட்டினை நாடியமைக்கு வங்கிகள் மற்றைய வங்கிகளுக்கான அவற்றின் கடன்வழங்கலின் மீது சுயமான வரையறைகளை விதித்தமையே முக்கிய காரணமாகும். எனினும் இக்கடன்பாடுகள் மிகச் சிறியளவானதாக இருந்ததனால், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டில் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவனவாக இருக்கவில்லை.

(இ)அரச பிணையங்களின் உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்

2004 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகையான திரவத்தன்மை மிக உயர்வாக ஏறத்தாழ ரூ.19 பில்லியனாகக் காணப்பட்டமையினால் நீண்டகால அடிப்படையில் மிகையான திரவத் தன்மையினைக் குறைப் பதற்காக மத்திய வங்கியின் உடமைகளிலிருந்து உடனடி அடிப்படையில் திறைசேரி உண்டியல்களை விற்பதற்கு ஏலங்களும் அதேபோன்று நேரடி விற்பனைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2004 சனவரியில் ஏலங்களூடாகவும் நேரடி விற்பனைகளூடாகவும் விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்களினது மொத்தப் பெறுமதி ரூ.2.3 பில்லியனாகக் காணப்பட்டது. மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமை மற்றும் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை என்பன வற்றின் காரணமாக மிகையான திரவத்தன்மை வீழ்ச்சியடைந்தமையினால் மேலும் விற்பனைகள் தேவைப்படவில்லை.

(ii) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

திணைக்களம் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தியது. இது இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களில் 10 சதவீதத்தில் காணப்படுகிறது.

(iii) வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களின் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது (வங்கிவீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும், எந்தவொரு வங்கியும் வங்கி வீதத்தில் கடன்பெறுவதற்கு மத்திய வங்கியினை நாடாதினால் இவ்வீதம் தொழிற்படாமல் இருக்கின்றது.

2. வர்த்தக வங்கிகளுக்கும் அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

(i) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கிகளுக் கிடையிலான கொடுக்கல் வாங்கல் மற்றும் தீர்ப்பனவு முறை வினைத்திறனுடன் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் வழங்குகின்றது. இக் கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைக்கு அமைவாக அதேநேர மொத்த தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற் படுத்தப்பட்டன.

(ii) அரச கணக்குகள்

அரசிற்கான வங்கியாளர் என்றரீதியில் மத்திய வங்கி பணியாற்றுவதற்கு வசதியளிக்கும் விதத்தில், திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள், நிறுவனங்கள் குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பன வற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் அவற்றிற்கு தேவையான வங்கித்தொழில் வசதிகளையும்

வழங்கியது. வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2004 இறுதியில் 55 ஆகக் காணப்பட்டது. 2004 இல் நான்கு புதிய கணக்குகள் திறக்கப்பட்டவேளையில், அரசாங்கத்தின் கோரிக்கையை அடுத்து 70 கணக்குகள் மூடப்பட்டன. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89 இன் நியதிகளில் வங்கி அரசாங்கத்திற்குத் தொடர்ந்தும் தற்காலிக முற்பணங்களை வழங்கி வருகிறது. அத்தகைய முற்பணங்களின் மீதான வரையறை (மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறையில் 10 சதவீதம்) 2004 இல் ரூ.2.6 பில்லியனிலிருந்து ரூ.35.6 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இம் முற்பணங்களின்மீது வட்டி விதிக்கப்படுவதில்லை.

3. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு

லங்காசெட்டிலின் சுமுகமானதும் வினைத் திறன்மிக்கதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை வழங்கும் பொறுப்பினைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இப் பொறுப்புக்களை நிறைவேற்றுதலானது ஒரு நாடுகளுக்குள்ளேயான திரவத்திற்கான பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கைகளையும் அவற்றை மீளச் செலுத்துவதனையும் சரியான விதத்தில் கையாளுதல் மற்றும் அதே நாளில் லங்காசெட்டிலின் வியாபாரம் முடிவடைவதற்குமுன் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை தீர்ப்பனவு செய்யத் தவறுபவர்களிடமிருந்து செலுத்தத் தவறியமைக்கான வட்டியைச் சரியான முறையில் விதித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அரச திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி தொடர்ந்தும் கட்டணமெதுவுமின்றி வழங்கப்படுகிறது. அந் நாளில் விலைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்குப் போதுமான "இலாப" மொன்றிற்கு ஏற்ப பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தைவிலைகளில் மதிப்பிடப்படுகின்றன.

இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதி ரூ.654 பில்லியன்களாக விளங்கின. இதன்படி ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் நாளொன்றிற்கான சராசரி எடுப்பனவு ரூ.2.7 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2003 திசெம்பரில் எடுப்பனவு செய்யப்பட்ட சராசரியான ரூ.3.2 பில்லியனைவிட குறைவானதாகும். 2004 இல் ஒரு தடவை மாத்திரமே பங்கேற்பாளரொருவர் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைச் செலுத்தத் தவறியிருக்கின்றார். வங்கி வீதத்திலான தண்டவட்டி மற்றும் திரும்பத்திரும்ப

வரைபடம் II - 3
2004 இல் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி



செலுத்தத் தவறுமிடத்து வசதியினை இடைநிறுத்துதல் போன்ற வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டமை லங்காசெட்டிலின் வியாபாரம் மூடப்படுவதற்கு முன் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மையினை மீளச் செலுத்தவதனை உறுதிப்படுத்தன.

பொருளாதார ஆராய்ச்சி

ஆராய்ச்சி நடவடிக்கைகள்

மத்திய வங்கியின் முதன்மை தொழிற்பாடான நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் துணைத் தொழிற்பாடுகளான பொருளாதார ஆய்வு மற்றும் பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை வெளிப்படுத்தலினூடாக அறிவினை வளர்த்தல் பொருளாதார நிலையினை கிரமமாக மதிப்பீடு செய்து பொருளாதார விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் என்பன பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. இப்பணியானது பொருளாதாரப் பகுப்பாய்வு தொடர்பில் முதனிலை மட்டத்தில் பொருளாதாரத் தரவுகளைச் சேகரித்தலும் தொகுத்தலும், இரண்டாவது மட்டத்தில் வங்கியின் சொந்த கொள்கை உருவாக்கத்திற்காக தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றம் மூன்றாவதாக பொதுமக்களின் நன்மை கருதி அத்தகைய பகுப்பாய்வினை வெளியிடல் போன்ற பல தரப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகின்றது.

2004 இல் இத்தகைய முதனிலை செயற்பாடுகளை நிறைவேற்றிய வேளையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் நாணயக் கொள்கை கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில், நாணயக் கொள்கை குழுவின் மாதாந்த கலந்துரையாடல்களுக்கு விரிவான பொருளாதார பகுப்பாய்வினையும் உள்ளீடுகளையும் வழங்குவதன் மூலம் முக்கிய பங்காற்றப்பட்டது. வங்கியின் நாணயக்

கொள்கைத் தீர்மானங்கள், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் முன்பாகவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின் அடிப்படையில் பத்திரிகை வெளியீடுகள் மூலம் வெளியிடப்பட்டன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் கொள்கை அறிக்கைகளைத் தயாரித்தலுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளனர். இந்த நோக்கத்திற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், மத்திய வங்கி அலுவலர்களின் நன்மை கருதி பல ஆராய்ச்சிச் செயலமர்வுகளையும் நடாத்துவதற்காக பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு விவகாரங்களுக்கான பேராசிரியர் வில்லியம் பிரன்சன் அவர்களுடைய பணியினையும் பெற்றுக் கொண்டது. அவரது வழிகாட்டுதலின் கீழ் 2004 இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் 12 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களை தொடங்கினர். வங்கியினது உயர் அலுவலர் ஆய்வுகளின் வெளியீட்டில் வெளியிடுவதற்கென பல ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. உயர் அலுவலர்கள் பன்னாட்டு அமைப்புக்களுடன் குறிப்பாக மலேசியாவின் கோலாலம்பூரிலுள்ள தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வுச் செயற்றிட்டங்களில் கூட்டு ஆராய்ச்சியினை மேற்கொள்வதிலும் ஈடுபட்டனர். திணைக்கள அலுவலர்களின் பணிகள் வங்கியின் பட்டப்பின் படிப்பு பட்டம் பெறுவதற்கு ஆர்வம் கொண்ட அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதற்காகவும் அவர்களின் ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டுவதற்காகவும் கிடைக்கச் செய்யப்பட்டது. பொருளாதாரத்தின் அனைத்து நான்கு பேரண்டப் பொருளாதார துறைகளையும் இணைக்கும் ஒரு நிதியியல் நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு வேறுபட்ட கொள்கை திட்டங்களின் கீழ் கொள்கை பிரயோகங்களை பாகுபடுத்தவும், பேரண்டப் பொருளாதார மாறிலிகளை எறிவு செய்யும் நோக்கத்திற்காகவும் அபிவிருத்தி செய்யப்பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் சுனாமி அனர்த்தம் நேரிட்டதன் பின் உடனடியாக அது பொருளாதாரத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் தொடர்பான அறிக்கையினை தயாரித்ததுடன், பின்னர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணத்திற்கும், புத்தாக்கத்திற்கும் புனர் நிர்மாண வேலைகளுக்குமான ப.நா.நிதி மற்றும் ஏனைய உதவி வழங்கும் முகவர்களால் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைப்பதற்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக பகுப்பாய்வுடன் கூடிய ஆவணங்களையும் தயாரித்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணயச்சபைக்கும் முகாமைத்துவத்திற்கும் வங்கியிலுள்ள ஏனைய திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் பல்வேறு விடயங்கள் மீது கொள்கை ஆலோசனைகளை கிரமமாக வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பலர் வங்கிக்கு உள்ளேயும், வெளியேயும் பல்வேறு முக்கிய குழுக்களில் பணியாற்றினர். அவர்கள் பல்வேறு நிறுவனங்களின் சபைகளிலும் வங்கிக்கு சொந்தமான வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினாலும் ஏனைய வெளிநாட்டு உள்நாட்டு, அமைப்புக்களினாலும் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மூலவளஆட்களாகவும் பணியாற்றினர். இதற்கு மேலாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் சந்தைத் தொழிற்பாடுகள் குழு, உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக்குழு மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக்குழு போன்ற வங்கியிலுள்ள பல்வேறு குழுக்களிலும் பங்கேற்றதுடன் தொடர்ந்தும் உள்ளீடுகளை வழங்கியது.

வங்கியின் நியதி அறிக்கைகள் மற்றும் ஏனைய சிறப்பு அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் தயாரிக்கும் முதன்மைப் பொறுப்பு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தையே சார்ந்துள்ளது. அது 2003 ஆம் ஆண்டின் வங்கியின் ஆண்டு அறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகளும் 2004 இன் முக்கிய பண்புகளும் 2005 இற்கான வாய்ப்புக்களும் என்பவற்றின் வெளியீடுகளை ஒருங்கிணைத்தது. இதற்கு மேலாக, அரசாங்க வரவுசெலவுத்திட்டம் தயாரிப்பதற்கு முன்னராக வங்கியினால் நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் ஒரு ரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15 ஆம் நாள் அறிக்கையை தயாரிப்பதற்கும் இது பொறுப்பாக விருந்தது.

அது தகவல்களைப் பரப்புவதை மேம்படுத்தி விரிவுபடுத்துதலையும் தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில் அதனது நியதி வெளியீடுகள், தெரிவு செய்யப்பட்ட பொருளாதார வாராந்த மற்றும் மாதாந்த குறிகாட்டிகள், இலங்கை மத்திய வங்கி இணையதளம் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் ஊடாக தகவல்களைக் கிடைக்கச் செய்தது. இலங்கை மத்திய வங்கி இணையதளம் நாளாந்தம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பூரணப்படுத்தப்படுகிறது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் ஏனைய பன்னாட்டு அமைப்புக்களுடனான உறவுகளை ஊக்குவித்தது. பன்னாட்டு நாணய நிதியம், அரசாங்கங்களுக்கிடையிலான இருபத்து நான்கு குழுமம் ஜி 24, தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான நிலையம்,

தென்கிழக்காசியா, நியூசிலாந்து, அவுத்திரேலியா மத்திய வங்கிக் குழு, மத்திய வங்கி ஆளுநர்களினதும் நிதிச் செயலாளர்களினதும் தென்கிழக்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு நிதிக்குழு என்பவற்றுடனான இலங்கையின் உறவுகளை அது ஒருங்கிணைத்தது. 2004 இல் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஏனைய பல்புடை மற்றும் இருபுடை மற்றும் கொடையாளிகளுடனான வேலைகளை ஒருங்கிணைப்பதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிதி அமைச்சிற்கு உதவியது. இலங்கை மத்திய வங்கியானது 39 ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்களின் மாநாட்டினையும் 23 ஆவது ஆளுநர் சபைக் கூட்டத்தினையும் 2004 பெப்புருவரியில் நடாத்தியது. இந்த மாநாட்டினையும் கூட்டத்தினையும் ஒழுங்கு செய்வதில் முதன்மைப் பொறுப்பாளராக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செயற்பட்டது. 2005 சனவரியில் இடம்பெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிர்வாக சபைக் கூட்டத்திற்கான தயாரிப்பு வேலைகளைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2004 இல் பூர்த்தி செய்தது. பிராந்திய ஒத்துழைப்புக்கான அனைத்து தென்னாசிய நாடுகளிடையே அலுவலர்களை பரிமாறுதல், அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் மற்றும் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்ளல் என்பவற்றிற்கானதொரு பொறிமுறையான இலங்கையின் பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய நாடுகளின் அமைப்பின் (சார்க்) நிதிப்பிரிவின் கருமபீடத்தினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் பேணி வருகின்றது.

ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியத்தின் பாதுகாவலனாக நாணயச்சபை, ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் நியதிகளின்படி, உதவுதொகை, தண்டங்கள், மற்றும் முதலீடுகளிலிருந்தான வருவாய் என்பனவற்றைப் பெறல், பதிவு செய்யப்பட்ட தொழில் நிலைகளினதும், உறுப்பினர்களினதும் நிதியத்தினதும் கணக்குகளை சரியாக பேணுதல், பொருத்தமான முதலீடுகளில் மேலதிக பணத்தினை முதலீடு செய்தல், நிதியத்தின் உறுப்பினர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதல் ஆகிய அதன் பொறுப்புக்களைத் தொடர்ந்தும் நிறைவேற்றி வருகின்றது. இந்த நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேம நிதியப் பிரிவின் நெருங்கிய ஒருங்கிணைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

முறையினை நவீனப்படுத்தல்

நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தினை நோக்கிய நகர்வில் 2004 ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதிய தகவல் தொழில்நுட்ப முறையில் பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மின்னியல் முறை ஊடான உறுப்பினர்களின் உதவுதொகை சேகரிப்பு 2004 இறுதியில் மேலும் விரிவுபடுத்தப்பட்டு 200 இற்கு மேற்பட்ட பெரிய அளவு தொழில்தருநர்கள் இம் முறையை தேர்ந்தெடுத்தனர். கணனி மயப்படுத்தப்பட்ட "மீளாய்வு விரைவுபடுத்தும் முறையின்" அறிமுகம் மீளளிப்புச் செய்முறையின் ஆற்றலையும் துல்லியமான தன்மையும் மேம்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

பொதுமக்களுக்கான விழிப்புணர்வும் உறுப்பினர்களின் வெளிப்படுத்துகையும்

முன்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2004 இலும் தொடர்ந்தது. இந்நிதியத்தின் சகல பங்குடமையாளர்களின் மீதும் கவனம் செலுத்தியது. இது ஊழியர் சேம நிதியம் தொடர்பாக அவர்களது உரிமைகளையும் பொறுப்புக்களையும் பின்பற்றப்பட வேண்டிய சரியான வழிமுறைகள் மற்றும் ஓய்வு பெற்றதன் பின்னர் உறுப்பினர்களின் சேம நலனுக்கு ஊழியர் சேம நிதியத்தின் முக்கியத்துவம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. 2003 இல் நிறுவப்பட்ட ஊழியர் சேம நிதியத்தின் உதவும் பிரிவு உறுப்பினர்களின் விசாரணைகளுக்கு துரிதமாக உதவியது. நாட்டின் பல்வேறு அமைவிடங்களில் நடமாடும் பணி கருமப்பீடங்களை நடாத்துவதுடன் இதற்கு மேலாக 2004 இல் தோட்டத் துறையினை இலக்கு வைத்து ஒரு சிறப்பு நடமாடும் பணி தொடக்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உறுப்பினர், தொழில்தருநர், தொழில் திணைக்களம், மத்திய வங்கி ஆகிய நான்கு முக்கிய பங்குடமையாளர்களும் தொழில்தருநரின் பணிமனையில் கூடி அதே நேரத்திலேயே குறைபாடுகளை நிவர்த்தி செய்தனர். இந்த நிகழ்வுகள் பின்தங்கிய பகுதிகளில் உறுப்பினர்களுக்கு ஆக்கபூர்வமான பலன்களை விளைவித்ததுடன், அவர்களுடைய பிரச்சனைகளை நேரிடையாகவே தீர்த்து வைக்கக்கூடிய வாய்ப்பினையும் அளித்தன. 2004 ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதியம் தொடர்பான விவரணப்படம் தயாரிக்கப்பட்டமை மற்றும் பல தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றமை என்பன பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்களில் ஆக்கபூர்வமான கருவிகளாகப் பயன் படுத்தப்பட்டன.

ஊழியர் சேம நிதியத்தின் இயலளவினைக் கட்டியெழுப்புதல்

நிதியத்தின் நவீன மயமாக்கல் நிகழ்ச்சி நிரலில் அலுவலர்களின் தொழில் தேர்ச்சி அபிவிருத்தி முக்கிய கூறாகவுள்ளது. "கற்றறியும் அமைப்பு" இனை நிறுவுதல் என்ற மத்திய வங்கியின் தத்துவத்திற்கு இசைவாக

தொடர்ச்சியான கற்றலும், அறிவினைப் பகிர்தலும் நிதியத்திற்குள்ளேயே ஊக்குவிக்கப்பட்டன. பெறப்பட்ட அறிவாற்றலை பிரயோகிப்பதற்கான சூழலும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. அலுவலர்களுக்கு தற்போதைய கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் தொடர்பான துறைகளிலும் அவர்களது பதவி வழி துறைகளிலும் பயிற்சியளிக்கப்பட்டது. இயலளவினைக் கட்டியெழுப்புவதிலான முக்கிய அம்சமாக 2003 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட 14 இளம் தொழில் நிபுணர்களுக்கான ஏற்படுத்தப்பட்ட நிதி முகாமைத்துவத்திலான ஈராண்டு விரிவான பயிற்சி நெறி விளங்கியது. ஆய்வுக்குரிய ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இயலளவினைக் கட்டியெழுப்பும் இந்நடவடிக்கையானது துரிதமாக மாறிவரும் சூழலில் போட்டித்தன்மை மிக்கதும் நிதியத்தின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அவசியப்படுவதுமான திறமை வாய்ந்த மனித வளங்களை அதிகரித்துக் கொள்ள வழிவகுக்கும்.

வீடமைப்புக் கடன் வசதிகள்

1988 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம், ஆய்வுக்குரிய ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் ஊழியர் சேமநிதிய உறுப்பினரொருவர் உறுப்பினர் நிலுவையின் ஆகக்கூடியது 75 சதவீதம் வரையிலான தொகையினை பிணையாக வைத்து அனுமதி பெற்ற கடன் வழங்கும் நிறுவனத்திடமிருந்து வீடமைப்பு நோக்கங்களுக்காக கடனைப் பெற்றுக்கொள்ள முடியும். முதலாவது கடனை மீளச்செலுத்திய பின்னர் இரண்டாவது கடனும் கிடைக்கக் கூடியதாகவிருக்கும் 2004 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், ஊழியர் சேம நிதியம் ரூ.2,452 மில்லியன் கொண்ட மொத்தமாக ஒப்புதலளிக்கப்பட்ட தொகைக்காக கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 14,307 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்களை வழங்கியது.

அட்டவணை II.5
ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கான வீடமைப்புக் கடன் வசதிகள் பற்றிய விபரங்கள்

ரூ.மில்லியன்

ஆண்டு	வழங்கப்பட்ட உறுப்பினர் நிலுவை சான்றிதழ்கள் (எண்ணிக்கை)	ஒப்புதலளிக் கப்பட்ட கொடுகடன் தொகை (ரூ.மில்லியன்)	செலுத்தத் தவறியமை வீடமைப்புக் கடன் (எண்ணிக்கை)	செலுத்தத் தவறியமைக்காக ஊழியர் சேம நிதியம் செலுத்தியவை (ரூ.மில்லியன்)
2000	12,938	1,648	19,944	262
2001	16,066	2,091	24,202	381
2002	19,502	2,673	31,574	541
2003	18,659	2,792	40,085	670
2004	14,307	2,452	50,000*	750*

* மதிப்பிடப்பட்டவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

உறுப்பினர்கள் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு கடன் தவணைப் பணத்தினை திருப்பிச் செலுத்தாது விடுவதற்கான அதிகரிக்கும் போக்கானது வெளிப்படை அம்சமாக விளங்குகின்றது. இதன் மூலம் ஊழியர் சேம நிதிய நிலுவைகளை உறுப்பினர்கள் உரிய காலத்திற்கு முன்னரே மீளப்பெறுவதற்கான வழிமுறையாக இவ்வசதி தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், செலுத்தத் தவறிய தொகைகளுக்கு சராசரியாக ஆண்டொன்றுக்கு 36 சதவீதமான தண்ட வீதத்தினை கடன்வழங்கும் நிறுவனங்கள் அறவிடுவதனால் இத்தகைய உரிய காலத்திற்கு முன்னரேயான மீளப்பெறும் முறையானது அவ்வுறுப்பினர்களுக்கு மிக அதிகமான செலவுமிக்கதாக அமைகின்றது. வீடமைப்புக்கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறுவதானது உறுப்பினர்களின் இளைப்பாற்று சேமிப்புக்களை மோசமாக குறைத்து விடுவதுடன் திருப்பிச் செலுத்தத் தவறிய உறுப்பினர்களுக்கு இரண்டாவது கடனும் வழங்கப்பட மாட்டாது. அட்டவணை II-5 வீடமைப்புக் கடன்களை செலுத்தத் தவறியவர்களின் அதிகரிக்கும் போக்கினைக் காட்டுகின்றது.

முதலீட்டு நடவடிக்கைளும் விளைவுகளும்

இவ்வாண்டில் நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 12.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2004 இறுதியில் ரூ.359 பில்லியன் கொண்ட கிரயப்பெறுமதியினை பதிவு செய்தது. கடந்த 7 ஆண்டு போக்கினை தொடருகின்ற விதத்தில் நீண்டகால சந்தை சார்ந்த முதலீட்டுக் கருவியான திறைசேரி முறிகளிலான நிதியத்தின் மொத்த முதலீடுகள் முன்னைய ஆண்டின் 56 சதவீதத்திற்கு எதிராக 2004 இறுதியில் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியலில் 77 சதவீத மட்டத்திற்கு மேலும் விரிவடைந்தது. இதற்கேற்ற வகையில் சந்தை சாராத கருவியொன்றான அரச ரூபாப்பிணைகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு 2003 இன் கொண்ட சொத்துப் பட்டியலின் 41 சதவீதத்திலிருந்து 2004 இறுதியில் 20 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இது ஊழியர் சேம நிதியத்தின் அதன் முதலீடுகளை சந்தை சார்ந்த கருவிகளுக்கு பன்முகப்படுத்தும் இதன் முதலீட்டுக் கொள்கைக்கும் தீவிர நிதிய முகாமைக்கும் இணங்கியதாக காணப்படுகிறது.

2001 இறுதிப்பகுதியில் பங்குச்சந்தையில் தொடங்கிய நீண்டகால செழிப்புத் தன்மையானது 2004 இல் குறுங்கால அசைவுகளின் பின் மேலும் தொடர்ந்தது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட துறைகளும், முழுப் பொருளாதாரமும் சீரடையும் என்ற முதலீட்டாளர் நம்பிக்கையின் கீழ் இச்சந்தையானது சுனாமியினால் ஏற்பட்ட அழிவுகளினால் பாதிப்புறாதிருந்தது. ஊழியர்

சேம நிதியமானது எதிர்கால வாய்ப்புக்களை வெளிப்படுத்திய அடிப்படையில் உறுதியான பங்குகளில் தெரிந்தெடுத்த முறையில் முதலீடு செய்வதன் மூலம் அதன் பங்குச்சொத்துப் பட்டியலை அதிகரித்தது. சந்தையில் ஏற்பட்ட குறுங்கால அசைவுகள் ஊழியர் சேம நிதியத்திற்கு குறுங்கால இலாபமீட்டும் வாய்ப்புக்களை வழங்கின. 2004 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட பங்குச் சொத்துப் பட்டியல் 45 சதவீதத்தினால் அதிகரித்து 2004 இறுதியில் கிரயப் பெறுமதியின் ரூ.1,534 மில்லியனாகவிருந்தது. எனினும், இது 2004 இறுதியில் ஊழியர் சேம நிதிய மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியலில் 0.5 சதவீதமான மிகச் சிறிய பங்கினையே கொண்டிருந்தது. ஊழியர் சேம நிதிய பங்கு சொத்துப்பட்டியலிலிருந்தும் உழைக்கப்பட்ட தேறிய விளைவு ரூ.456 மில்லியனாக அல்லது 2004 இற்கான சராசரி சொத்துப்பட்டியலில் 43 சதவீதமாக விளங்கியது (அட்டவணை II-6 இல் காட்டப்பட்டுள்ளது. 1998 இலிருந்து 2004 வரையான மொத்த வைத்திருக்கும் காலப்பகுதியில் இது சராசரியாக ஆண்டுக்கு 24 சதவீத தேறிய விளைவு வீதத்தினை தோற்றுவித்தது. இது முன்மதியுடையதொரு முதலீட்டு அணுகுமுறையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்ட போதிலும் நிதியத்திற்கானதொரு முதலீட்டு வழிமுறையாக பங்குச் சந்தையை நியாயப்படுத்தக்கூடும்.

அட்டவணை II.6

ஊ.சே.நி: 2003 மற்றும் 2004 காலப்பகுதியில் பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்

ரூ.மில்லியன்

விடயம்	2003	2004
சராசரி சொத்துப்பட்டியல்	1,223	1,064
மொத்த பங்கிலாபவருமானம்(அ)	96	112
மொத்த மூலதன நன்மைகள்	614	318
பெறப்பட்டமிகை இலாபப் பங்குகள் (காலமுடிவில் பெறுமதி)	143	26
மொத்த பங்கிலாபங்கள் மூலதன நன்மைகள் மிகை இலாபப் பங்குகள்	**853**	**456**

மூலம் : ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II-7

ஊ.சே.நி: 2003, 2004 இல் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

ரூ.மில்லியன்

விடயம்	கொள்வனவு அளவ(அ)		விற்பனவு அளவு(அ)		மூலதன நன்மைகள்	
	2003	2004	2003	2004	2003	2004
திறைசேரி முறிகள்	33,165	13,311	33,567	20,094	3,124	1,225
திறைசேரி உண்டியல்கள்	158	2,572	245	6,634	2	5
	-	-	1,875	-	3	-
பங்குகள்	437	847	690	380	614	318
மொத்தம்	**33,760**	**16,730**	**36,377**	**27,108**	**3,734**	**1,548**

(அ) செலவுப் பெறுமதிகளில்　　　　மூலம்: ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியத்தின் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் மீதான விளைவு வீதம் தொடர்ந்தும் அரசப் பிணையங்கள் வீதங்களில் பெருமளவு சார்ந்திருந்தமைக்கு 2004 இறுதியில் மொத்த சொத்துப்பட்டியலில் 98.2 சதவீதமானவை அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையே காரணமாகும். இவ்வாண்டில் ஓராண்டுத் திறைசேரி உண்டியல்கள் முதலாந்தரச் சந்தையில் 7%-8% மானவொரு வீச்சில் வர்த்தகப்படுத்தப்பட்டன. இதற்கிணங்க, அரச பிணையங்கள் வீதங்களில் மூன்று ஆண்டுகளாக ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கம் காரணமாக (வரைபடம் 11-4) ஊழியர் சேம நிதியத்தின் சராசரி முதலீட்டு சொத்துப்பட்டியல் மீதான விளைவுவீதம் முன்னைய ஆண்டின் 13.68 சதவீதத்திலிருந்து 2004 இல் 11.56 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மொத்த உறுப்பினர் நிலுவையும் 2004 ஆம் ஆண்டிற்கான வட்டி வீதமும்

ஊழியர் சேம நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை, 2004 ஆம் ஆண்டிற்காக பிரகடனப் படுத்தப்பட்ட வட்டி வீதமான 9.5 சதவீதத்திற்கு கணக்கீடு செய்ததன் பின்னர், 2004 இறுதியில் ரூ.373 மில்லியன்





வரைபடம் II - 6
ஊ. சே. நிதிய வீதங்களை சந்தை வீதங்களுடன் ஒப்பிடுதல்



கொண்ட பெறுமதிக்கு 11.8 சதவீதமான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. ஆண்டிறுதியிலுள்ள உறுப்பினர் நிலுவைக்கு வட்டி வீதத்தினை பிரகடனப் படுத்தும் நிதியத்தின் சட்டபூர்வ தேவைப்பாட்டிற்கு அமைவாக, ஆண்டு இறுதி உறுப்பினர் நிலுவையின் மதிப்பிடப்பட்ட வட்டி வீதம் 9.59 சதவீத பயன்தரு வீதமாக விளங்கி உண்மை பயன்தரு விளைவுவீதம் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்படும் 7.6 சதவீத சராசரி பணவீக்கத்திற்கு மேலாக 1.99 சதவீதம் கொண்ட உண்மை பயன்தரு வீதமொன்றினை விளைவித்தது. மேலுமொரு சாதகமான விடயமாக வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமான 7.09% உடன் ஒப்பிடுகையில் ஊழியர் சேம நிதிய பயன்தரு வீதமானது 2004 இல் உறுப்பினர்களுக்கு 2.5% மான நேர்க்கணிய மிகையினை விளைவித்தது.

நடவடிக்கைகளை வெளி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுதல்

ஊழியர் சேம நிதியம் அதனது செலவுக் குறைப்பு முறைமையில் வெளி மூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. வெளி மூலங்களிலிருந்து பெறவேண்டிய தொழிற்பாடுகள் செலவு-நன்மை பகுப்பாய்வின் பின்னரே கவனமாக இனங் காணப்படுகின்றன. குறுகிய கால மற்றும் நீண்ட காலத்தில் எழக்கூடிய அனைத்து வெளிப்படையானதும் உட்கிடையானதுமான செலவுகளையும் நன்மைகளையும் இது கவனத்தில் எடுக்கும். இது உறுப்பினர்களுக்கான பணிகளில் ஏற்படக்கூடிய அனைத்து இடர் நேர்வுகளையும் தர மேம்பாடுகளையும் கவனத்தில் எடுக்கின்றது. மிக அண்மைக் காலத்தில் வேலைகளின் அளவு அதிகரித்துள்ளபோதிலும், வெளி மூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொண்டதன் முக்கிய காரணமாக நிதியத்தினால் மொத்த வருவாய்க்கான அதன் மீண்டெழும் செலவின விகிதத்தினை 1 சதவீதத்திலும்

அட்டவணை II- 8
ஊ.சே.நி : அடிப்படைப் பண்புகள்

விடயம்	2003	2004
உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை	9,813,870	10,175,000*
தற்பொழுது உதவுதொகை செலுத்தும உறுப்பினர் கணககுகள்	1,872,073	2,001,000*
தற்பொழுது உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள்	7,941,797	8,174,000*
உதவு தொகை செலுத்தும் ஊழியர்கள்	50,880	51,824*
மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.)	20,188	23,330
மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.)	17,032	16,617
மீளளிப்புக்களின் எண்ணிக்கை	89,342	98,666
மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ரூ.பில்.)	320	359
மொத்த முதலீடுகளின் %மாக அரசபிணையங்களின் முதலீடுகள்(%)	98.3	98.2
மொத்த முதலீடுகளின் %மாக தனியார்துறை முதலீடுகள்(%)	1.7	1.8
சராசரிச் சொத்துச் பட்டியலின் மீதான பெறப்பட்டவருமான வீதம்	13.68	11.56
மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்)	334	373
மொத்த வருமானம் (ரூ.மில்.)	41,313	39,315
வருமான வரி (ரூ.மில்.)	1,448	4,735
நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.)	299	360
மொத்த வருமானத்தின் % நிருவாகச் செலவுகள் (%)	0.72	0.91
உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு வட்டிவீதம் (%)	12.00	9.50
உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட பயனுரு வட்டிவீதம் (%)	12.07	9.59

* மதிப்பிடப்பட்டது.

மூலம் : ஊழியர் சேம நிதியம்

குறைந்த மட்டமொன்றிற்கு கட்டுப்படுத்த கூடியதாகவிருந்தது. வீழ்ச்சியடையும் சந்தை வட்டி வீதங்கள், அதிகரித்துச்செல்லும் வேலையின் அளவு மற்றும் பணவீக்க அழுத்தம் ஆகிய சூழ்நிலையில் மொத்த வருவாய்கான மீண்டெழும் செலவின விகிதத்தினை இத்தகைய மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த மட்டத்தில் பேணுவது சவாலாக அமைவதனால் செலவினைக் குறைக்கும் முறைகளே கவர்ச்சிகரமானதாக இருக்கும். இச்செலவுக்குறைப்பு மற்றும் தர மேம்பாட்டு முயற்சிகளின் இறுதிக் குறிக்கோளானது ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு ஆகக்கூடிய நன்மைகளை வழங்குவதாகும். உழியர் சூசமநிதியத்தின் அடிப்படைப் பண்புகள் அட்டவணை II-8 இல் தரப்பட்டுள்ளன

செலாவணிக் கட்டுப்பாடு

நாட்டிற்குள் வருகின்ற மற்றும் நாட்டிற்கு வெளியே செல்கின்ற வெளிநாட்டுச் செலாவணியினை முகாமைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதே செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடாக இருக்கிறது. 2004 ஆம் ஆண்டில், நடைமுறை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அனைத்து வெளிநாட்டு செலாவணிக் கொடுப்பனவுகளையும், பெறுகைகளையும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினூடாக, அவை மிக நுணுக்கமான ஆய்வு நடவடிக்கைகளுக்குட்பட்டு, அவற்றின் சொந்த தற்றுணிபுகளுக்கு ஏற்ப எவ்வித கட்டுப்பாடுமின்றி

தொடர்ந்து விடுக்கப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் புறம்பாக நாணய மாற்றுநர்கள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் தீர்வை யற்ற கடைத்தொகுதிகள் என்பன வெளிநாட்டு நாணயத்தாள்களை பரிமாற்றிக் கொள்ளல், ஏற்றுக் கொள்ளல், பயணிகள் காசோலை வடிவத்தில் செலாவணியினை வழங்குதல் போன்ற குறித்துரைக்கப் பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணி யினைத் தொடர்ந்தும் கையாண்டன. இத்திணைக்களம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் வழி காட்டல்களையும் வழங்குகின்ற அதன் ஒழுங்குமுறைப் படுத்தல் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற் கொண்டதுடன் தல, மற்றும் தலத் திற்கு வெளியேயான பரீட்சிப்புக்களையும் அவற்றினது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களையும் நடத்தியது.

1. 2004 இன் முக்கிய நிகழ்வுகள்

2004 இன் முக்கிய அபிவிருத்திகளில் ஒன்று யாதெனில், தடுப்பதற்கு சட்ட கட்டமைப்பு எதுவும் இல்லாத நிலையில் இணையத் தளத்தினூடாகத் தொழிற்பட்ட பிரமிட் வலையமைப்பு சந்தைப்படுத்தல் திட்டம் தொடர்பில் வெளிச்சென்ற பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியினைத் தடுத்து நிறுத்து வதற்காக செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே யாகும். இத்திட்டம் பற்றியும் அதன் உள்நாட்டு ஊக்குவிப்பாளர்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அனைத்தையுமுள்ளடக்கிய பூரணமான புலனாய் வொன்றினை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நடத்திய பின்னர், இத்திட்டத்திற்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்காக தமது மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தியவர்களின் மீது செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக ஐ.அ.டொலர் 88 மில்லியன் வரையான தண்டம் விதிக்கப்பட்டது. அதேநேரம் மத்திய வங்கி, பிரமிட் வலையமைப்பு சந்தைப்படுத்தல் திட்டங்களில் பங்கேற்பதிலும் அதன் விளைவாக பொதுவாக பொருளாதாரத்திற்கும் குறிப்பாக நிதியியல் துறைக்கும் ஏற்படுகின்ற ஆபத்துக்கள் பற்றியும் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொண்டது.

மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு கொடுகடன் அட்டைகள் பெருமள விற்கு முறை தவறிப் பயன்படுத்தப்பட்டமையைக் கருத்திற்கொண்டு அதன் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் திணைக்களம் ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தும் வலுப்படுத்தியது. மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளை வைத்திருப் போருக்கு அட்டைகளை வழங்கிய வங்கிகளூடாக அவர்களது அட்டைகளை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றியும் அத்துடன் அங்கீகரிக்கப்படாத நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளைச் செய்யும்போது செலாவணிக் கட்டுப்பாட்டு குற்றங்களுக்கு அவர்கள் ஆளாகக்கூடும் என்பது பற்றியும் அவர்களுக்கு அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாண்டில் கண்காணிப்பு நடவடிக்கையிலேற்பட்ட இன்னொரு அபிவிருத்தி யாதெனில் ஏற்றுமதிப் பெறுகைகளை பயன்படுத்துவது தொடர்பான தரவுகள் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்டமையாகும்.

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் புகழ் பெற்ற கம்பனியொன்றின் இரு பணிப்பாளர்களுக்கு திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட தண்டப் பணத்தினை நீக்குவதற்காக மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் அவர்கள் தொடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாகும். செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 11 (2) இன் விதிகளுக்கு முரணாக கம்பனியின் பங்குகளை வதிவற்றவர்களுக்கு அவர்கள் மாற்றம் செய்தமையின் மூலம் அவர்கள் இழைத்த குற்றத்திற்காகவே அவ்வாட்களின் மீது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தண்டத்தினை விதித்தது. ஆய்விற்குரிய ஆண்டில் பாரிய வெளிநாட்டு செலாவணி மோசடிகள் தொடர்பாக திணைக் களத்தினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் அடிப்படையில் பல நபர்களுக் கெதிராக சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மேலும் 8 குற்றப்பத்திரங்களைத் தாக்கல் செய்தது.

2. மூலதன கொடுக்கல் வாங்கல்கள்

(அ) முதலீடுகள்

2004 ஆம் ஆண்டில், இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பான தற்போதுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் மாற்றமெதுவும் செய்யப் படவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக் களத்தினால் செய்யப்பட்ட விதந்துரைப் புக்களின் மீது ஐ.அ.டொலர் 5.8 மில்லியன் தொகை கொண்ட 13 வெளிநாட்டு

முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கினார். இவை தும்பு உற்பத்திகளின் தயாரிப்பு, இலங்கை ஏற்றுமதிகளை மேம்படுத்தல் மற்றும் வைத்தியசாலைப் பணிகள் போன்ற வற்றில் காணப்பட்டன.

(ஆ) வெளிநாட்டு நாணய கடன்பாடுகள்

முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் முதலீட்டுச் சபையினால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்தும் முழுமையாக விலக்குப்பெறுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த, இலங்கையிலுள்ள கம்பனிகள் வெளிநாட்டுக் கடன் பாடுகளுக்காக செலாவணிக் கட்டுப் பாட்டுத் திணைக்களத்தின் முன் அனுமதியினைப் பெறவேண்டும். ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் இரண்டு தனியார் கம்பனிகள் ஐ.அ.டொலர்கள் 40 மில்லியன் கொண்ட மொத்த வெளிநாட்டுக் கடனைப்பெற செலாவணிக் கட்டுப் பாட்டுத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட வேளையில் இலங்கை ரெலிகொம் ஐ.அ.டெலர் 100 மில்லியன் வரையிலான 5 ஆண்டு பன்னாட்டு முறிகளை திரட்டிக் கொள்ள அனுமதிக்கப் பட்டது.

(இ) வதிவற்றோரின் சார்பில் வங்கி உத்தரவாதங்களை வழங்குதல்

ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் வதியும் கம்பனி ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 35 மில்லியன் பெறுமதி கொண்ட கம்பனி உத்தரவாதத்தினை வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

3. வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள்

முற்பணமாகச் செலுத்தப்பட்ட பணத்திற்கான இறக்குமதிகள் நாட்டிற்குள் வந்துவிட்டமையை உறுதிப்படுத்தம் நோக்குடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் பொருட்களின் இறக்குமதியினைத் தொடர்ந்தும் கண்காணித்தது. ஆய்விற்குரிய ஆண்டில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழிமுறை களின் மீது பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

(அ) மடகாஸ்கரிலிலிருந்து பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களை கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் நோக்கத்திற்காகவும் மடகஸ்காருக்கு பயணம் செய்யும் பதிவு செய்யப்பட்ட இரத்தினக்கல் வணிகர்கள், அவர்களுடன் எடுத்துச்செல்வதற்காக ஆகக்கூடிய தொகை ஐ.அ.டொலர் 15,000 (இதில் ஐ.அ.டொலர் 5,000 வரையில் நாணயத்தாள்களாகவும் மீதி பயணிகள் காசோலை வடிவில் அல்லது வங்கி வரைவுகளாக வழங்கப்பட வேண்டும்) வரையிலான வெளிநாட்டுச் செலாவணியினை விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டவணிகர்கள் அனுமதிக்கப் பட்டனர். இவ்வசதி பின்னர் மியன்மாரி லிருந்து பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வதற்கான முற்பணத்தினைக் கொடுப்பனவு செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட்டது. நாட்டின் இரத்தினக்கல் மற்றம் ஆபரணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்காக இவ்வசதிகள் வழங்கப்பட்டன.

(ii) 2004 இல் வர்த்தக கொடுக்கல் வாங்கல் துறையில் இடம்பெற்ற இன்னொரு முக்கிய மாற்றம் யாதெனில் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நியதிகள் தொடர்பாக 1998 ஏப்பிறல் 8 ஆம் நாளிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1022/6 இல் வெளியிடப்பட்ட இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கான திருத்தமாகும். 2003 ஒத்தோபர் 21 ஆம் நாளிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1363/27 இல் வெளியிடப்பட்ட அதே சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இத்திருத்தமானது இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குள்பட்டு நாணயக் கடிதத்தின் மீதான பெரும்பாலும் அனைத்து உந்து ஊர்திகளினதும் இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இதற்கேற்ப, நாணய விதிச் சட்டத்தின் நியதிகளின்படி, குறிப்பிட்ட வகை ஊர்திகள் தொடர்பாக நாணயக் கடிதங்களைத் திறக்கையில் அத்தகைய நாணயக்கடிதங்களைத் திறக்கும் வங்கியில்

100 சதவீத அளவிற்கு வைப்புக்கள் வைத்திருக்கப்பட வேண்டுமென்ற குறித்துரைக்கப்பட்ட நிபந்தனையை மத்திய வங்கி விதித்தது.

4. கப்பற் சரக்கேற்றுவோரை பதிவு செய்தலும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட உரிமப் பத்திரங்களை வழங்குதலும்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கப்பல் சரக்கேற்றுவோரை பதிவு செய்தல், பயணக் காசோலைகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தினை பயண முகவர்களுக்கு வழங்குதல், வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்வதற்காக நாணய மாற்றுனர்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்களுக்கு உரிமங்களை வழங்குதல் என்பவற்றை தொடர்ந்து மேற்கொண்டது.

கப்பற் சரக்கேற்றுவோரை பதிவு செய்தல்

2004 ஆம் ஆண்டுப்பகுதியில் 5 புதிய கம்பனிகள் கப்பற் சரக்கேற்றுவோராக பதிவு செய்யப்பட்டதன் மூலம் கப்பற் சரக்கேற்றுவோரின் மொத்த எண்ணிக்கை ஆண்டிறுதியில் 131 இற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் கப்பற்படுத்தல் மற்றும் வான் பயண முகவர்கள் அதேபோன்று கப்பற்சரக்கு ஏற்றுவோரினால் அவர்களது வெளிநாட்டு முகவர்கள்/ முகவர்களின் சார்பில் பேணப்படும் ரூபாக் கணக்குகளுக்கு செய்யப்படும் வரவு மற்றும் பற்றினை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது.

நாணய மாற்றுநர்களுக்கு உரிமங்களை வழங்குதல்

உரிமங்களை வழங்குவதற்காக 1999 இல் நாணயச்சபையினால் விதிக்கப்பட்ட பிரமாணங்களைப் பூர்த்தி செய்த கம்பனிகளுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 8 புதிய நாணய மாற்றுனர் உரிமங்களை வழங்கியுள்ளது. இதன் மூலம் 2004 இல் தொழில்பட்ட நாணயமாற்றுநர் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 47 இனை அடைந்தது. அவர்களது மொத்த வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 180 மில்லியனாக விளங்கின. இந்நாணயங்கள் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு விற்கப்பட்டன.

கண்காணிப்பு

1994 இல் ஆரம்பித்த கட்டுப்பாடுகளற்ற நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் அமைப்பு 2004 இலும் தொடர்ந்தது. கடந்த காலங்களைப் போன்றே அனைத்து அதிகாரம் பெற்ற வணிகர்களும் ஒப்புதலளிக்கப்பட்ட பயண முகவர்களும் அவர்களது வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் தொடர்பான கிரமமான அறிக்கையினை கண்காணிப்பு நோக்கங்களுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆள் ஒருவருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை ஐ.அ.டொலர் 5,000 இற்கு கூடுதலாக இருக்குமிடத்து நாளாந்தம் அறிவிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்ட வேளையில் ஆள் ஒருவருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை ஐ.அ.டொலர் 5,000 இற்கு குறைவாக இருக்குமிடத்து வாராந்த அடிப்படையில் அறிக்கையிடப்பட வேண்டும். மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளூடாக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும் விடயத்தினைப் பொறுத்தவரையில், ஆள் ஒருவருக்கு மாதமொன்றிற்கான மொத்த வெளிநாட்டுச் செலாவணிச் செலவு ஐ.அ.டொலர் 5,000 இனை விஞ்சியிருக்குமிடத்து மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது விபரமான மாதாந்த அறிக்கையினை வழங்க வேண்டுமென அட்டைகளை வழங்கும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. அங்கீகரிக்கப்படாத மூலதன மாற்றல்கள்; அத்துடன் பயங்கரவாத நிதியிடலுடன் அல்லது சட்டத்திற்கு மாறான பணத்தினை சட்ட ரீதியான பணமாக மாற்றும் நடவடிக்கைளுடன் இணைந்துள்ளதா என்பதனைக் கண்டறியும் நோக்குடன் வெளிநாட்டுச் செலாவணியின் விடுவிப்புக்கள் கண்காணிக்கப்படுகின்றன.

தற்பொழுது வர்த்தக வங்கிகளின் தலைமை அலுவலகங்களும் ஒருசில வெளியிடக் கிளைகளுமே அவர்களது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தரவுகளை அனுப்புவதற்காக மின்னியல் ரீதியில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டில் திணைக்களம் அனைத்து வர்த்தக வங்கிகளினதும் வெளியிடங்களிலுள்ள கிளைகளை இத்தரவு அனுப்பீட்டு வலையமைப்பிற்குள் உள்ளடக்குவதற்கான பொறிமுறையொன்றினை வடிவமைப்பதற்காக வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அலுவலர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தியது. இது பூர்த்தியானதும் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் வணிகர்கள் அதேபோன்று வெளிநாட்டுச் செலாவணி பயன்படுத்துநர்களின் எந்த ஒரு துர்ப்பிரயோகங்களையும் நேரகாலத்துடன் கண்டுபிடிப்பதற்கும் காத்திரமான முறையில் பயன்படுத்த முடியும்.

புலனாய்வுகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ச்சியாகப் புலனாய்வு செய்தது. இவ்வாண்டில் 310 விடயங்கள் புலனாய்வு செய்யப்பட்டதுடன், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட ஏற்பாடுகளை மீறியதற்காக குற்றவாளியாகக் காணப்பட்ட ஆட்களின் மீது ரூ. 91.9 மில்லியன் கொண்ட தண்டப்பணம் விதிக்கப்பட்டது. திணைக்களத்தினால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளில் பிரமிட் வலையமைப்பு சந்தைப்படுத்தல் திட்டம் தொடர்பான புலனாய்வும் ஒன்றாகும். இத்திட்டத்தில் பங்கேற்பதற்காக பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் அவர்களது கொடுகடன் அட்டைகளினூடாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளை மேற் கொண்டிருந்தனர். மேற்குறிப்பிட்ட திட்டத்தில் மூன்றாந் தரப்பினர் இணைவதனை இயலச் செய்வதற்காக வெளிநாட்டு செலாவணிக் கொடுப்பனவு களைச் செய்வதற்காக அட்டைகளை வைத்திருப்போர் தமது அட்டைகளைப் பயன்படுத்தியுள்ளமையை புலனாய்வுகள் எடுத்துக்காட்டின. அத்தகைய அட்டைகளை வைத்திருக்கும் 150 ஆட்களினால் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகள் தொடர்பான புலனாய்வுகள் 2004 இல் மேற் கொள்ளப்பட்டன.

தகவல்

மத்திய வங்கியின் தகவல் திணைக்களமானது வங்கியினுள்ளும், நிதிச்சந்தைகளுக்கும் பொது மக்களிடையேயும் பேரண்டப் பொருளாதாரம், வங்கித்தொழில், நிதியும் சமூகப் பொருளாதார அபிவிருத்தியும் பற்றிய தகவல்களை மிக துல்லியமாகவும், நம்பகத்தன்மையுடனும் வழங்குவதற்கு பொறுப்பாக வுள்ளது. 2004 ஆம் ஆண்டுக் காலத்தில், இத் திணைக்களமானது தகவல்களைப் பெறுவதற்கு வசதியளிப்பதற்காக மின்அஞ்சல், உள்ளக இணையத்தளம், இணையத்தளம் போன்ற நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி தகவல்களை பரப்பும் அதன் மூலோ பாயத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

நடைமுறை நிகழ்வுகள் பற்றி வங்கி அலுவலர் களுக்கு பூரணமான தகவலளிக்கும் நோக்குடன் பின்பற்றப்பட்ட கொள்கைகள், பின்பற்றப்படவுள்ள கொள்கைகள் மற்றும் ஏனைய தொடர்பான செய்திகளையும், நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக திணைக்களத்தினால் "கவுலுவ" என்ற மாதாந்த சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. இத்திணைக்களம் தொடர்ந்தும் பரந்த வீச்சிலான உள்நாட்டு பன்னாட்டு நிதியியல் தகவல்களையும், வங்கியினுள் இடம்பெறும் நிகழ்வுகளையும் திணைக்களத்தின் வெப்தளத்தில் நாளாந்தம் பூரணப் படுத்துகின்றது. இத்திணைக் களத்தினால் 2003 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு அறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தியின் தோற்றப்பாடுகள் என்பன வற்றின் மின்னியல் பிரதி 2004 இல் சிங்கள பிரதியை உள்ளடக்கியதன் மூலம் மேம்பாடடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில், நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக விளங்கிய பிரமிட் திட்டங்கள் பற்றி கவனத்திலெடுத்து. சட்டவாக்கங்கள் அற்ற நிலையில் பிரமிட் திட்டங்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் மற்றும் அபாயங்கள் பற்றி பொதுமக்களுக்கு விளம்பர ங்கள்/அறிக்கைகள் மூலமாகவும் கட்டுரைகளை வெளியிடுதல் மூலமாகவும் அறிவூட்டுவதில் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டது.

இத்திணைக்களம் 2004 இல் 527 பத்திரிகை வெளியீடுகளையும், 9 வர்த்தமானி அறிவித்தல்களையும் வெளியிடல் மற்றும் 161 விளம்பரங்களையும் செய்தித்தாள்களில் பிரசுரித்தல் என்பன மூலம் வங்கியின் பொதுமக்களுக்கான அறிவூட்டல் தொழிற் பாடுகளை கையாண்டது. இவ்வாண்டில் திணைக்களம் பொருளாதார கொள்கைகள் மற்றும் அபிவிருத்திகள் சம்பந்தமான 11 பத்திரிகையாளர் மாநாடுகளையும், ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கான கூட்டத்தினையும் ஒழுங்கு செய்தது. இது இத் திணைக்களம் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது விரிவுரைத் தொடர்களுக்கான ஊடக ஒருங்கிணைப்பினையும் கையாண்டது.

திணைக்களம் தொடர்ந்தும் பொருளாதாரச் சஞ்சிகைகளை மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. அவை மாதாந்த "சட்டகன", ஊழியர் சேமநிதிய திணைக்களத்திற்காக காலாண்டு "நியூஸ் சேர்வே" மற்றும் "சட்டகன" வின் தமிழ் மொழி பெயர்ப்பான "குறிப்பேடு" என்பவையாகும்.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே வங்கியின் அச்சிடல் தேவைகள் மற்றும் பிரசுரங்களின் பெரும்பகுதி வங்கியின் அச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டன. கிரமமான அச்சிடல் வேலைகள் ஆண்டறிக்கை, மாதாந்த செய்தித்திரட்டு, பொருளாதார சமூக புள்ளிவிபரங்கள், இலங்கை சமூக பொருளாதார தரவு, உயர் அலுவலர் ஆய்வு "சட்டகன" நியூஸ் சேர்வே, கவுலுவ மற்றும் வங்கி தினக்குறிப்பேடு என்பவற்றை உள்ளடக்கும். "கந்துர ட்ட வின் மரபுரிமை" (சிங்களத்திலும் ஆங்கிலத்திலும்) என்ற சிறப்பு வெளியீடும் இவ்வாண்டில் வெளியிட்டு வைக்கப்பட்டது. 2004 இல் அச்சகம் மொத்தமாக 294

அச்சிடும் வேலைகளை கையேற்றது. இத்திணைக்களம் வங்கிக்கு நிழற்படம் மற்றும் சித்திர வரைவுப் பணிகளையும் வழங்கியது.

இத்திணைக்களம் தொடர்ந்தும் அனைத்து வங்கி வெளியீடுகளின் விற்பனைகளையும் விநியோக வேலைகளையும் இராஜகிரியவிலுள்ள, வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில் அமைந்துள்ள விற்பனைபீடம் மற்றும் நாடெங்கிலுமுள்ள புத்தகக் கடைகளினூடாகவும் கையாண்டது. திணைக்களம் முதன் முதலாக 2004 செத்தெம்பரில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி 2004 இலும் பங்கு பற்றியது. இது விற்பனை மற்றும் வங்கி வெளியீடுகள் பற்றிய பொதுமக்கள் மத்தியிலான விழிப்புணர்வின் நியதிகளில் மிகப்பெரிய வெற்றியாகும்.

இத்திணைக்களம் 2004 ஒத்தோபரில், மத்திய வங்கியின் பழைய வெளியீடுகள், புத்தகங்கள், நாளிதழ்கள் (2002 முன்னர் வெளியிடப்பட்டவை) போன்றன வற்றின் இலவச விநியோகத்தை நடாத்தியது. ஒரு வார கால நிகழ்ச்சித் திட்டத்தில் 5,000 இற்கும் மேலான நபர்கள் இலவசமாக வெளியீடுகளையும், புத்தகங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இத்திணைக்களம், வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்திலும் மற்றும் வெளியிடங்களிலும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நடாத்தப்பட்ட இலங்கைப் பொருளாதாரம் மற்றும் மத்திய வங்கியின் பங்களிப்பும் தொழிற்பாடுகளும் என்பவற்றை உள்ளடக்கிய பாடசாலை விரிவுரை நிகழ்ச்சித் திட்டத்தினை ஒழுங்கு செய்வதிலும் ஈடுபட்டிருந்தது. ஊழியர் சேமநிதியத் தொழிற்பாடுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையில் ஊழியர் சேமநிதிய திணைக்களத்திற்காக ஒரு கல்வியறிவூட்டும் தொலைக்காட்சி நாடகத்தை இத்திணைக்களம் தயாரித்தது.

நூலகமும் தகவல் நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும், வங்கி அலுவலர்களுக்கும் வேண்டுதலின் பேரில் மற்றைய வர்களுக்கும் நூலக பணிகளை தொடர்ந்து வழங்கியது. இது தமது புத்தக சேகரிப்புக்களை 14,562 இலிருந்து 17,194 இற்கும், அறிக்கைகளை 9,627 இலிருந்து 11,887 இற்கும், இறுவட்டுக்களை 843 இலிருந்து 900 இற்கும், தேசப்படங்களை 22 இலிருந்து 99 இற்கும் இவ்வாண்டில் அதிகரித்துக் கொண்டதுடன், ஒன்று திரட்டப்பட்டு கட்டப்பட்ட 944 தொகுதிகளும் சேகரிக்கப்பட்டன. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்திலுள்ள நூலகமும் அதன் சேகரிப்புக்களை 4,637 இலிருந்து 4,896 ஆக அதிகரித்துக் கொண்டது.

மேலும் தேசமான்ய என்.யூ. ஜயவர்த்தனவின் நூலகச் சேகரிப்புக்களில் பெரும்பகுதி இலங்கை மத்திய வங்கி நூலகத்தினரால் பெறப்பட்டு அச்சேகரிப்புக்கள் 2004 ஒத்தோபரிலிருந்து காலம் சென்ற திரு.என்.யூ. ஜயவர்த்தன வாசிப்பு அறை எனப் பெயரிடப்பட்ட நூலகத்தின் ஒரு தனியான பகுதியில் வைத்து பேணப்படுகின்றன,

மேலும், நூலகமும் தகவல் நிலையமும் ஏற்கனவேயிருக்கும் பணிகளுக்கு மேலதிகமாக ஆறு நேரடிப் பணிகளுக்கான நேரத் தொடர்புகளுடன் 195 நாளிதழ்களுக்கு சந்தா செலுத்தியது. ஆய்வுக்குரிய ஆண்டில் நூலகமும் தகவல் நிலையமும் அண்மைய சேகரிப்புக்கள் (புதிய நூல்கள்), தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளின் பட்டியல்கள், மத்திய வங்கித் தொழில் பற்றிய செய்திகள் நியூஸ் அலேட் ஆகிய மின்னியல் வெளியீடுகளை தொடர்ந்தும் திரட்டி உள்ளக இணையத்தளம் ஊடாகப் பரவச்செய்தது. புத்தகச் சுற்றோட்டமானது கிடைக்கோடு இடப்பட்ட உறுப்பினர் அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தன்னியக்கப்படுத்தப்பட்டு சுற்றோட்டம் மேலும் அதிகரிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டுக் காலத்தில், நூலகமும் தகவல் நிலையமும் மத்திய வங்கி உலகிலுள்ள 36 மத்திய வங்கிகளின் 112 நூலகவியலாளர்களை உறுப்பினர் களாகக் கொண்ட நூலகவியலாளர் குழு வலை யமைப்புடன் இணைக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப வசதிகளை விரிவாக்குவதற்கும், வங்கி அலுவலர்களின் தகவல் தொழில்நுட்ப தேர்ச்சியினை மேம்படுத்தவதற்கும் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களத்தின் தொழிற் பாடுகள முக்கியமாக பின்வரும் துறைகளில் கவனத்தை செலுத்தின.

1. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையின் நடைமுறைப்படுத்தல்.
2. இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினை உயர்த்துதல்.
3. தகவல் தொழில்நுட்ப தொழிற்பாடு களிலுள்ள தொழிற்பாட்டு இடர் நேர்வுகளைத் தணிப்பதற்கு தகவல்

தொழில்நுட்ப கணக்காய்வாளர்களினால் விதந்துரைக்கப்பட்ட சாத்தியமான மாற்று வழிமுறைகளை நடைமுறைக்கிடல்.

4. பயன்படுத்துநர்களுக்கு மேம்பட்ட வசதிகளை வழங்குவதற்கும் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு அம்சங்களை வலுப்படுத்துவதற்கும் தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பினை அதிகரித்தல்.

5. மென்பொருள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலினூடாக பயன்படுத்தும் திணைக்களங்களினால் கையாளப்படும் தொழிற்பாடுகளைத் தன்னியக்கப்படுத்தல்.

6. குறித்துரைக்கப்பட்ட கிடைக்கத் தக்கதாகவுள்ள தரங்களை எய்தும் விதத்தில் கணனி வலையமைப்பினையும் அனைத்து முக்கிய கணனி முறைகளையும் பேணுதல்.

1. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையினை நடைமுறைப்படுத்தல்

இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையினையும் அரச பிணையங்களின் தீர்ப்பனவு முறையினையும் தன்னியக்கப்படுத்துவதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவுமுறைச் செயற்றிட்டம் என்பன இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டன. அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறைச் செயற்றிட்டம் 2003 செத்தெம்பரில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது இது நடைமுறைப்படுத்தப்பட்ட திலிருந்து தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவுமுறை 2004 பெப்புருவரி 03 இல் வெற்றிகரமாக நடைமுறைக்கிடப்பட்டது. பத்திரங் களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைக்கான மென்கலம் லொஜிகா சி எம் ஜீ இனால் வழங்கப்பட்டதுடன் இது ஏஐஎக்ஸ் 5.1 தொழிற்பாட்டு முறையினாலும் இன்போமிக்ஸ் தரவுத்தளத்தினாலும் தொழிற் படுகின்றது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைச் செயற்றிட்டத்தின் நடைமுறைப் படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பின்வரும் முக்கிய ஒன்றோடொன்று இணைந்து செயற்படக்கூடிய கணனிமுறை நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

அ. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தை தொழிற்பாட்டு முறைக்கான மின்னியல் விலைக் குறிப்பீட்டுமுறை

ஆ. பத்திரவடிவிலான பிணையங்களை உருவற்றதாக்கி பத்திரங்களற்ற வடிவிற்கு மாற்றும் வசதி

இ. வாராந்த திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் ஏலங்களின் பிணைய சொத்துப் பட்டியலை பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைக்கு மாற்றல் செய்தல்.

ஈ. பிணைய சொத்துப்பட்டியலினதும் பிணை உடைமைகளினதும் நாளாந்த விலைகளை நாளதுவரை பூரணப்படுத்தல்

உ. பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியூடாக பெருந் தொகையான கொடுக்கல் வாங்கல்களை சேமித்து வைத்தல்

மேலும், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையின் கணனிமுறை ஏற்புத்தன்மையைப் பரீட்சிப்பிலும் பயன்படுத்துநருக்கு பயிற்சியளிப்பிலும் பெருமளவிற்கு ஈடு பட்டிருந்தது.

2. ஊழியர்களின் தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சியை உயர்த்துதல்

இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் வங்கித் தொழில் சமூகத்தினரிடையே தகவல் தொழில்நுட்ப அறிவினை அதிகரிக்கும் பொருட்டு வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்திற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் மூலவள ஆட்களை வழங்கி வருகிறது. மேலும், மேம்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் பற்றி அறிவூட்டவும் கணனிப் பயன்படுத்தல் மீதான வழிகாட்டல்களை வழங்கு வதற்காகவும் மத்திய வங்கியின் திணைக்களங்களது தொடர்பு அலுவலர்களுக்காக கிரமமான கூட்டங்களும் பயிற்சித் தொடர்களும் வழங்கப்பட்டன. மேலும் முன்னேற்றங்களை வேண்டி நிற்கும் தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்பான துறைகளை அடையாளங் காண்பதற்காக மத்திய வங்கியினுள் "தகவல் தொழில்நுட்ப திருப்தி அளவீடு" ஒன்றினையும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் நடத்தியது.

3. தகவல் தொழில்நுட்ப கணக்காய்வு விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்தல்

தகவல் தொழில்நுட்ப கணக்காய்வினை மேற்கொண்ட எர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனம், இலங்கை மத்திய வங்கியின் தகவல் சொத்துக்களை பாதுகாக்கும்

பொருட்டும் தகவல் முறைமைகளின் பயன்படுத்துநர்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குமாக வலுப்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படும் துறைகளை அடையாளம் கண்டது. அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்ட இடர்நேர்வுகளைத் தணிக்கும் நோக்குடன் பின்வரும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ) அவசரகாலங்களின்போது அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து கணனிப் பிரயோகங்களை மேற்கொள்ள முடிவதனை உறுதிப்படுத்துவதற்காக அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை, பத்திரங்களற்ற பாதுகாப்புத் தீர்ப்பனவு முறை மற்றும் பொதுப்பேரேடு என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து முக்கிய பிரயோகங்களும் பரீட்சிக்கப்பட்டன.

ஆ) ஆவணப்படுத்தல் நியமங்கள் உட்பட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மென்பொருள் அபிவிருத்தி வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல்.

இ) தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு கொள்கை ஆவணத்தினை தயாரித்து சுற்றோட்டத்திற்குவிடல்.

ஈ) தொடர்ச்சியான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக காணக்கூடிய சாத்தியமான எதிர்பாரா நிகழ்வுகளையும் அதிலிருந்து மீள்வதற்கான மாற்று தொழிற்பாடுகளையும் இனங்கண்டு அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் முறை பொதுப்பேரேட்டு முறை என்பன வற்றிற்காக தொடர்ச்சியான தொழிற்பாட்டிற்கான திட்டங்களைத் தயாரித்தல்.

உ) தரவுகளை அனுப்புவதில் ஏற்படும் தொடர்பூட்டல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக செல்வழி மட்ட தரவு குறியீட்டிலனுப்பல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.

ஊ) தகவல் தொழில்நுட்பப் பிரயோகங்களின் பயன்படுத்துநர்களின் நன்மைகருதி தகவல் தொழில்நுட்ப உதவிப்பீடமொன்று நிறுவப்பட்டு மு.ப. 7.30 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரை தொழிற்படுகின்றது.

எ) டிபீ/400 அல்லது எஸ்கியூஎல் சேர்வகத் தரவுத் தளத்தினை பாதுகாப்பான தரவுத் தளமாக்குவதற்காக டி தளத்தினை அனைத்து பிரயோகங்களும் பயன்படுத்துவதற்கு மாற்றுதல்.

4. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை விரிவாக்குதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு, கேள்விப் பத்திரச் சபைகள், மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்தல் என்பனவற்றில் தீவிரமாகப் பங்கேற்பதனூடாக அனைத்துத் தகவல் நுட்பத்துடன் தொடர்பான கொள்வனவுகள் மற்றும் பணிகளுக்கும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதில் ஈடுபட்டிருந்தது. மேலும் பின்வரும் உட்கட்டமைப்பு முன்னேற்றங்கள் வலையமைப்பில் மேற்கொள்ளப்பட்டன.

அ) வங்கியில் இணையத்தளப் பயன்பாட்டினை அதிகரிக்கும் பொருட்டு இணையத்தள தொடர்புகள் 128 கேபீஎஸ்இல் இருந்து 256 கேபீஎஸ் இற்கு அதிகரிக்கப்பட்டது.

ஆ) சுவிப்ற் X.25 இலிருந்து சுவிப்ற் நெட்டிற்கு மாற்றுதல்

இ) ஸ்பாம் மற்றும் ஜங் மின்-அஞ்சலைக் கட்டுப்படுத்துவதற்கு ஈறஸ்ட் உள்ளக கட்டுப்படுத்தி ஒன்றினை நிறுவுதல்.

ஈ) இராசகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் உள்ளக வலையமைப்பு ஒன்றினை ஏற்படுத்தல்

உ) தகவல்களை சேமித்து வைக்கும் பின்தளமாகப் பயன்படுத்தப்படும் விதத்தில் மாற்று இழை ஒளி ஆதாரத் தளமொன்றினை நிறுவுகின்றமை.

ஊ) அனர்த்த மீட்புத் தளத்துடன் பிரதான தளத்தினை இணைக்கின்ற தொடர்பூட்டல் வழியினை அங்கீகாரமற்றவர்கள் பயன்படுத்துவதனைத் தடுத்தல்.

மத்திய வங்கியின் வலையமைப்பு விரிவாக்கப்பட்டிருக்கிறது. இதன் தற்போதைய வலையமைப்பு 1000 இற்கு மேற்பட்ட கணனிகளை வலையமைப்புடன்

நேரடியாக இணைக்கும் வசதியை உள்ளடக்கியிருக்கிறது. இதில் 904 மின் அஞ்சல் வசதிகளுடன் இணைக்கப்பட்டிருக்கையில் 275 இற்கு இணையத்தள வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

5. மென்பொருள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

வங்கியின் தொழிற்பாடுகளை மேலும் தன்னியக்கப்படுத்துவதற்காக, தகவல் தொழில் நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் ஏஎஸ்/ 400 அதேபோன்று தனியாள் கணனி வலையமைப்புச் சூழலில் பல கணனி பிரயோகங்களை விருத்தி செய்து வருகிறது. நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டினை வலுப்படுத்தும் ஒரு வழிமுறையாக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் ஆகியோரிடமிருந்து தேவையான நிதியியில் கூற்றுக்களின் அறிக்கையிடல்களுக்கும் சேமிப்புக்களுக்குமாக அதன் முதலாவது வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட ஒன்றுடனொன்று இணைந்து செயல்படக்கூடிய பிரயோகங்களைத் விருத்தி செய்ய தொடங்கியிருக்கிறது. செயற்றிட்டத்தின் முதலாவது கட்டம் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்காகத் தொடங்கப்படவுள்ளதுடன் இது பொருளாதார ஆராய்ச்சி மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் போன்ற மற்றைய திணைக்களங்களின் தேவைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் விரிவாக்கப்படும். மேலும், ஆய்விற்குரிய ஆண்டில் பின்வரும் மென்கலச் செயற்றிட்டங்கள் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நாணயத் திணைக்களத்திற்காக பிரதான நிலவறை, வழங்கல் நிலவறை மற்றும் உத்தரவாத பெட்டிகளை வழங்குதல் என்பனவற்றை கணனி மயப்படுத்தல்.

(ஆ) மேலதிக பாதுகாப்பு பண்புகளுடன் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் நிதிய முறைகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் என்பனவற்றின் டி தளச் சூழலிலிருந்து ஏஎஸ்/400 சூழலுக்கு மாற்றியமை.

(இ) சம்பள அதிகரிப்பின் காரணமாக சம்பள/ ஓய்வூதிய நிலுவைகளைக் கணித்தல்.

(ஈ) அலுவலர்களின் நலன்புரிக் கடன்களை மீள் அட்டவணைப்படுத்துவதுடன் நலன்புரிக் கடன்களைத் தன்னியக்கப்படுத்தல்.

(உ) வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்திற்கும் மத்திய வங்கி வலுவூட்டல் செயற்றிட்டங்களுக்குமான வெப் தளத்தினை விருத்தி செய்தல்.

(ஊ) இடர்நேர்வு பதிவேட்டினை பேணுவதற்காக மென்பொருளொன்றினை விருத்தி செய்தல்.

(எ) நலன்புரித் திணைக்களத்திற்காக அலுவலர் சிற்றுண்டிச்சாலைக்கான இருப்புக் கட்டுப்பாட்டு முறையினை விருத்தி செய்தல்.

(ஏ) நலன்புரித் திணைக்களத்திற்காக மருந்தகத்தினைக் கணனிமயப்படுத்தல்.

(ஐ) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்காக ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்குள் வருவதனை கண்காணிக்கும் முறையினை விருத்தி செய்தல்.

ஊ.சே. நிதிய திணைக்களத்திற்காக தகவல் தொழில்நுட்ப மூலவளங்களை முகாமைப்படுத்தல்

ஊ.சே.நிதிய பிரயோக முறையினைப் பேணும் அதன் தொழிற்பாட்டினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் பேணிவருவதுடன் ஆய்விற்குரிய ஆண்டில் அதனை மேலும் தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. சிலிங்கோ கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊ.சே.நிதியத்தின் புதிய சேகரிப்பு பிரிவினை ஊ.சே.நிதியத்தின் முதன்மை சேர்வருடன் இணைக்கும் புதிய வலையமைப்பு ஒன்று நிறுவப்பட்டது. அரசதுறைக்கான உதவுதொகை செலுத்தலூடான ஓய்வூதிய திட்டத்தினைக் கணனி மயப்படுத்துவதற்கான மென்பொருளினை அபிவிருத்தி செய்து நடைமுறைக்கிடும் நடவடிக்கைகளிலும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஈடுபட்டது. அனைத்துச் சேகரிப்புக்களையும் உடனடியாக பதிவு செய்வதற்காக ஊ.சே.நிதிய விசாரணை பீடங்களை கணனி மயப்படுத்துவதற்கான முறையொன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. கொடுப்பனவுகளை மேலும் தன்னியக்கப்படுத்தவதற்காக மீளளிப்பு வேலைச் செயல்முறைத்திட்டமொன்று விருத்தி செய்யப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொழிற் திணைக்களத்திற்கும் அதனுடன் தொடர்பான நிறுவனங்களுக்கும் தகவல்களைத் தொடர்ந்தும்

வழங்கியதுடன் இடம்பெயர் பணி நிலையங்களிலிருந்து உடனடி தொடர்பு இணைப்புக்களினூடாக ஊ.சே.நிதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை வழங்குவதிலும் ஈடுபட்டிருந்தது.

சில்லறைக் கொடுப்பனவு முறையினை மேலும் நவீன மயப்படுத்துவதற்காக, உலக வங்கியின் நிதி உதவியுடன் மத்திய வங்கி லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு காசோலையை அனுப்பாது அதன் பிர திமையினை அனுப்புவதன் மூலமாக செயற் றிட்டமொன்றினைத் தொடங்கியது. பிரயோக மென்பொருள் கொள்வனவு மற்றும் வன்பொருள் என்பனவற்றிற்காக இரு விலைக்கோரல்களுக்காக விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள் மற்றும் விலைக் குறிப்பீடுகளின் தொழில்நட்ப மதிப்பீடு என்பன வற்றைத் தயாரிக்கும் பணியில் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் முக்கிய பங்கினை வகித்ததுடன் செயற்றிட்டக் குழுவிலும், வழிகாட்டல் குழுவிலும் பங்கேற்றதன் மூலமாக தொழில்நுட்ப உதவிகளையும் தொடர்ந்து வழங்கியது.

பன்னாட்டு தொழிற்பாடுகள்

2004 இன் நடவடிக்கைகள் மீதான அறிக்கை

(i) வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம்

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்துவதுடன் செலாவணி வீத அசைவுகளைக் கண்காணிக்கின்ற வேளையில், கொள்கை வகுப்பிற்கு வசதியளிக்கும் விதத்தில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு செலாவணி சந்தைகள் மீதான முகாமைத்துவ தகவல்களையும் வழங்குகின்றது. இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணும் பொருட்டும் அதன் தற்போதைய பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் சாத்தியமானளவிற்கு பெருமளவு சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் நாணய விதிச் சட்டத்தின் நியதிகளின்படி/மத்திய வங்கி போதுமானளவு பன்னாட்டு ஒதுக்குகளை திரவ நாணயங்களிலும் முக்கியமான ஒதுக்கினை தங்கத்திலும் பேணவேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் பெறுமதியினை அதிகரிக்கும்பொருட்டு, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இவ்வொதுக்குகளை பன்னாட்டுப் பண மற்றும் மூலதனச் சந்தைகளில் முதலீடு செய்தது. இது நாட்டின் செல்வத்தினை முகாமைப்படுத்தி வருவதனால் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் நின்று ஒப்பிதலளிக்கப்பட்ட இணைக்கிணையாளர்களினூடாக முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பன்னாட்டு ஒதுக்குகளில் முக்கியமான பகுதி நிலையான வருமானப் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மீதி பணச்சந்தை கருவிகளில் அதாவது நிலையான வைப்புக்கள், அழைப்பு வைப்புக்கள் மற்றும் தங்கத்தில் முதலீடு செய்யப் பட்டுள்ளன. வெளிநாட்டு வங்கிகளுடனான நடைமுறைக் கணக்குகள் (ஓரிரவு முதலீட்டு வசதிகளுடன்) நாளாந்த தேவைகளுக்காகப் பேணப்படுகின்றன.

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் கடமைகளை ஆற்றுகையில், வட்டிவீதங்களையும், முக்கிய நாணயங்களுக்கிடையேயான செலாவணி வீதங்களையும் அவற்றிற்கான ஏதுக்காரணிகளையும் கிரமமாக மீளாய்வு செய்தது. 2004இல் ஒதுக்குகள் பேணப்பட்ட முக்கிய நாணயங்களாக யூரோ, இசுடேர்லிங் பவுண், மற்றும் ஐ.அ.டொலர்கள் என்பன விளங்கின. உலகின் நிதிச் சந்தைகளில் உருவாகும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு காலத்திற்குக் காலம் உள்ளமைப்பின்மீது பொருத்தமான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் இடர்நேர்வினைப் பன்முகப்படுத்துகின்றதொரு மூலோபாயமாக சொத்துப் பட்டியலின் ஒரு சிறு பகுதியை மற்றைய மாற்றத்தக்க நாணயங்களில் தொடர்ந்தும் பேணிய வேளையில் இலாபத்தினை உச்சப்படுத்தி வருகின்றது. வங்கியின் படுகடன் பணிக்கொடுப்பனவுகளும், நாணயங்களினதும் பிணையங்களினதும் வருமான உருவாக்க இயலளவும்கூட நாணய உள்ளமைப்பினை நிர்ணயிக்கின்றன. 2004ஆம் ஆண்டுப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளினூடாக உருவாக்கப்பட்ட மொத்தத் தேறிய வெளிநாட்டு வருமானம் ஐ.அ.டொலர் 77 மில்லியனாக அல்லது ரூ.7.8 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2003 இல் இம் மூலங்களிலிருந்தான வருவாயினைவிட ஐ.அ.டொலர் 9.5 மில்லியன் அல்லது ரூ.960 மில்லியன் அதிகமானதாகும். இதற்கு, வெளிநாட்டு சொத்துப் பட்டியலின் நாணயப் பகிர்ந்தளிப்பில் செய்யப்பட்ட சீராக்கமும் ஒப்பீட்டு ரீதியில் நிலையான வருமானப் பிணையங்களின் சிறந்த விலைகளுமே முக்கிய காரணங்களாகும்.

வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் வங்கி முதலீடுகளுடன் இணைந்து காணப்படும் முக்கிய

இடர்நேர்வுகளாக சந்தை இடர்நேர்வு (வெளிநாட்டுச் செலாவணி வீத இடர்நேர்வு மற்றும் வட்டிவீத இடர்நேர்வு) கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன காணப்படுகின்றன. இவ்வனைத்து இடர்நேர்வுகளையும் தணிப்பதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

வெளிநாட்டு செலாவணி வீத இடர்நேர்வானது வெளிநாட்டுச் செலாவணி வீத தளம்பல்களின் விளைவாக மூலதன இழப்புக்களில் ஏற்படும் இடர்நேர்வாகும். வங்கியானது பல்வேறு நாணயங்களுக்கிடையிலான அதன் வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துடமைகளை பரவலாக அமைப்பதன் மூலமும் அதன் சொத்துப்பட்டியலின் நாணயப் பங்கீட்டினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதன் மூலமாகவும் செலாவணிவீத இடர்நேர்வுகளை மட்டுப்படுத்த முயற்சித்தது. வட்டிவீத இடர்நேர்வு அல்லது வட்டிவீத அசைவுகளுக்கேற்ப வங்கியின் முதலீடுகளின் வெளிப்படுத்துகையானது பல்வேறு நாணய பிரிவுகளின் மட்டங்களிலுள்ள சொத்துப்பட்டியல் மட்டங்களிலும் உள்ளக ரீதியில் நிறுவப்பட்ட அடித்தள அளவுக்குறிக்கெதிராகவும் மதிப்பிடப்படுகிறது. உள்ளக ரீதியில் நிறுவப்பட்ட அடித்தள அளவுக்குறியிலிருந்து முதலீட்டு சொத்துப்பட்டியல் வேறுபடின் அவை காலத்திற்குக்காலம் மதிப்பிடப்படுவதுடன் ஒப்பதலளிக்கப்பட்ட மட்டங்களுக்கெதிராகவும் ஒப்பிடப்படுகிறது.

கொடுகடன் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு அதாவது பிணையங்களின் வழங்குநர்கள் அல்லது இணைக்கிணையாளர்களின் தவறுகையின் காரணமாக தோன்றும் இழப்புக்களின் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு - இணைக்கிணைத் தரப்பினரின் கொடுகடன் நம்பகத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு (கொடுகடன் தரமிடலை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பொன்றின் மீது மதிப்பிடப்பட்டது) தகைமைபெற்ற பயன்படுத்துநர்கள் மற்றும் இணைக்கிணையாளர்களைக் கொண்ட விபரமான வரையறை அமைப்பொன்றை உள்ளடக்கிய இணைக்கிணை கொடுகடன் இடர்நேர் முகாமைத்துவ அமைப்பொன்றினை பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் பயன்படுத்தியது. கொடுகடன் இடர்நேர்வானது, தகைமை சார்ந்த தேவைப்பாடுகளை ஏற்படுத்துதல், வெளிப்படுத்துகைகளை உயர்தரக் கருவிகளுக்கு மட்டுப்படுத்தல், வழங்குனர்களுக்கும், இணைக்கிணையாளர்களுக்கும், நிதியியல் கருவிகளுக்கும் தனிப்பட்ட ரீதியாக கொடுகடன் இடர்நேர்வு வரையறைகளை வழங்குதல் என்பனவற்றினூடாக முகாமைப்படுத்தப்படுகிறது.

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது சொத்துப் பட்டியலில் ஒரு பகுதியை கட்டாயமாக திரவத் தன்மையாக்கும் சந்தர்ப்பத்தின்போது ஏற்படும் தேவையற்ற உயர் கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கொண்டுள்ள இடர்நேர்வு என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. திரவத்தன்மை இடர்நேர்வானது நிதியியல் கருவிகளுக்குத் தேவையான திரவத் தன்மையினை உருவாக்குவதன் மூலமும் பன்னாட்டு ஒதுக்குகளில் பெரும்பகுதியினை குறுங்கால முதிர்ச்சிகளுடன் கூடிய உயர் திரவத்தன்மையினைக் கொண்ட நிதியியல் கருவிகளில் முதலீடு செய்வதன் மூலமும் முகாமைப்படுத்தப்படுகிறது.

தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் மனித தவறுகள், முறைகளிலான தவறுகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதுமானளவில் இல்லாமை என்பனவற்றின் காரணமாக தோன்றுகின்றன. வங்கியானது பல்வேறுபட்ட வழிமுறைகள், கொடுக்கல் வாங்கல் செயல்முறைகளின் பல்வேறு தொழிற்பாடு களையும் ஒன்றிணைத்துக் கண்காணித்தல், வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல் (வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக்குழு) தொழிற் பாடுகளுக்கு துல்லியமான தீர்மானங்களை மேற்கொள்ளும் குழுவினைக் கொண்டிருத்தல் வர்த்தக நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகளை அதிகரித்தல், பல்வேறுபட்ட தொழிற்பாட்டு துறைகளுக்கு நேரடியாக அணுகும் தன்மையினைக் கட்டுப்படுத்தல், சந்தைத் தொழிற்படுத்தல் மற்றும் தீர்ப்பனவுத் துறைகளுக்கு தன்னியக்கப்படுத்தப்பட்டதும் கைகளினால் மேற்கொள்ளப் படக்கூடியதுமான பின்னரங்க நடைமுறைகளை அறிமுகப்படுத்தல், ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளின்மீது விரிவான வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தல் என்பனவற்றினூடாக தொழிற்பாட்டு இடர்பாடுகளை மட்டுப்படுத்துகிறது.

(ii) உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகவும் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தினை ஒழுங்கான முறையில் சீராக்குவதற்குமாக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான நிகழ்வுகள், வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமை என்பனவற்றை மிக நெருக்கமாகக் கண்காணிக்கிறது. இது, பல்வேறு நாணயங்களின் மீதான இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்களை அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தொடர்பான ஏனைய தரப்பினருக்கு அவற்றின் வேண்டுகோளின் பேரில் வழங்குகிறது.

2004 இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு இலங்கை ரூபா 2003 இறுதியில் காணப்பட்ட மட்டமான ரூ.96.1382 உடன் ஒப்பிடுகையில் ரூ.104.6050 ஆக விளங்கி 7.52 சதவீதமான தேய்வினை எடுத்துக்காட்டியது. பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட மற்றைய முக்கிய நாணயங்களின் சார்பளவிலான பெறுமான வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அந் நாணயங்களுக்கெதிராகவும் ரூபா தேய்வடைந்தது. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2003இன் ஐ.அ.டொலர் 3647.0 மில்லியன் கொண்ட அளவுடன் ஒப்பிடுகையில் 2004 இல் ஐ.அ.டொலர் 4279.5 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 632.5 மில்லியனால் அல்லது 17 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது.

சட்டம்

முன்னைய ஆண்டுகளைப்போன்று வங்கியின் சட்டத் திணைக்களம் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்குதல், நீதிமன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றங்களிலும் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தல், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் சட்ட மறுசீரமைப்பிற்கான பங்களிப்பு போன்ற அதன் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

2004 ஆம் ஆண்டில், சட்டத் திணைக்களம் சட்டவாக்கம், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான ஆவணங்களுக்கு திருத்தங்களைத் தயாரித்தல் போன்ற விடயங்களில் பல்வேறு திணைக்களங்களுடனும் நெருக்கமாக பணியாற்றியது. முக்கியமாக, சட்டத் திணைக்களம் 2004 இல் சட்டமியற்றப்பட்ட 2004 இன் 1 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம், 2004 இன் 2 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட இருப்புக்களும் பிணையங்களும் (திருத்தச்) சட்டம், மற்றும் 2004 திசெம்பரில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பவற்றை உள்ளடக்கிய நிதித்துறையுடன் தொடர்பான பல சட்டங்களுக்கு திருத்தங்களைத் தயாரித்தது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பனவற்றிற்கான ஒழுங்கு விதிகளும் ஏனைய ஆவணப்படுத்தல்களும் கூட 2004 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது.

புதிய மத்திய வங்கித்தொழில் மற்றும் வங்கித்தொழில் சட்டவாக்கங்களை வரைவதற்காக உலக வங்கி மற்றும் ப.நா.நிதியம் என்பவற்றின் தொழில்நுட்ப உதவியுடன் வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டத்திலும் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. கொடுப்பனவுகள், தீர்ப்பனவு முறைகள் தொடர்பான விடயங்களில் எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கென கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளின் சட்ட வரைவு ஒன்றும் 2004 இல் வரையப்பட்டது.

முகாமைக் கணக்காய்வு

2004 ஆம் ஆண்டில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் அதனது சுதந்திரமான கணக்காய்வினை மேற்கொண்ட வேளையில், வங்கியின் தொழிற்பாடுகளினதும், கட்டுப்பாடுகள் முறைகளினதும் செயற்றிறனை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கியது. இதன் மூலம் வங்கி அதன் உபாய குறிக்கோள்களை எய்தக்கூடியதாயிருக்கும்.

முன்னைய ஆண்டினைப் போலவே, கணக்காய்வுக்குழு வங்கியின் வருடாந்த கணக்காய்வுத் திட்டம், கணக்காய்வு செய்முறை, நிதியியல் கூற்றுக்கள் மற்றும் தொடர்பான நிதியியல் அறிக்கையிடல் நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் என்பவற்றை தொடர்ந்தும் மேற்பார்வை செய்தது.

கணக்காய்வு பட்டயம் மற்றும் 2004 இன் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் என்பவற்றுக்கு இணங்க பல கணக்காய்வு பொறுப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில், நிறுவப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கான இணங்குவிப்புக் கணக்காய்வு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நடைமுறைப் படுத்தலை பரிசீலிப்பதற்காக பின்தொடர் கணக்காய்வு மீளாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கையில் வேளாண்மைப் பண்டங்களுக்கான முன்னோக்கிய சந்தைகளை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டத்திற்காக பெறப்பட்ட புத்தாக்கத்திற்கும் அபிவிருத்திக்குமான பன்னாட்டு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கொடை மீதான இறுதிக் கணக்குகளையும், செயலகம் மற்றும் பணிமனைத் திணைக்களத்தினால் செய்யப்பட்ட கொள்வனவுகளின் விளைவாக ஏற்பட்ட சேதங்களையும்

அட்டவணை II- 9
2004 இல் நடத்தப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

	பாடநெறித் தலைப்பு	காலப்பகுதி	மூலவள ஆட்கள்
1.	"மத்திய வங்கியின் அரச நிதிக்கும் நாணயக் கொள்கைக்கும் இடையில் உள்ள தொடர்பு" மீதான கொள்கை கலந்துரையாடல்	19-20 சனவரி 2004 (2 நாட்கள்)	பேராசிரியர் அமிற் பாதுரி (முன்னை நாள பேராசிரியர் ஜவகர்கலால் நேரு பல்கலைக்கழகம்), இந்தியா.
	"விலை முறையின் பங்களிப்பும் அமைப்பியல் மாற்றமும் பொருளாதார அபிவிருத்தியும்" மீதான பாடநெறி	21-30 சனவரி 2004 (8 நாட்கள்)	
2.	"கூட்டாட்சி அரசதுறைக்காக இறைக் கொள்கையினை வடிவமைத்தல் " மீதான பாடநெறி	19-25 பெப்புருவரி 2004 (05 நாட்கள்)	பேராசிரியர் றொபாட் போல் இமான் பெனசில்லேனியா பல்கலைக்கழகம் ஐ.அமெரிக்கா
3.	மூத்த, நடுநிலை அலுவலர்களுக்கான முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	24-26 மே 2004 2 1/2 நாட்கள்	1. திரு. சுனில் எஸ். விஜேசிங்க முதன்மை நிறைவேற்று அலுவலர் இலங்கை மேர்சன்ட் வங்கி 2. திரு. ரஞ்சன் டீ சில்வா பங்காளர் சென்சாய் லங்கா இன்டர் நசனல்
4.	தலைமைத்துவம் பற்றிய செயலமர்வு	09 யூலை 2004	திரு. டயன் கோம்ஸ், முதன்மை நிறைவேற்று அலுவலர் மாஸ் கோல்டிங் லிமிடட்
5.	"திறந்த பொருளாதாரமொன்றில் பணவீக்கமும் நாணயக் கொள்கையும்" ஆராய்ச்சிக்கான செயலமர்வு.	01-14 செத்தெம்பர் 2004 (10 நாட்கள்)	பேராசிரியர் வில்லியம் பிரன்சன் பிறின்ஸரன் பல்கலைக்கழகம் ஐ.அமெரிக்கா
6.	"செலாவணிவீத அமைப்பும் கொள்கையும்" ஆராய்ச்சிக்கான செயலமர்வு.	04-15 ஒத்தோபர் 2004 (10 நாட்கள்)	- " -
7.	"இறைக்கொள்கையும் படுகடன் உறுதிப்பாடும்" ஆராய்ச்சிக்கான செயலமர்வு.	15 -26 நவெம்பர் 2004 (10 நாட்கள்)	- " -
8.	மத்திய வங்கி மூத்த அலுவலர்களுக்கான வெளிக்கள தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 1	22-24 ஒத்தோபர் 2004 (2 1/2 நாட்கள்)	இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம் கொழும்பு
9.	மத்திய வங்கி மூத்த அலுவலர்களுக்கான வெளிக்கள தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2	05-07 நவெம்பர் 2004 (2 1/2 நாட்கள்)	- " -
10.	மத்திய வங்கி மூத்த அலுவலர்களுக்கான வெளிக்கள தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 3	03-05 திசெம்பர் 2004 (2 1/2 நாட்கள்)	- " -
11.	முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	ஒத்தோ - திசெ. 2004	இலங்கை மேர்சன்ட் வங்கி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களையும், வங்கி வெளியீடுகளின் அச்சிடலினதும் விற்பனையினதும் செயல்முறை பற்றிய விரிவான ஆய்வினையும், தொலைபேசி இணைப்புக்களின் வழங்கலும் பயன்பாடுகளும், வங்கியின் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உயர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சுவிடிஸ் பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையினால் கொடையளிக்கப்பட்ட (4.5 மில்லியன் சுவீடிஸ் குரோனர்) கொண்ட நிதியின் பயன்பாடு என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.

2004 ஆம் ஆண்டில் இத்திணைக்களம் மத்திய வங்கியை முழுமையாக உள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீட்டு முறையினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையினை தொடங்கியதும் இந்நோக்கத்திற்காக, ஒரு ஆரம்ப இடர்நேர்வு மதிப்பீட்டு கட்டமைப்பானது பல தரப்பட்ட பொதுவான இடர்நேர்வுக் காரணிகளின் ஈடுபாட்டுடன் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறையினை நடைமுறைப்படுத்துமுகமாக பல திணைக்களங்களை, உள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இந்த குழுவிற்கான செயலகமாக இத்திணைக்களம் செயற்பட்டது.

முகாமை அபிவிருத்தி நிலையம்

முகாமை அபிவிருத்தி நிலையமானது, சுவீடிஷ் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் நிதி உதவியிலிருந்து தமது உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை அவர் தம் தொடர்பான துறைகளில் நிபுணத்துவம் பெற்ற பல புகழ் வாய்ந்த புலமைச் சான்றோரின் பணிகளைப் பெறுவதன் மூலம் தொடர்ந்தும் நடாத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டமானது மத்திய வங்கியின் மூத்த அலுவலர்களது அறிவையும் திறனையும் தரமுயர்த்தி மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இந்தத் திட்டத்தின் கீழான பயிற்சி வாய்ப்புக்களை நிதிஅமைச்சு மற்றும் பல்கலைக்கழக அலுவலர்கள் போன்ற ஏனைய அமைப்புக்களுக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் தமது அறிவினை வளப்படுத்தவும் வாய்ப்பளிக்கப்பட்டது.

2004 ஆண்டுக் காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 11 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அட்டவணை II - 9 இந்த 11 நிகழ்ச்சித்திட்டங்களில் 2 நாணயக் கொள்கை, இறைக்கொள்கை தொடர்பான கொள்கை விடயங்கள் மீதான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இந்தியாவின் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அமிட்பாதுாரி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் போல் இமான், என்பவர்களால் நடாத்தப்பட்டது. ஆராய்ச்சியிலும் பயிற்சியிலும் சிறந்த சாதனைகளைக் கொண்டுள்ள பிரபல்யம் வாய்ந்த பொருளியலாளரான பேராசிரியர் வில்லியம் பிரான்சன் பணவீக்கமும் நாணயக் கொள்கையும், செலாவணிவீத அமைப்பு, இறைக் கொள்கையும் படுகடனின் தாக்குப்பிடிக்கும் தன்மையும் போன்றவற்றை உள்ளடக்கிய 3 செயலமர்வுகளை நடத்தினார்.

மூத்த அலுவலர்கள் மட்டத்தில் செயற்றிறன் வாய்ந்த அலுவலர்களை கொண்டிருப்பதற்கு முகாமைத்துவம் தொடர்பாக அலுவர்களைப் பயிற்றுவித்தல் மிகவும் முக்கியமானதாக விளங்குவதனால் வங்கி மூத்த அலுவலர்களின் முகாமைத்துவ தேர்ச்சியை கட்டியெழுப்புவதற்கு தொழில் சார் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான முக்கியத்துவத்தை வங்கி கவனத்திற் கொண்டது. இதன்படி முகாமைத்துவ அபிவிருத்தி விடயம் தொடர்பில் 2004 ஆம் ஆண்டில் 6 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை உறுதிப்படுத்தும் அதன் முயற்சியில் குறிப்பிடத்தக்க சாதனையொன்றை இவ்வாண்டில் நிகழ்த்தியிருக்கின்றது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் தொழிற்பாட்டாளர் என்ற ரீதியிலும் மத்திய வங்கியின் சொந்தக் கொடுப்பனவுகளின் பின்னரங்க அலுவலகமென்ற ரீதியிலும் பின்வரும் கடமைகளை ஆற்றியது.

- அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினை தொழிற்படுத்தலும் கண்காணித்தலும்;
- பங்கேற்பாளர்களுக்கு உதவிப் பணிகளை வழங்குதல்;
- மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு நுழைவாயிலைத் தொழிற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்;
- மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை செயல்முறைப்படுத்துவதும் நடைமுறைக்கிடுவதும்;
- இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை செயன்முறைப்படுத்தி நடைமுறைக்கிடுவது;
- 2004 பெப்புருவரியில் லங்காசெகுயர் முறை நடைமுறைப்படுத்தும்வரை மத்திய வங்கியின் பத்திரப் பிணையங்களின் சொத்துப்பட்டியலினது பாதுகாவலனாக தொழிற்பட்டது;
- சுவிப்ற் தொடர்பூட்டலைக் கையாளுகின்றமை; அத்துடன்
- ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழ் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல்

2004 ஆம் ஆண்டில் கொடுப்பனவு முறை மேற்பார்வையானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் முக்கிய கவனத்தைப் பெற்றிருந்தது.

அது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

- நாட்டிலுள்ள கொடுப்பனவுக் கருவிகள், உட்கட்டமைப்பு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளுடன் தொடர்பான தரவுகளை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மூலம் தேசிய கொடுப்பனவு முறைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவுமுறை உறுதிப்பாடுமீது அரையாண்டு அறிக்கையினைத் தயாரித்தல்;
- ஒழுங்குவிதிகளை உள்ளடக்கும் சிவப்புநூல் என அழைக்கப்படும் ஆவணத்தையும் காலாண்டுக் கொடுப்பனவு செய்தித் திரட்டினையும் தயாரித்தல்;
- கொடுப்பனவு முறைகளுடன் தொடர்பான விடயங்களில் பன்னாட்டு அமைப்புக்களுடன் தொடர்பினை ஏற்படுத்தல்;
- கொடுப்பனவு முறையின்மீது பொது மக்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல்; அத்துடன்
- கொடுப்பனவு முறைகள் தொடர்பான கொள்கை விடயங்கள் மீது விதந்துரைப்புக்களைச் செய்தல்.

சுவிப்ற் தொடர்பூட்டல்களைக் கையாளல்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் சுவிப்ற் தொலைத் தொடர்பூட்டல் பிரிவு சுவிப்ற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் செயலாற்றியதுடன் மத்திய வங்கியின் சுவிப்ற் முறையை நவீனமயப்படுத்தி தரமுயர்த்தியது. இது பின்வருவனற்றை உள்ளடக்கியிருந்தது.

- சுவிப்ற் தொடர்பூட்டல் வலையமைப்பினை தொடர்புபடுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட X.25 முறைக்குப் பதிலாக 2004 ஒத்தோபரில் சுவிப்ற் வலையமைப்பு முறை நடைமுறைக்கிடப்பட்டது.
- வினைத்திறனை அதிரிக்கும் பொருட்டு சுவிப்ற் வலையமைப்புடனான மத்திய வங்கி சுவிப்ற் முறை இணைப்பு 64கே சாதாரண தரத்திலிருந்து 64 கே நியமத்தரத்திற்கு உயர்த்தப்பட்டது.
- சுவிப்ற் தொடர்பான தகவல்களை வேறிடத்தில் சேமித்துவைக்கும் சுவிப்ற் அணி வழிகள் மென்பொருள் தரம் 5.00 இலிருந்து மென் பொருள் தரம் 5.5 இற்கு 2004 திசெம்பர் இறுதியில் தரமுயர்த்தப்பட்டது; அத்துடன்

  தகவல்களை வேறிடத்தில் சேமித்து வைக்கும் இடத்தின் சுவிப்ற் வலை இணைப்பு 4.40 இலிருந்து சுவிப்ற் வலை இணைப்பு 5.00 இற்கு தரமுயர்த்தப்பட்டது.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்கள்

2004 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கைக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2003 இன் ரூ. 100 பில்லியனிலிருந்து 61 சதவீதத்தினால் ரூ.161 பில்லியனுக்கு அதிகரித்தது.

ஆ.தீ.ஒன்றிய பொறிமுறை பற்றி அனைத்து வர்த்தக வங்கிகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள்/ இறக்குமதியாளர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆ.தீ.ஒன்றிய பொறிமுறையினூடாக கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி 2004 யூனில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் அளவீடொன்றினை நடத்தியது. ஆசியத் தீர்ப்பனவு பொறிமுறையிலான தடைகள் மற்றும் கடுமையான தன்மைகள் பற்றி குறிப்பிட்ட அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் மத்திய வங்கியின் யோசனைகளுடன் சேர்த்து ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அட்டவணை II- 10

விடயம்	2003	2004
ஆ.தீ.ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்	100.3	161.1
ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள்	31.9	48.9
ஏனைய ஆ.தீ.ஒன்றிய நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள்	135.6	169.2
ஏனைய ஆ.தீ.ஒன்றிய நாடுகளுடனான மொத்த வர்த்தகம்	167.4	218.1
தேறிய ஆ.தீ.ஒன்றிய தீர்ப்பனவுகள்	90.6	142.3

மூலம். இலங்கை மத்திய வங்கி

கொடுப்பனவு முறையின் மேற்பார்வை

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுமுறை மேற்பார்வை மற்றும் தலத்திற்கு வெளியேயான

மேற்பார்வைத் தொழிற்பாடுகள் சுமுகமாகவும், பாதுகாப்பானதாகவும் வினைத்திறனுடனும் தொழிற்படுவதனைக் உறுதிப்படுத்தும் நோக்கில் பன்னாட்டு நியமங்களுக்கு ஏற்புடைத்தான விதத்தில் தேசிய கொடுப்பனவு முறையினை அடித்தளமாகக் கொள்வதன் மீது கவனம் செலுத்தப்பட்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நாட்டில் முக்கியமான அனைத்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிகளை வழங்கு வோரிடமிருந்து காலத்திற்குக் காலம் தகவல்களைச் சேகரிப்பதுடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைக்கான பத்து மையத் தத்துவங்களுடனும் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுக் குழுவினால் வெளியிடப்பட்ட பாதுகாப்புத் தீர்ப்பனவு முறைகளுக்கான பத்தொன்பது விதந்துரைப்புக் களுடனும் இம்முறையானது இணங்கிச் செல்வது பற்றி மதிப்பிடுவதற்காக தரவுகளைப் பகுப்பாய்வு செய்கிறது. இதன் மேற்பார்வைத் தொழிற்பாடுகளின் கீழ், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை, லங்காசெகுயர், லங்கா கிளியரினால் தொழிற்படுத்தப்படும் சில்லறை தீர்ப்பனவு முறை/வரையறுக்கப்பட்ட தனியார் வைப்பக முறையினால் கொழும்புப் பங்குச் சந்தையில் மேற் கொள்ளப்பட்ட தீர்ப்பனவு மற்றும் பிணையக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு, வீசா அட்டை கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்காக இலங்கை வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட தேசிய வலையமைப்பு தீர்ப்பனவுமுறை, மற்றும் ஸ்ராண்டட் சார்ட்டட் வங்கியினால் தொழிற்படுத்தப்படும் நாடுகளுக்கிடையிலான தீர்ப்பனவிற்கான மாஸ்ரர் அட்டை பன்னாட்டுப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கக் கூடியதாக இருந்தது.

2004 நவெம்பரில் லங்கா கிளியர்மீது நியதிகளும் நிபந்தனைகளும் வரையப்பட்டு விதிக்கப்பட்டதன் மூலம் லங்கா கிளியரின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவது மேலும் வலுவாக்கப்பட்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2004 இன் பின்னரைப் பகுதியினை உள்ளடக்கி கொடுப்பனவு முறை உறுதிப்பாடு மீதான நிதியியல் உறுதிப்பாட்டு குழுவிற்கான முதலாவது அறிக்கையை 2005 சனவரி தொடக்கப் பகுதியில் தயாரித்தது.

வெளியீடுகள்

2004 இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் எய்தப்பட்ட முக்கியமான இலக்குகளில் ஒன்று பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்காக வங்கியினால் வெளியிடப்பட்ட இலங்கையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் தொடர்பான சிவப்புநூல் என அழைக்கப்படும் ஒழுங்குவிதி ஆவணம் வெளியிடப்பட்டமையேயாகும். இது இலங்கை மத்திய வங்கியினாலும், பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுக் குழுவினாலும் கூட்டாக தயாரிக்கப்பட்டது. 1990இல் கொடுப்பனவு தீர்ப்பனவுக்குழு தொடங்கப்பட்டதிலிருந்து 15 நாடுகளுக்கான சிவப்பு நூலை அது வெளியிட்டிருப்பதுடன் சிகப்பு நூல் வெளியிடப்பட்ட நாடுகளில் இலங்கை உலகின் 16ஆவது நாடாக விளங்குகின்றது. ஆசியப் பிராந்தியத்தில், இலங்கை சிங்கப்பூர் மற்றும் கொறியாவிற்கு அடுத்த மூன்றாவது நாடாக விளங்குகின்றது. 2001 இலிருந்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால வெளியிடப்பட்டுவருகின்ற காலாண்டு கொடுப்பனவு செய்தித்திரட்டு 2004இலும் தொடர்ந்தது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி, தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கி, உலகவங்கி, பா.நா.நிதியம் மற்றும் மற்றைய நாடுகளிலுள்ள மத்திய வங்கிகள் போன்ற பன்னாட்டு அமைப்புக்களுடனான தொடர்புகளை இணைத்து வருகின்றது.

கொடுப்பனவு முறைகள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு

கொடுப்பனவு முறைகள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடனும் முன்னேற்றங்கண்ட கொடுப்பனவுக் கருவிகளை அவர்கள் பயன்படுத்த ஊக்குவிக்கும் பொருட்டும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் 2004இல் பல வழிமுறைகளைத் தொடங்கியது:

- மூன்றாம் தரப்பு வாடிக்கையாளர்களின் பங்கேற்பினை இயலச் செய்வதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம், வர்த்தக வங்கிகளின் மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுக் கொள்ளும் நேரத்தினை 2005 தொடக்கத்திலிருந்து மு.ப. 10.45 மணிவரை நீடித்தது.
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பெரிய வர்த்தக வங்கிகளின் கம்பனி வாடிக்கையாளர்களுக்கான அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடத்தியது; அத்துடன்
- உள்நாட்டரசிறை, சுங்கம், கலால் போன்ற அரசின் அரசிறைச் சேகரிப்பு

திணைக்களங்களின் அலுவலர்களுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்களையும் நடத்தியது.

பணிமனை

வங்கியின் அலுவலர்களுக்கு போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல் வசதிகள் போன்ற துணைப் பணிகளை வழங்குவதற்கு மேலதிகமாக 2004 இல் பணிமனைத் திணைக்களம், வங்கிப் பணிமனையினைப் பேணுவதனையும், சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது.

மிகப்பயனுறு முறையிலும் குறைந்த செலவிலும் பணியினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பெரும்பாலான பேணல் வேலைகளும், போக்குவரத்துப் பணிகளில் ஒரு பகுதியும் வெளி மூலங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வங்கியின் வலு முகாமைத்துவ முறைகளில் மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதனூடாக மின்வலுவினதும் குளிரூட்டிகளினதும் செலவுகள் குறைக்கப்பட்டன. பணிமனைத் திணைக்களம் கணனி அறையிலும் வங்கி அனர்த்த மீட்பு இடத்திலும் ஒரு முன்னேற்றமடைந்த தீ அணைப்பு முறைகளை 2004 ஆம் ஆண்டில் நிறுவியது.

பொதுப்படுகடன்

2003 இல் பொதுப்படுகடன் முகாமைத்துவத்திலும் படுகடன் சந்தை அபிவிருத்தியிலும் அடையப்பட்ட சாதனைகள் 2004 இல் மேலும் வலுப்பெற்றன. 2004 இன் தொடக்கத்தில் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் மத்திய வைப்பகமுறை என்பனவற்றின் அறிமுகம் இலங்கையின் படுகடன் சந்தை அபிவிருத்தியில் ஒரு மைல் கல்லாகும். படுகடன் சந்தை உள் கட்டமைப்பில் காணப்பட்ட இத் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றம் திரவத் தன்மையினை உருவாக்குதல், பத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட பிணையங்களுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை குறைத்தல், இறுதியாக அரசிற்கான கொடுக்கல் வாங்கல் மற்றும் கடன்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல் என்பனவற்றினூடாக அரச பிணையங்கள் சந்தையின் வினைத்திறனை முன்னேற்றுவதனையும் இரண்டாந்தரச் சந்தையின் வர்த்தகப்படுத்தலை உயர்த்துவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. ரூபாக்கடன்கள் நிகழ்ச்சித்திட்டம் மேலும் படிப்படியாக அகற்றப்படல், உயர்ந்த செலவினைக் கொண்ட அழைக்கத்தக்க ரூபாக் கடன்கள் நிகழ்ச்சித் திட்டம் உரிய காலத்திற்கு முன்னரேயே தீர்க்கப்பட்டமை, பத்திரங்களற்ற பிணையங்களை வழங்குவதற்கும் வர்த்தகப்படுத்துவதற்குமென சட்டம், நிறுவன ரீதியான, மற்றும் சந்தைக் கட்டமைப்பு என்பனவற்றை வலுப்படுத்தியமை மற்றும் முதனிலை வணிகர்களுக்கான மூலதனப் போதுமை தொடர்பான கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட முனைவுகள் என்பன 2004 இல் படுகடன் முகாமைத்துவத்தில் காணப்பட்ட முக்கிய நிகழ்வுகளில் சிலவாகும்.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 113 இன்படி, நாணயச்சபையிடமும் மத்தியவங்கியிடமும் படுகடன் முகாமைத்தவ தொழிற்பாடுகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இதன்படி அரசாங்கத்தின் முகவர் என்ற ரீதியில் பொதுப்படுகடன் திணைக்களம் வரவு செலவுத் திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காகவும் வெளிநாட்டு உள்நாட்டு படுகடன் இரண்டினையும் தீர்ப்பதற்காகவும் உள்நாட்டு மூலங்களிலிருந்து மூலவளங்களை திரட்டுகின்றது. பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் இடர்நேர்வுகளின் முன்மதியுடைய அளவுகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளும் அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளும் ஈடுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அரசபடுகடனை முகாமை செய்வதேயாகும். இக்குறிக்கோள்களை எய்துவதற்கு ஏற்புடைத்தானதொரு உபாயம் நாணய, இறை மற்றும் படுகடன் முகாமைத்துவ கொள்கையிடையே காத்திரமான இணைப்பொன்றினை உறுதிப்படுத்தும் விதத்தில் நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றிலிருந்தான உறுப்பினர்களை உள்ளடக்கிய உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவ குழுவினால் வடிவமைக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டின் நிகழ்வுகள்
படுகடன் வழங்கலும் அதன் செலவும்

2003 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க 2004 இற்காக நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட அரசின் மொத்தக் கடன்பாட்டு வரையறை ரூ.350 பில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூ.250 பில்லியன் உள்நாட்டுப் பிணையங்கள் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து திரட்டப்பட வேண்டியிருந்ததுடன் பொதுப்படுகடன் திணைக்களம் அதன் நன்கு திட்டமிடப்பட்ட கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வரவு செலவுத்திட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காக உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ.242 பில்லியனைத் திரட்டியது. மேலும், உள்நாட்டு திறைசேரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த எல்லை

அரசாங்கத்தின் எதிர்கால கடன்பாட்டுத் தேவைகளைக் கருத்திற்கொண்டு ரூ.250 பில்லியன்களிலிருந்து ரூ.300 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

வர்த்தகப்படுத்தத்தக்க கருவிகளின் மீது தங்கியிருப்பதனை அதிகரிக்கின்ற உபாயங்களைப் பின்பற்றுவதற்கேற்ற விதத்தில், 2004 இற்கான மூலவளத் தேவைப்பாட்டில் பெரும்பகுதி திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் மற்றும் அபிவிருத்தி முறிகளினூடாகத் திரட்டப்பட்டது. 2004 இல், பொதுப்படுகடன் திணைக்களம் 53 திறைசேரி உண்டியல் ஏலங்களை நடத்தியது. ரூ.657,702 மில்லியன் கொண்ட விலைக் கோரல்களில் இவ் ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.304,593 மில்லியனாகக் காணப்பட்டது. இவ்வாண்டில் அனைத்து முதிர்ச்சிகளிலும் (91 நாள், 182நாள், 364 நாள் மற்றும் ஏனையவை) வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ.469,973 மில்லியன்களாக விளங்கிய வேளையில், அனைத்து முதிர்ச்சிகளிலுமான மீள் கொடுப்பனவுகள் ரூ.455,382 மில்லியன்களாக அமைந்து ரூ.24,591 மில்லியன் கொண்ட தேறிய புதிய திறைசேரி

அட்டவணை II-11

2004இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும்

ரூ.மில்லியன்

	முதிர்ச்சி	வழங்கல்	மீள் கொடுப்பனவு	தேறிய வழங்கல்
திறைசேரி உண்டியல்	91நாள்	197,147	185,691	11,456
	182நாள்	85,605	50,828	34,777
	364 நாள்	114,047	145,863	(31,816)
	மற்றையது	73,174	63,000	10,174
	மொத்தம்	469,973	445,382	24,591
திறைசேரி முறிகள்	1 வருடம்	19,970	-	19,970
	2 வருடம்	101,028	21,422	79,606
	3 வருடம்	51,700	19,534	32,166
	4 வருடம்	9,600	10,000	(400)
	5 வருடம	11,500	6,000	5,500
	6 வருடம்	13,400	-	13,400
	9 வருடம்	10,000	-	10,000
	மொத்தம்	217,198	56,956	160,242
ரூபாக் கடன்கள்	2/ 5வருடம்	-	38,419	(38,419)
	2/ 6வருடம	564	-	564
	4/ 8வருடம்	-	3,500	(3,500)
	5/ 6வருடம்	-	6,000	(6,000)
	5/ 7வருடம	-	1,500	(1,500)
	6/ 7வருடம்	-	33,800	(33,800)
	6/ 8வருடம்	-	1,000	(1,000)
	மொத்தம்	564	84,219	(83,655)
இலங்கை அபிவிருத்தி முறிகள்	2 வருடம்	25,705	9,344	16,361
	மொத்தம்	25,705	9,344	16,361
வெ.நா.வ.தொ. பிரிவுகளிலிருந்தான கடன்கள்	**மொத்தம்**	-	-	-
மொத்தம்		713,440	595,901	117,539

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

உண்டியல்களின் வழங்கலை விளைவித்தது. சந்தை முன்னுரிமை குறுங்கால உண்டியல்களை நோக்கி காணப்படுவதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் மொத்த வழங்கலில் 42 சதவீதம் 91 நாள் திறைசேரி உண்டியல்களில் காணப்பட்டது.

2004 இல் நடத்தப்பட்ட திறைசேரி முறி ஏலங்களின் எண்ணிக்கை 33 ஆக விளங்கியதுடன் சில அடித்தள அளவிலான சில பிணையங்களை அபிவிருத்தி செய்ததன் வாயிலாக இரண்டாந்தரச் சந்தையின் வர்த்தகத்திற்கு மேலும் வசதியளிக்கும் நோக்குடன் இவ்வாண்டில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளினது தொடர்களின் எண்ணிக்கை 2003 இன் 92 இலிருந்து 78 இற்குக் குறைக்கப்பட்டது. திறைசேரி முறி ஏலங்களில் பெறப்பட்ட விலைக்கோரல்களின் மொத்தத் தொகை ரூ.136, 218 மில்லியன்களாக விளங்கியதுடன் இதில் ரூ.54,336 மில்லியன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் திறைசேரி முறிகளின் மொத்த வழங்கல் ரூ.217,198 மில்லியன்களாக விளங்கியதுடன், இதில் 70.3 சதவீதம் 2 ஆண்டு மற்றும் 3 ஆண்டு முதிர்ச்சிகளுடன் வழங்கப்பட்டது. திறைசேரி முறிகளின் மீள் கொடுப்பனவுகள் ரூ.56,956 மில்லயன்களாக விளங்கி இவ்வாண்டில் ரூ.160,242 மில்லியன் கொண்ட தேறிய புதிய திறைசேரி முறிகளின் வழங்கலை விளைவித்தது. சந்தை ஆர்வமானது நீண்டகால திறைசேரி உண்டியல் சந்தையில் குறுங்கால முதிர்ச்சி சாய்ந்த தன்மையினைக் கொண்டிருந் தமையின் காரணமாக 9 மற்றும் 6 ஆண்டு முதிர்ச்சிகளின் வழங்கல் ரூ.23,400 மில்லியனுக்கு கட்டுப் படுத்தப்பட்டிருந்தது.

2004 இல் ரூபாக் கடன்களின் வழங்கல் ரூ.564 மில்லியன் கொண்ட சிறிய தொகையாகக் காணப்பட்டது. ரூ.24,519 மில்லியன் கொண்ட கட்டாய மீள் கொடுப்பனவுகளுக்குப் புறம்பாக, தற்போதுள்ள படுகடன் செலவினைக் குறைக்கும் நோக்குடன் 11.25 – 13 சதவீத வட்டியைக் கொண்டுள்ள ரூ.59,700 மில்லியன் அழைக்கத்தக்க ரூபாக் கடன்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக, ரூபாக் கடன்கள் தொடர்பான தேறிய மீள் கொடுப்பனவுகள் ரூ.83,655 மில்லியன்களாகக் காணப்பட்டன. படுகடன் முகாமைத்துவ உபாயங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் உள்நாட்டுப் படுகடன் இருப்பில் வர்த்தகப்படுத்த முடியாத பிணையங்களின் பங்கு 2003 இன் 25 சதவீதத்திலிருந்து 2004இல் 15 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தது.

1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தின் கீழ் 2004 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் ரூ.25,705 மில்லியன்களாக விளங்கிய வேளையில் மீள் கொடுப்பனவுகள் ரூ. 9,344 மில்லியன்களாக அமைந்து ரூ.16,361 மில்லியன்கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் தேறிய வழங்கல்களை தோற்றுவித்தது.

அட்டவணை II-11 2004 இல் உள்நாட்டுப் படுகடனின் வழங்கல் மற்றும் முதிர்ச்சியின் விபரங்களைத் தருகின்றது.

படுகடன் பணிச் செலவு

பொதுப்படுகடன் திணைக்களத்தின் படுகடன் தீர்ப்பனவின் பேரிலான மொத்த வட்டிக் கொடுப்பனவு ரூ.119,195 மில்லியன்களாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ.122,455 மில்லியனைக் காட்டிலும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. 2004 இன் வட்டிக் கொடுப்பனவில் உள்நாட்டுப் படுகடன் மீதான கூறு ரூ.103,554 மில்லியன்களாகும். உள்நாட்டுப் படுகடன்மீதான மொத்த வட்டிச் செலவில் ரூ. 19,942 மில்லியன் திறைசேரி உண்டியல்கள் மீதானதாக இருந்த வேளையில் ரூ 54677 மில்லியன் திறைசேரி முறிகள் மீதானதாக இருந்தது. ரூபாக்கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.28,885 மில்லியன்களாகக் காணப்பட்டன. கடந்த காலத்தில் உயர்ந்த வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட ரூ.59,700 மில்லியன் கொண்ட ரூபாக் கடன்களை 2004 இல் உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு செய்தமையின் விளைவாக அரசாங்கம் ரூ.5,500 மில்லியன் கொண்ட வட்டியினை சேமித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கடன்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன தொடர்பாக ரூ.1,563 மில்லியன் வட்டி கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது.

முகப்புப் பெறுமதியின் நியதிகளில் உள்நாட்டுப் படுகடனின் பேரிலான மொத்த மீள் கொடுப்பனவுகள் 2004இல் ரூ.141,175 மில்லியன்களாக விளங்கின. இது ரூ.445,382 மில்லியன் தொகைகொண்ட திரும்பவும் வழங்கல் செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்கு மேலதிகமானதாகும். இலங்கை அபிவிருத்தி முறிகளின் பேரிலான மீள் கொடுப்பனவுகள் 2003 இன் ரூ.15,179மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.9,344 மில்லியன்களாக விளங்கின.

இவ்வாண்டில், பொதுப்படுகடன் திணைக்களம் 595 வெளிநாட்டுக் கடன்களை தீர்ப்பனவு செய்ததுடன் மொத்தப்படுகடன் தீர்ப்பனவுச் செலவு 2003 இன் ரூ.37,247 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.44,311 மில்லியனாகக் காணப்பட்டது. 2004 இல் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2003 இன் ரூ.11,826 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.14,084 மில்லியனாக விளங்கின.

அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

2003 இன் இறுதிப் பகுதியில் அதிகரிக்கத் தொடங்கிய அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் 2004 இன் முதலரைப் பகுதியிலும் தொடர்ந்தும் அதிகரித்து 2004 யூலையில் உச்ச மட்டத்தினை அடைந்தது. இப்போக்கு ஆண்டின் பின்னரைப் பகுதியில் மாற்றமடைந்தது. விளைவு வீதங்கள் ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட வீதங்களிலும் பார்க்க குறைந்த மட்டமொன்றில் நிலைத்து நின்றன. திறைசேரி உண்டியல்களின் ஆண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 2003 இன் 9.07 சதவீதத்திலிருந்து 2004 இல் 8.49 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. முதலாந்தர ஏலங்களில் 3 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகள் தவிர்ந்த, திறைசேரி முறிகளின்

அட்டவணை II-12
திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக்கடன்களின் நிறையேற்றப்பட்ட ஆண்டு சராசரி விளைவுவீதங்கள்

ஆண்டொன்றுக்கான சதவீதம்

கருவி	1999	2000	2001	2002	2003	2004(அ)
திறைசேரி உண்டியல் (அ)						
(நாட்கள்) (ஆ)						
91	11.69	12.80	16.09	12.69	9.13	8.46
182	12.03	12.94	17.32	12.90	9.04	8.44
364	12.55	14.14	18.34	13.84	9.02	8.55
மொத்த சராசரி	12.06	13.62	17.37	13.23	9.07	8.49
திறைசேரி முறி (அ)						
(ஆண்டுகள்)						
2	13.01	16.71	19.82	14.88	10.75	9.78
3	13.31	15.00	15.60	14.29	9.69	9.83
4	13.53	12.52		14.54	9.97	9.61
5	13.78	12.78		14.69	10.97	10.31
6	13.65	12.88		14.83	9.56	9.30
10					8.72	11.11
13					0.00	
15					9.01	
20					6.66	
மொத்த சராசரி	13.37	15.10	18.07	14.57	9.59	9.82
ரூபாக்கடன்கள்						
(ஆண்டுகள்) (இ)			15.00			
2			14.03	13.00	11.93	
5		11.00			8.40	8.88
6						
7	12.25					
8	12.50	12.00	13.00			
10	12.36	11.68	14.31	13.00	11.66	8.88
மொத்த சராசரி						

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 10% பிடித்துவைத்தல் வரியையும் உள்ளடக்குகிறது. 2002 மே 3ஆம் நாள் தொடக்கம் அரசாங்கம் அரச பிணையங்கள் வட்டி மீது பிடித்துவைத்தல் வரியினை விதித்தது

(ஆ) 3,6,12 மாத முதிர்ச்சிகளுக்குப்பதிலாக முறையே 91நாள், 182நாள், 364 நாள் முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 1999 ஒக்தோபரில் தொடங்கியது.

(இ) அழைக்கத்தக்க ரூபாக்கடன்களின் மீள்கொடுப்பனவின் கட்டாய நாள் (ஆகக் கூடிய நாள்) பரிசீலிக்கப்பட்டது.

ஆண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களும் 2003 உடன் ஒப்பிடுகையில் 2004 இல் குறைவடைந்து காணப்பட்டன. 2004 இல் வழங்கப்பட்ட ரூபாக் கடன்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் ஆண்டிற்கு 8.00 சதவீதமாக இருந்தது. 2004 இல் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் ஆண்டிற்கு 1.793 சதவீதத்தினையும் சேர்ந்த சதவீதமாக இருந்தது.

2003 இன் ஆண்டு இறுதி இரண்டாந்தர சந்தை விளைவு வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2004 இறுதியில் திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வீதங்கள் ஏறத்தாழ 15 - 60 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்த வேளையில் 2-5 ஆண்டு திறைசேரி முறிகள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் ஏறத்தாழ 140-290 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தன.

திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக் கடன்கள் என்பனவற்றின் முதலாந்தச் சந்தையிலான ஆண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் அட்டவணை II-12 இல் தரப் பட்டுள்ளன.

படுகடன் சந்தை அபிவிருத்திகள்

பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும் (லங்கா செகுயர்)

இலங்கை அரசாங்கத்தின் பிணையங்கள் சந்தைக்காக பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை நடைமுறைக்கிடப்பட்டமையும் மத்திய வைப்பகமுறை அறிமுகப்படுத்தப்பட்டமையும் படுகடன் சந்தை அபிவிருத்தித்துறையில் 2004இல் அரசாங்கம் மேற்கொண்ட முன்னோடி நடவடிக்கையாகும். திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் பத்திரங்களற்ற வடிவில் வழங்கும்முறை 2004 சனவரி 30 ஆம் நாள் தொடங்கப்பட்டது. மத்திய வைப்பகமுறை அரச பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களை அத்தகைய பிணையங்களின் நன்மைபெறும் சொந்தக் காரர்களின் பெயரில் பதிவுசெய்வதற்கு வசதியளித்தது. பத்திரங்களற்ற பிணையங்களின் வழங்கல் தொடங்கியதுடன் பத்திரவடிவில் இருந்த திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் பத்திரங் களற்ற வடிவத்திற்கு மாற்றும் நடைமுறையொன்றும் பின்பற்றப்பட்டது. 2005 இன் பெப்புருவரி நடுப்பகுதியில் வெளிநின்ற அனைத்து திறைசேரி உண்டியல்களும் பத்திரங்களற்ற வடிவத்திற்கு மாற்றப்படும்.

தொழில்நுட்ப அபிவிருத்தித் தொடர்பில் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையுடன் இணைந்து செல்லும் விதத்தில் மின்னியல் விலைக் குறிப்பீட்டு முறையினை மாற்றியமைப்பதற்கு பொதுப்படுகடன் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது, மத்திய வைப்பக முறைக்கு ஏலப் பெறுபேறுகளை மாற்றல் செய்வதற்காகவும், பிணையங்களை மாற்றும் செய்முறைகளைக் கையாள்வதற்காகவும் முதலீட்டாளர்களுக்கான கூற்றுக்களை அச்சிடுவதற்காகவும் பல புதிய மின்னியல் ஒன்றினோடொன்று இணைந்த கணனி நடை முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

பத்திரங்களற்ற பிணையங்கள் முறையின் தொழிற்பாட்டினை இயலச் செய்வதற்குத் தேவையான சட்ட திருத்தங்கள் பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச் சட்டத்திற்கும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்திற்கும் மேற் கொள்ளப்பட்டன. மேலும், முறையானது சுமுகமாகத் தொழிற்படுவதற்கு வேண்டிய, முறைமை சார்ந்த ஒழுங்கு விதிகள், நடைமுறைகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பன இவ்வாண்டில் "லங்கா செகுயரின்" பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாண்டில் வழங்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் பெறுமதியில் ரூ.436,965 மில்லியன் திறைசேரி உண்டியல்களும் ரூ.225,667 மில்லியன் திறைசேரி முறிகளும் உள்ளடங்குகின்றன. முறையானது பத்திரங்களற்ற திறைசேரி முறிகளின் பேரிலான ரூ.26,022 மில்லியன் நறுக்குக் கொடுப்பனவுகளையும் பத்திரங் களற்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் பத்திரங் களற்ற திறைசேரி முறிகள் ஆகிய இரண்டின் மீதுமான ரூ.303,668 மில்லியன் கொண்ட முதிர்ச்சிக் கொடுப்பனவினையும் மேற்கொண்டது.

இவ்வாண்டில் "லங்கா செகுயர்" ரூ.6,967,753 மில்லியன் மொத்தப் பெறுமதியைக் கொண்ட 124,150 கொடுக்கல் வாங்கல்களைக் கையாண்டது. இது கொடுக்கல் வாங்கல் மீளச்சரிப்படுத்தல், வழங்கல் எதிர் கொடுப்பனவுகள் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள் கொள்வனவு மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி என்பனவற்றை உள்ளடக்கி யிருந்தது.

"லங்கா செகுயரில்" பங்கேற்பவர்களின் எண்ணிக்கை 33ஆக அமைந்து 9 முதனிலை வணிகர்களையும், 22 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும், ஊழியர் சேமநிதியம் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. 2004 இறுதியில் முறையில் உள்ள இப் பங்கேற்பாளர்களினால்

பேணப்பட்ட முதலீட்டாளர் கணக்குகளின் எண்ணிக்கை 23,377 ஆகக் காணப்பட்டது. 2004 இல் லங்கா செகுயரினால் வழங்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை 42,292 ஆகக் காணப்பட்ட வேளையில் வழங்கப்பட்ட கொடுப்பனவு கூற்றுக்களின் எண்ணிக்கை 22,754 ஆகக் காணப்பட்டது.

ஏனைய சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகள்

அரச பிணையங்களிலுள்ள நன்மையளிக்கும் உரிமைகளை கொடுக்கல் வாங்கல் செய்வதற்காக பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையிலும் அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறையிலும் கொழும்புப் பங்குச் சந்தையின் மத்திய வைப்பக முறைக்கு நேரடியாக பங்கேற்கின்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

முதனிலை வணிகர்கள் முறையினை ஒழுங்கு முறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்

நட்வெல்த் செகுரிட்டீஸ் லிமிடட் தொழிற்பாடுகளைத் தொடங்கியதுடன், முதனிலை வணிகர்களின் வலையமைப்பு 12 முதனிலை வணிகர்களுக்கு மேலும் விரிவடைந்தது. இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் தல மற்றும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள், உடன் பரீட்சிப்புக்கள், நேருக்கு நேரான கலந்துரையாடல்கள், இடர்நேர்வு பகுப்பாய்வு தொழில் நுட்பம் போன்ற வற்றினைப் பின்பற்றியதன் மூலம் முதனிலை வணிகர்களைத் தொடர்ந்தும் கண்காணித்தது. ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் நிலவிய அடிக்கடி ஏற்ற இறக்கங்களுக்குள்படும் சந்தை நிலைமைகளின் காரணமாக முதனிலை வணிகர்களின் மூலதனத் தளத்தில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. எனவே, அவர்களது மூலதன தளத்தினை மீளமைப்பதற்கும் தொழில்துறையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்து வதற்குமாக பொதுப்படுகடன் திணைக்களம் உரிய நேரத்தல் சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டது. உயர்ந்தளவு சந்தை ஏற்ற இறக்கங்களுக்கு எதிரான நடவடிக்கையினை மேற் கொள்ளும்பொருட்டு தொடர்பான பிணையங்களைத் தமது சொத்துப் பட்டியலில் உண்மையில் வைத்திருக்காமல் முதனிலை வணிகர்கள் பிணையங்களை விற்பனை செய்வதனைத் தடுப்பதற்காக பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. முதனிலை வணிகர்கள் அவர்களது கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு சீராக்கப்பட்ட வர்த்தகப்படுத்தல் அல்லது சந்தை விலையிலும் உயர்வான விலையை பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காக மற்றுமொரு பணிப்புரை வழங்கப்பட்டது. உலக வங்கியின் உதவியுடன் உத்தேச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப்போதுமைக் கட்டமைப்பு தொடர்பாக பல ஆய்வரங்குகளும் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. இப்புதிய கட்டமைப்பு முதனிலை வணிகர்களினால் எதிர்நோக்கப்படும் சந்தை இடர்நேர்வுகளை குறைப்பதனையும் இத்தொழில்துறையின் உறுதிப் பாட்டைப் பேணுவதனையும் நோக்காகக் கொண்டிருந்தது. அதே வேளையில் பொதுப்படுகடன் திணைக்களம், 2003 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுக்கக் கோவைக்கு முதனிலை வணிகர்கள் இணங்கி ஒழுகு கின்றார்களா என்பதனைத் தொடர்ந்தும் கண்காணித்தது. முதனிலை வணிகர்களுக்கான பிரத்தியேக வர்த்தக மையமான புளூம்போர்க் வர்த்தகப்படுத்தல் முறையின் வர்த்தப்படுத்தல் நேரம் 2004 இல் 1 மணித்தியாலத் திலிருந்து 3 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டது. அரச பிணையங்களில் முதலீடு செய்வதனைப் பிரபல்யப் படுத்தும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம் முதலீட்டாளர்களுக்காக பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. மேலும் முதனிலை வணிகர்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று வெளிக்களக் கணக்காய்வாளர்களுக்காக நடத்தப்பட்டது. மற்றைய நாடுகளிலுள்ள படுகடன் சந்தைகள் பற்றிய வெளிப்படுத்தல்களை வழங்கும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம் சவெறிக்ஸ் றிஸ்க் வங்கியின் ஒத்துழைப்புடன் முதனிலை வணிகப் பிரதிநிதிகளுக்கு சுவீடனில் கல்விச் சுற்றுலா வொன்றினை ஒழுங்கு செய்தது.

முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்

கொடுக்கல் வாங்கல்களின் ஒரு தரப்பினராக முதனிலை வணிகர்கள் விளங்கும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி உண்டியல்களினது இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூ.4,135.5 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. இவ்வீழ்ச்சிக்கு திறைசேரி உண்டியல்களின் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல் 74.6 சதவீதத்தினாலும், திறைசேரி முறிகளின் உடனடி விற்பனைகள்/கொள்வனவுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் ஏறத்தாழ 50 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.

முதனிலை வணிகர்கள் அவர்களது இடர்நேர்வினை ஏற்கும் தன்மையிலிருந்து இடர்நேர்வுத் தன்மைகளைத் தவிர்ப்பதற்கு மாற்றமடைந்தமை

அவதானிக்கப் பட்டதுடன் இது இரண்டாந்தரச் சந்தையின் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு போன்ற குறுங்கால சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தது.

திறைசேரி முறிகளின் பேரிலான முதனிலை வணிகர்களின் ஓரிரவு நேர்மாற்று மீள் கொள்வனவுகள் இரண்டரை மடங்கிற்கு மேலாக உயர்வடைந்த வேளையில் 2004இல் திறைசேரி உண்டியல்களின் பேரிலான அத்தகைய கொள்வனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் உயர்வடைந்தன.

திறைசேரி உண்டியல்களின் மொத்த உடனடி விற்பனைகள் ரூ.317,025 மில்லியன்களாக விளங்கியவிடத்து உடனடிக் கொள்வனவுகள் ரூ.72,693 மில்லியன்களாகக் காணப்பட்டன. பெறுமதி நியதிகளில் இவ் விற்பனைகளும் கொள்வனவுகளும் இரண்டாந் தரச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களில் 2003 இன் 7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன. 2004இல் திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூ.268,866 மில்லியனாக விளங்கிய வேளையில் நேர்மாற்று மீள்கொள்வனவு ரூ.289,823 மில்லியனாகக் காணப்பட்டது. பெறுமதி நியதிகளில், இரண்டாந்தரச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களில் இம்மீள் கொள்வனவு மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவுகள் 2003 இன் 28 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

2004 இல் திறைசேரி முறிகளின் உடனடி மொத்த விற்பனைகள் ரூ.222,326 மில்லியனாக விளங்கிய வேளையில் உடனடிக் கொள்வனவுகள் ரூ.173,099 மில்லியனாகக் காணப்பட்டன. பெறுமதி நியதிகளில் இவ் விற்பனைகளும் கொள்வனவுகளும் இரண்டாந்தரச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களில் 2003 இன் 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன. 2004 இல் திறைசேரி முறிகளின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பன முறையே ரூ.1,983,963 மில்லியனாகவும் ரூ.807,735 மில்லியனாகவும் காணப்பட்டன. பெறுமதி நியதிகளில் இம் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பன இரண்டாந்தரச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களில் 2003 இன் 49 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 68 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

பிரதேச அபிவிருத்தி

ஆய்வுக்குரிய ஆண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கொடையாளர்களால் நிதியிடப்பட்ட மற்றும் அரச உத்தரவாதமளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்களுக்கான உச்சநிலை முகவராகத் தொடர்ந்தும் செயற்பட்டது. நாட்டில் நுண்பாக, சிறிய, நடுத்தர துறைகளுக்கு வசதியளிக்கும் முகமாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது ஒரு உச்ச முகவராகவிருந்து கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் பங்கேற்பு கொடுகடன் நிறுவனங்களினூடாக நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக விளங்குகின்றது. இது சம்பந்தமாக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களின் கீழ் பங்கேற்பு கொடுகடன் நிறுவனங்களுக்கு, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல், கொடுகடன் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளித்தலும் மீளப்பெறுதலும், அத்தகைய திட்டங்களை கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும், தொடர்பான அமைச்சுக்களின் உதவியுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல், கொடையாளர்களுக்கும், ஏனைய பங்குடமையாளருக்கும் அவசியமான உதவிகளை வழங்குதல் போன்ற வற்றிற்கும் பொறுப்பாக விளங்கியது. இதற்கு மேலாக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறையிலிருக்கும் செயற்றிட்டங்களின் கீழ் தூதுக்குழுக்களுக்கும், கொடையாளிகளுக்கும், அரச முகவர்களுக்கும் புதிய கொடுகடன் திட்டங்களை உருவாக்குவதற்கும் முன்னேற்றங்களை ஆய்வு செய்வதற்குமான, பொறுப்புக்களில் ஈடுபட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்திய செயற்றிட்டங்கள் அட்டவணை II-13 இல் தரப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அதனது அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தளை ஆகிய மூன்று பிரதேச அலுவலகங்களினூடாக வங்கித் தொழில் அபிவிருத்தி, வேளாண்மை உற்பத்தித் திறன் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள், வேளாண்மை உற்பத்திகளினது ஏற்றுமதிச் சந்தைகளை ஊக்குவித்தல் மற்றும் சிறிய நீர்ப்பாசன முறைகள் என்பவற்றில் பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டதன் மூலம் அதனது பிரதேச ரீதியான ஈடுபாட்டினை வலுப்படுத்தியது.

வேளாண்மை பொருட்களை ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்காலத் திகதியில், முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒரு விலையில் ஒரு வாங்குநருக்கு விற்பதன் பொருட்டு வாங்குநருக்கும் உற்பத்தி

அட்டவணை II-13

2004 இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

	செயற்றிட்டத்தின் பெயர்	நிதியிடல் முகவர்	பணித் திட்டங்கள்	ஆரம்ப ஒதுக்கு	கடன்படுநர்களுக்கான ஆண்டு வட்டிவீதம்	2004.12.31 வரைக்குமான கொடுகடன் பகிர்ந்தளிப்பு (ரூ.மில்.)	மீளப்பெறல் %
1.	தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (1999 - 2005)	ஆ.அ.வ	சிறு தேயிலை உடமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்துதல் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தல்.	ஐ.அ.டொ 28 மில்.	ஆண்டொன்றுக்கு சந்தை வீதம் 8.5% இலிருந்து 10.5% (கள அபிவிருத்திக்கு) சந்தை வீதம்+6% (தொழிற்சாலை அபிவிருத்திக்கு)	2,483	92%
2.	இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1998-2004)	ஆ.அ.வ	நிரந்தரப்பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயப் படுத்தலையும் அதிகரித்தல் நாற்று மேடையை அபிவிருத்தி செய்தல் அறுவடைக்குப் பின்னைய கையாளல், பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல்	சி.எ.உ 11.562 மில்.	ஆண்டொன்றுக்கு சந்தை வீதம் 8.5% இலிருந்து 10.5%	1,830	92%
3.	தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் (2000ஆம் ஆண்டில் தொடங்கியது)	ஆ.அ.வ	உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காகவும், தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை. கிராமிய மற்றும் நகர் இளைஞர்களிடையேயான வேலைவாய்ப்பின்மையினையும் கருத்திற்கொண்டு தரத்தினையும் தொடர்பான தேர்ச்சிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவது.	சி.எ.உ. 0.657 மில்.	10 சதவீதம்	13 -	வி.கி
4.	வடமத்திய மாகாணத்தின் பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1996 - 2002) வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (1997 - 2003)	ஆ.அ.வ. வே.அ.ப.நி சு.ச.அ.க, உ.உ.தி	குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு ஊட்டச்சத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல்	இல.ரூபா. 153 மில். இல.ரூபா 43 மில்.	சந்தை வீதம் அல்லது 10% இதில் எது குறைந்ததோ அதனுடன்+ 6 % புள்ளி	21 21	90%
5.	வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (தொடங்கப்பட்ட ஆண்டு 2000)	ப.ஒ. யப்பானிய வங்கி	செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கடன்வழங்கல் முறைமினை நிறுவுவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப்பழக்கத்தை மேம்படுத்தலும்.	யப்பானிய யென் 1,368 மில்.	சந்தை வீதங்கள் வேளாண்மை - 16 ஏனைய நோக்கங்கள் - 20	453	98%
6.	மாத்தளை பிரதேச பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2000 - 2006)	வே.அ.ப.நி	கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களினதும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள வேளாண்மைக் குடும்பங்களினதும் வருமானத்தை நிரந்தரமாக உயர்த்தி வலுவாக்கல்	சிஎஉ 2 மில்.	12 சதவீதம்	175	95%
7.	புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்	அ.வ.உ.தொ.ப.கொ.நி	குறுங்கால உணவுப்பயிர்களைப் பயிரிடும் கிராமிய வேளாண்மையாளர்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்	-	8 சதவீதம்	936	வி.கி
8.	சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-2000)	வே.ப.நி க.ப.அ.க இலங்கை அரசு	செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறைமையினைத் தாபிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும்.	சி.எ.உ 4.85 மில்.	சந்தை வீதங்கள் வேளாண்மை-16 ஏனைய நோக்கங்கள்-20	1,224	97%
9.	கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் (1997 - 2007)	இலங்கை அரசு	வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.	இல.ரூபா 100 மில்.	10 சதவீதம்	403.1	94%
10.	தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதி) (2000ஆம் ஆண்டிலிருந்து)	இலங்கை அரசு	தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்	ஐ.அ.டொ 8.1 மில்.	12 சதவீதம்	50	90%
11.	நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் (கொடுகடன்கூறு)	ஆ.அ.வ	குறைந்த வருமானமுடைய குடும்பஅலகுகளுக்கு வீடமைப்பு மேம்பாடுகளுக்காகக் கடனை வழங்குவதற்கு.	ஐ.அ.டொ. 20 மில்.	11.9 சதவீதம்	1,875	வி.கி

மூலம்: இலங்கை மத்திய வங்கி

யாளருக்குமிடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தமான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தம் 1999 இல் மத்திய வங்கியினால் தொடக்கி வைக்கப்பட்டது. புத்தாக்கத் திற்கும் அபிவிருத்திக்குமான பன்னாட்டு வங்கி (உலக வங்கி) அதனது சந்தை இட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் உதவியளித்ததன் மூலம் தொடக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவியது. மத்திய வங்கி நாடெங்கிலுமுள்ள பங்கேற்பு நிதியியல் நிறுவனங் களினாலும், பங்கேற்பு முகவர்களினாலும் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைளை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலமாக இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. ஆய்வுக்குரிய ஆண்டில் இஞ்சி, சூரியகாந்திப்பூ மற்றும் பப்பாசி போன்ற புதிய பயிர்வகைகளை பெருமளவு புவியியல் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் இந்த முறையினை விரிவுபடுத்துவதற்கு முக்கிய வேளாண்மைப் பகுதிகளில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இடம் பெற்றன. வேளாண்மைப் பொருட்களின் விலைகளை உறுதிப்படுத்துவதற்காக முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் தாக்கத்தினை அடையாளம் காணும் வகையில் மத்திய வங்கி அரசாங்கத்தின் ஆலோசனையுடன் கடன் பெறுவதற்கான மேல் எல்லையினை ஆய்வுக்குரிய ஆண்டில் கடன்பெறுநர் ஒருவருக்கு ரூ.5 மில்லியனிலிருந்து ரூ.25 மில்லியனாக அதிகரித்துள்ளது.

பிரதேச அபிவிருத்தி திணைக்களம் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மற்றும் அதன் பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் வேளாண்மைத் துறையின் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்காக முன்னோடி அடிப்படையில் 2004 இல் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. புதிய தொழில்நுட்பத்தினை அதாவது சொட்டு நீர்ப்பாசனம் (நுண்ணிய நீர்ப்பாசன) முறைகள், அறுவடைக்குப் பின்னைய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், உள்ளீடுகளின் பிரயோகம் (வளமாக்கி மற்றும் கலப்பின விதைகள்) போன்றவற்றின் அறிமுகப்படுத்தலின் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நெல், ஏனைய களப்பயிர்கள் மற்றும் காய்கறிகளை முக்கிய வருமானத்தினை அளிப்பன என்ற அவற்றின் குறிப்பிடத்தக்க தன்மையினைக் கருத்திற்கொண்டு அதற்கு முன்னுரிமையளிக்கும் விதத்தில் இப் பயிர்களைத் தெரிவு செய்தன. ஆய்விற்குரிய ஆண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வேளாண்மையாளர்களுக்கு புதிய அறிவினையூட்டும் விடயங்களை இறக்குமதி செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் புதிய தொழில்நுட்பங்களை வழங்குபவர்களுடனும் வேளாண்மை உற்பத்திகளைக் கொள்வனவு செய்பவர்களுடனும் கூட்டங்களை நடத்தியது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளினதும் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு ஆற்றல் வாய்ந்த தன்மையினை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் அவற்றின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது. மீளாய்விற்குரிய ஆண்டில் அனைத்து ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளும் அனைத்து நிதியியல் விகிதங்களிலும் வரவேற்கத்தக்க மேம்பாட்டினை அடைந்ததுடன் வரவுசெலவுத் திட்ட இலக்குகளையும் எய்தின. பிரதேச அபிவிருத்தி வங்கியின் இலாபத் தன்மையும் அதிகரித்ததுடன் அவற்றின் தேறிய தொழிற்படாக் கடன்களின் விகிதமும் ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மேலும், சொத்துக்களின் மீதான வருமானமும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை ஆகியவிடங்களிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் மூன்று பிரதேச அலுவலகங்களும் அப்பிராந்தியங்களில் அவை நிறுவப்பட்டமைக்கான குறிக்கோள்களை அடைவதற்கான தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. பிரதேச அலுவலகங்களாவன நிதிநிறுவனங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் அபிவிருத்தி கடன்வழங்கலில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் தொழில் முயற்சியாண்மையை அபிவிருத்தியை ஊக்குவித்தல், வங்கித் தொழிலிலும் ஏனைய தொடர்பான துறைகளிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்தல் என்பவற்றிற்காக பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டன. அவை அவ்வப் பிரதேசங்களிலுள்ள நிதிநிறுவனங்களூடாக வேளாண்மை அபிவிருத்தி மற்றும் கிராமிய கொடுகடன்களை வழங்குதல் என்பவற்றோடு தொடர்புபட்ட முயற்சிகளிலும் ஈடுபட்டன.

அட்டவணை II.14
முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் – 2004

பயிர் வகை	ஒப்பந்தங் களின் எண்ணிக்கை	நன்மை பெற்ற வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை	தீர்மானிக்கப் பட்ட முன்னோக்கிய விலை ரூ.கி.கி
சோளம்	7,048	7,102	14 -18
நெல்	13,130	13470	13 - 16
சிறு தானியம்	1,813	1,890	20 - 25
சோயா	5,442	5,520	27 - 30
பாசிப்பயறு	5,335	5,443	45 - 50
ஏனைய பயிர்வகை	9,075	9,940	25 - 375
மொத்தம்	41,843	43,365	

மூலம்: பிரதேச அபிவிருத்தி திணைக்களம்

முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழ் பிரதேச அலுவலகங்கள் முக்கியமாக வேளாண்மை உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துவதன் மீதும் வேளாண்மைக் கொடுகடன்களை வழங்குவதன் மீதும் மிகுந்த கவனம் செலுத்தின. இதன்படி, பிரதேச அலுவலகங்கள் ரூ.1,181 மில்லியன் பெறுமதி கொண்ட 27,018 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களுக்கு வசதியளிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாண்டில் மூன்று பிரதேச அலுவலகங்களும் முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கை முறைகள், வேளாண்மையாளர்களின் உற்பத்தியாக்க மேம்பாடு மற்றும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழான கொடுகடன் வசதிகள் என்பன பற்றி 116 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டன. அனைத்து மூன்று பிரதேச அலுவலகங்களும் வாராந்த அடிப்படையில் தரவுகளைச் சேகரித்தமை தரவுச் சேகரிப்பாளர்களின் நன்மைக்காக நிலைய மேற்பார்வைகளையும் ஆய்வரங்குகளையும் மேற்கொண்டமை என்பனவற்றின் மூலம் இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரவியல் திணைக்களத்திற்கு உதவின. மேலும் மீளாய்விற்குரிய ஆண்டில் ஊ.சே. நிதியக் கணக்கிலுள்ள நிலுவைகளை பரிசோதிக்கும் பணிகளும் அக்கணக்குகளில் வெளிநிற்கும் நிலுவைகளை எடுத்துக்காட்டும் கூற்றுக்களை வழங்குவதும் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டு வந்தது.

செயலகம்

2004 இல் செயலகத் திணைக்களம் வங்கிக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, வங்கி அலுவலர்களுக்கான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணங்கள், பொதுநிருவாகம், அலுவலக தொழிற்பாடு, விடுப்புக் கொள்கை விடயங்கள் மற்றும் உபயோகத்திலில்லாத பொருட்களை அகற்றுதல் போன்ற ஏனைய பல வகைப்பட்ட நிருவாகத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கு மேலாக ஊழியர்களுக்கிடையேயான தனிப்பட்ட உறவுகளை ஊக்குவிக்கும் முகமாகவும், வேறுபட்ட துறைகளில் அவர்களின் திறமைகளை மேம்படுத்தும் முகமாகவும் 2004 இல் திணைக்களம் பல சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தது. திணைக்களம் பயணம், பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு தொடர்பான கொடுப்பனவுகளையும், முற்பணங்களின் தீர்ப்பனவுகளையும் மேற்கொண்டது.

முன்பு வெளிமுகவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அஞ்சல் அறை தொழிற்பாடுகள் மற்றும் தரவு பதிவுத் தொழிற்பாடுகள் என்பன தொடர்ந்தும் அதே ஏற்பாடுகளுடன் பெறப்பட்டன.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வங்கி ஊழியர்கள் / ஓய்வுபெற்றோரின் தேவைகளை அடையாளம் கண்டு நிவாரணம் வழங்குவதற்கென 2004 திசெம்பர் 28 இல் செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்திடம் வங்கி ஊழியர்கள், கட்டடங்கள், கருவிகள், மற்றும் சொத்து என்பவற்றைப் பாதுகாக்கும் மற்றும் வங்கியின் சொத்துக்களையும் நாணயங்களையும் எடுத்துச் செல்லும்போது அவற்றிற்கு பாதுகாப்பு வழங்கும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத் திணைக்களமானது முக்கிய தகவல் தொழில் நுட்ப பிரயோகங் களுக்கான வியாபார தொடர்ச்சித் திட்டத்தினை விருத்தி செய்வதிலும் முதன்மை தளத்திலும், அனர்த்த மீட்பு தளத்திலுமுள்ள தகவல் தொழில்நுட்ப பொறிகளுக்கும் பொருத்துக்களுக்கும் பௌதீக பாதுகாப்பினை வலுப்படுத்தல் ஆகிய பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

தீயணைப்பு கண்காணிப்பாளர்கள், மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோர் அவர்களின் கடமைகளை சிறப்பாக ஆற்றுவதற்கு அவர்களை தயார்படுத்தும் பொருட்டு பின்வரும் பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(அ) மத்திய வங்கியின் தலைமை அலுவலகத் தினுள் அனைத்து திணைக்களங்களிலுமுள்ள தீயணைப்பு கண்காணிப்பாளர்களுக்கும் தீயணைப்பு வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது கொழும்பு தீயணைப்புப் படையின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது. மேலும் பாதுகாப்பு அலுவலர்களின் பங்கேற்புடன் மத்திய வங்கியின் அனைத்து ஊழியர் களுக்கும் தீ விபத்தின்போது வெளியேறும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த தீ விபத்து வெளியேறல் தொடர்பான பயிற்சிக்கு தீயணைப்பு வண்டியும், கருவியும் கொழும்பு தீயணைப்பு படையினரால் கொண்டு வரப்பட்டன.

(ஆ) வருடாந்த ஆயுதப் பயிற்சியும், சுடுகலப் பயிற்சியும் 2004 நவெம்பர் 13, 14, 20

மற்றும் 21ஆம் நாட்களில் பாதுகாப்பு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

(இ) வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் மற்றும் பிரதேச அலுவலகங்களிலுள்ள ஊழியர்களுக்குமான தீயணைப்பு வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் தீயணைப்பு அலுவலர்களால் நடாத்தப்பட்டது.

புள்ளி விபரங்களும் கள அளவீடுகளும்

புள்ளி விபரவியல் திணைக்களம் 2004 இல் அதன் இரண்டு முக்கிய பணிகளான வழமையான செயற்பாடுகளான முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிலிகள் மீதான புள்ளிவிபரத்தரவு சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்வு செய்து பரப்புதல், மற்றும் முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்ட 2003/04 நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டினை நிறைவு செய்தல் ஆகியவற்றை பூர்த்தி செய்துள்ளது. முன்னையது தேசிய கணக்குகள், விலைகள், கூலிகளும் தொழில்நிலையும் பற்றிய புள்ளி விபரங்களை உள்ளடக்கிய வேளையில் பின்னையது இலங்கையின் வாழ்க்கைத் தரத்தையும், சமூக பொருளாதார அபிவிருத்திகளையும் மதிப்பிடுவதற்காக பரந்த அடிப்படையிலான சமூக பொருளாதார மாறிலிகள் மீதான காலாந்தர அளவீட்டுத் தரவுகளை உருவாக்கும் முகமாக வங்கியினால் 1953 ஆம் ஆண்டு தொடக்கம் கிரமமான இடைவெளியில் நடாத்தப்படும் ஒரு தொழிற்பாடாகும்.

தற்போதைய அளவீட்டின் கள வேலைகள் ஒக்தோபரில் முடிவடைந்ததுடன் தரவுகளை ஒழுங்குபடுத்தி சரிபார்த்தல் 2004 திசெம்பரில் முடிவுற்றது. இந்த அளவீட்டின் ஆரம்ப கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் திசெம்பரில் வங்கியினால் ஒரு ஆய்வரங்கு நடாத்தப்பட்டது. 2005 நடுப்பகுதியில் இறுதி அறிக்கை வெளியிடப்பட விருக்கிறது. ஆனால் ஆரம்ப தரவுகளை வங்கியின் வெப்தளமான www.centralbanklanka.org இலிருந்து பெற முடியும்.

நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04

2003/04 நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடானது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு குடியிருப்பாளர் மட்டங்களில் முக்கிய சமூக பொருளாதார மாறிலிகள் மீதான தகவல்களை சேகரிக்கும்முகமாக தொடங்கப்பட்ட வீட்டுத்துறை மீதான அளவீடுகளின் தொடர்களில் 8ஆவது அளவீடாக அமைகின்றது. நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு-2003/04 ஆனது 5.10.2003 அன்று தொடங்கப்பட்டு 10.10.2004 அன்று பூர்த்தி செய்யப்பட்டது. கள கணக்கெடுப்புக்கள் ஒவ்வொன்றும் மூன்று மாதங் கொண்ட நான்கு வட்டங்களாக ஒவ்வொரு வட்டத்திலும் வடமாகாணத்திலுள்ள மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்கள் நீங்கலாக 9 மாகாணங்கள் உள்ளடக்கியதாக மாதிரி குடியிருப்பாளர்களில் நான்கில் ஒரு பங்கினர் கணக்கெடுக்கப்பட்டனர். 1,508 பிரிவுகளில் 11,722 குடியிருப்புக்களை உள்ளடக்கிய மிகவும் வெற்றிகரமான கள நிகழ்ச்சித்திட்டமானது பெரும்பாலும் 100 சதவீதமான பிரிவுகளின் உள்ளடக்கத்தினையும் 99.6 சதவீதமான குடியிருப்பாளர்களின் பதிலிறுப்பு வீதத்தினையும் விளைவித்தது. இவையே இவ்அளவீட்டுத் தொடர்களில் என்றுமில்லாத அதியுயர் உள்ளடக்கமாகவும் பதிலிறுப்பு வீதமாகவும் விளங்குகின்றன. யுத்த நிறுத்தத்தையும், 2001 குடித்தொகை வீடமைப்பு தொகை மதிப்பீட்டின் விரிவுபடுத்தப்பட்ட உள்ளடக்கத்தினையும் சாதகமாகக் கொண்டு 20 ஆண்டு இடைவெளிக்குப் பின்பு முதன் முதலாக இந்த அளவீட்டில் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களையும் உள்ளடக்கக் கூடியதாகவிருந்தது. ஆகையால் இந்த அளவீட்டில் உருவாக்கப்பட்ட தரவுகள் குடியிருப்பாளர் மட்டத்தில் சமூக பொருளாதார நிலைமைகள் மீது நடைமுறை தரவுத் தளத்தை பூர்த்தி செய்வதன் மூலம் நாடு முழுவதிலுமுள்ள குடியிருப்பாளர்களின் வாழ்க்கை நிலைமைகளை மதிப்பிடுவதற்கு உதவும். அத்துடன் விலைகள் கூலிகள் மற்றும் குடியிருப்பாளர்களின் நுகர்வு என்பன தொடர்பாக அளவீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள், விலைகள் மற்றும் கூலிகள் மீதான சுட்டெண்களைத் திரட்டி பூரணப்படுத்து வதற்கும் நாட்டின் தேசிய கணக்கீட்டில் தனியார் நுகர்வுச் செலவினத்தை மதிப்பீடு செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை

நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின் கீழான தரவு சேகரிப்பானது கள பரீட்சிப்பாளர்களாகச் செயற்படும் நாடளாவிய பாடசாலை ஆசிரியர்களின் வலையமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2004 சனவரியில் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக நாடெங்கிலும் 93 நிலையங்கள் காணப்பட்டன. இவ்வாண்டில் இந்த முறைமைக்கு சில மேம்பாடுகள்

அறிமுகப்படுத்தப்பட்டன. முதலாவதாக இன முரண்பாடுகள் காரணமாக கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக தரவுகள் கிடைக்கப் பெறாமலிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் 14 புதிய தரவு சேகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டதன் மூலம் புவியியல் ரீதியான உள்ளடக்கம் அதிகரிக்கப்பட்டது. இரண்டாவதாக, உற்பத்தி வேறுபாடுகள் ஏற்கனவேயுள்ள உற்பத்திகளும் வர்த்தகப் பெயர்களும் அற்றுப்போதல், புதிய பொருளாதார நடவடிக்கைகளின் தோற்றம் போன்ற சந்தைகளிலுள்ள நடைமுறை அபிவிருத்திகளைக் கவனத்திலெடுத்து புதியதொரு தரவுச் சேகரிப்பு முறைமை வடிவமைக்கப்பட்டது. மூன்றாவதாக, கள மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டம் வலுப்படுத்தப்பட்டு முன்னரே தயாரிக்கப்பட்ட அட்டவணை அடிப்படையில் அனைத்து நிலையங்களும் கண்காணிப்புச் செய்யப்பட்டன. முன்னரைப் போலவே, தமது தரவுச் சேகரிப்புக்களில் நேர்த்தி, தரம், ஆற்றல், நேரந் தவறாமை என்பவற்றை மேம்படுத்தும் முகமாக புலனாய்வாளர்களுக்கு புதுப்பித்தல் பயிற்சி யளித்தலுக்காகவும் பொருளாதாரத்தில் காணப்படும் சமகால நிகழ்வுகள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவதன் மூலம் அந்த அறிவாற்றலை பாடசாலை மாணவர்களுக்கும் சமூகத்தின் ஏனைய உறுப்பினர் களுக்கும் மாற்றுவதற்காகவும் நான்கு பிரதேச ஆய்வரங்குகள் மாத்தறை, கண்டி, கொழும்பு மற்றும் அநுராதபுரம் போன்ற இடங்களில் நடாத்தப்பட்டன.

தேசிய மற்றும் பிரதேச வருமானக் கணக்குகள்

திணைக்களம், இலங்கையின் தேசிய கணக்குகளின் வருடாந்த, காலாண்டு மதிப்பீடுகளைத் திரட்டுவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இவை முதலாந்தர, இரண்டாந்தர தரவுகளின் சேகரிப்பையும் நாட்டின் மொத்த உற்பத்தி, நுகர்வு, சேமிப்பும் முதலீடும் தொடர்பான முக்கிய மாறிலிகள் மீதான மதிப்பீடுகளையும் உள்ளடக்கியுள்ளன. இந்த மதிப்பீடுகள் 2004 இலும் அச்சிடல் மூலமும் மின்னியல் ஊடகங்கள் ஊடாகவும் பொதுமக்களிடையே பரப்பப்பட்டன. காலாண்டு மதிப்பீடுகள், முன்னரே வெளியிடப்பட்ட கலண்டருக்கு இணங்க நடாத்தப்பட்ட 3 ஊடக மாநாடுகளின் ஊடாக பரப்பப்பட்டன. 2003 இல் தொடங்கப்பட்ட செலவின முறையிலமைந்த காலாண்டு தேசிய கணக்குகள் மீதான தரவுத்தொடரை கட்டியெழுப்பும் வேலைகள் 2004 முழுவதும் தொடரப்பட்டதுடன் முறைமையில் மேலதிக மேம்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்த மதிப்பீடுகள் விரைவில் பூர்த்தியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த அண்மிய காலத்தைப் போன்று, திணைக்களமானது மிக 2002 இற்கான மாகாண வாரியாக வகைப்படுத்தப்பட்ட வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்திகளை ஓராண்டு தாமதத்துடன் திரட்டியது. இந்தப் புள்ளிவிபரங்கள் முதன் முதலாக 2003 இன் ஆண்டறிக்கையில் காலத்தொடர்களாக 1996 இலிருந்து 2002 வரைக்கும் பொதுமக்களுக்கு கிடைக்கும்படி செய்யப்பட்டது. இந்தத் தொடர்கள் நாட்டின் பொருளாதார நடவடிக்கைளிலும் வளர்ச்சி செயலாற்றத்திலும் காணப்படும் பிரதேச ரீதியான வேற்றுமைகளை பாகுபடுத்தவும் அடையாளம் காணவும் கொள்கை வகுப்பாளர்களுக்கு விரிவான புள்ளி விபரங்களை வழங்குகின்றன.

விலைகள், கூலிகளும் தொழில்நிலையும்

திணைக்களமானது ஆறு மாதாந்த விலைச்சுட்டெண்களை திரட்டி பாகுபடுத்தியுள்ளது. ஐந்து பிரதேச வாரியான நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் ஐந்து வேறுபட்ட பிராந்தியங்களில் சில்லறை விலைகளின் விலை அசைவுகளை அளவிட்ட வேளையில், மொத்த விற்பனை விலைச்சுட்டெண் உற்பத்தியாளர் அல்லது மொத்த விற்பனை விலைகளிலான அசைவுகளை அளவிட்டது. அனைத்து சுட்டெண்களையும் திரட்டுவதற்கு அவசியமான விலைகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை ஊடாக அல்லது கம்பனியிலிருந்து பெறப்பட்டு திணைக்களத்தினால் பயிற்றப்பட்ட புலனாய்வாளர் களினூடாக சேகரிக்கப்பட்டன.

இதற்கு மேலாக, திணைக்களம், தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பன அடிப்படையிலமைந்த நுகர்வோர் விலைகளிலான அசைவுகளின் பகுப்பாய்வுகளை தொடர்ந்து மேற் கொண்டது. இத்திணைக்களம் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்களினால் அளவிடப்படும் பணவீக்க அசைவுகள் மீதான மாதாந்த பத்திரிகை வெளியீட்டினை தொடர்ந்தும் வெளியிட்டது. இதற்கு மேலாக விலைகளினதும், கூலிகளினதும் அசைவுகளை பகுப்பாய்வு செய்து காலாண்டு அறிக்கைகளை நாணயச்சபைக்கு சமர்ப்பிக்கும் முறை இவ்வாண்டில் நிறுவப்பட்டது. நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையிலான கூலித்தரவுகளும் நுகர்வோர் நிதி அளவீட்டிலிருந்து பெறப்பட்ட முறைசாராத துறை தொழில்நிலை அமைப்பினதும் அடிப்படையில் முறை சாரா துறை கூலிவீதச் சுட்டெண்ணொன்றை திரட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் ஆண்டுத் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்றிட்டம் 2004 திசெம்பரில் பூர்த்தி செய்யப்பட்டது.

வருடாந்த மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீடுகளை இத்திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது. இரண்டு அளவீடுகளிலுமிருந்தும் கிடைத்த தகவல்கள் தேசிய வருமானக் கணக்குகளின் திரட்டலுக்குப் பயன்படுத்தப்பட்டன. இந்த அளவீடுகளிலிருந்தான முக்கிய கண்டுபிடிப்புக்கள் ஆண்டு முழுவதும் கிரமமான அடிப்படையில் நாணயச்சபைக்கும் அறிவிக்கப்பட்டன.

புள்ளிவிபரங்களை பரப்புதல்

இவ்வாண்டில், புள்ளிவிபரத் திணைக்களம் அதன் இரண்டு வருடாந்த வெளியீடுகளான "சமூக பொருளாதார தரவு-தொகுதி XXVI" இனை யூனிலும் "இலங்கையின் சமூக பொருளாதார புள்ளி விபரங்கள் 2004 - தொகுதி XVI" இனை திசெம்பரிலும் வெளியிட்டு வைத்தது. வங்கியின் 2005 ஆம் ஆண்டின் கையடக்க தினக்குறிப்பிலுள்ள புள்ளிவிபரவியல் அட்டவணைகள் பூரணப்படுத்தப்பட்ட வேளையில், 2003/04 நுகர்வோர் நிதி அளவீட்டிலிருந்தான ஆரம்ப புள்ளி விபரங்களைத் தருவதற்கென புதிய அட்டவணைகள் அறிமுகப் படுத்தப்பட்டன.

இவ்வாண்டில் இத்திணைக்களம் சட்டபூர்வமான மற்றும் வங்கியின் ஏனைய பல வெளியீடுகளுக்கும் அதனது கிரமமான பங்களிப்புக்களை வழங்கியது. தேவையானவிடத்து நாணயச்சபைக்கு தேசிய வருமானம், பணவீக்கம், விலைகள், கூலிகள் மற்றும் தொழிற்சந்தை தொடர்பான நடைமுறை நிலைமைகள் பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. திணைக்களம் தொடர்ந்தும் வங்கியிலுள்ள உள்ளூர் வலையமைப்பிலிருக்கும் திணைக்களத்தின் வெப்தளமான "ஸ்ராநெற்" இனை கிரமமாக பூரணப்படுத்தியதுடன் வங்கியின் வெப்தளத்திற்கு ஆண்டு முழுவதும் அதன் பங்களிப்பைச் செய்தது.

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள், வங்கியினாலும் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் கல்வி நிறுவனங்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு ஆய்வரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் மூலவள ஆட்களாக கிரமமான முறையில் தொழிற்பட்டனர். மொத்த உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்திணைக்களம் இவ்வாண்டில் பல உயர் அலுவலர்களுக்கும் உயர் பதவியல்லாத அலுவலர்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி நெறிகளில் தொடர்ந்தும் பயிற்சியளித்தது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த முன்மதித் தேவைப்பாடுகளுக்கு நிதிக் கம்பனிகள் இசைவாக நடந்து கொள்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பாக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இத் தொழிற்பாடுகள் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலத்திலான பரீட்சிப்புக்களினூடாக மேற்கொள்ளப் பட்டன. நிதிக் குத்தகையிடல் நிறுவனங்களை பதிவு செய்து கண்காணிக்கும் பணியும் இத்திணைக்களத் திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

1988 இன் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் ஏற்பாடுகளின் கீழ் இவ்வாண்டில் ஒரு புதிய நிதிக்கம்பனி பதிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக 2004 இறுதியில் நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 27 ஆக விளங்கியது. இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 65 ஆகக் காணப்பட்டது.

2. தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இச் செயற்பாட்டின்போது நிதிக் கம்பனிகளின் நிதியியல் நிலைமைகளைக் கண்டறிந்து கொள்ளும் நோக்குடனும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் அவர்கள் இணங்கி ஒழுகுவதனைக் கண்காணிக்கும் பொருட்டு காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிதிக் கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட கூற்றுக்கள் பின்வருவனற்றை உள்ளடக்கியிருந்தன.

- திரவச் சொத்துக்களின் வாராந்தக் கூற்றுக்கள்
- பாரிய முற்பணங்களின் மாதாந்த கூற்றுக்கள்
- சொத்துக்கள், பொறுப்புக்கள், காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றின் கூற்றுக்கள்
- செயற்படா முற்பணங்களின் காலாண்டுக் கூற்றுக்கள்

கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு ஐந்தொகை மற்றும் இலாப நட்டக் கணக்குகள்

நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள், ஆகக் குறைந்த மூலதனம் மற்றும் திரவத் தேவைப்பாடுகள், அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை மற்றும் பங்கு முதலீடுகள் மீதான வரையறை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

3. தலப் பரீட்சிப்புக்கள்

இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் நான்கு நிதிக் கம்பனிகளின் அனைத்தையும் உள்ளடக்கிய தலப் பரீட்சிப்புக்களை பூர்த்தி செய்துள்ளது. மூலதனப் போதுமை, சொத்துக்களின் தரம், முகாமைத்துவ வினைத்திறன், வருவாய் மற்றும் திரவத்தன்மை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முறைகள், நியதித் தேவைப்பாடுகளுக்கு கம்பனிகள் இணங்கி ஒழுகுதல் என்பன பரீட்சிப்புக்களில் உள்ளடக்கியிருந்தன. இதே வேளை, 2005ஆம் ஆண்டிற்கான வருடாந்த உரிமம் வழங்குவதற்கு முன்னராக தலப்பரீட்சிப்புக்கு உட்படாத நிதிக் கம்பனிகள் மீதும் உடன் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வுடன்பரீட்சிப்புக்கள், பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத மற்றும் முறைகளிலும் கட்டுப்பாடுகளிலும் உள்ள குறைபாடுகள் போன்ற தெரிவு செய்யப்பட்ட முக்கியமான துறைகளை உள்ளடக்குகின்றன.

4. நிதிக் குத்தகை வியாபாரங்களைப் பதிவுசெய்தல்

2000 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி நிதிக் குத்தகை வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு பதிவுச் சான்றிதழ் ஒன்று அவசியமாகும். இவ்வாண்டில் 2 பொதுக்கம்பனிகள், 1 வர்த்தக வங்கி, 2 நிதிக் கம்பனிகள் மற்றும் 4 சிறப்பியல்பு வங்கிகளை உள்ளடக்கி நிதிக் குத்தகை விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் 9 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. 2004 இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனங்களின் எண்ணிக்கை 65ஆக விளங்கி, 11 உரிமம் பெற்ற வங்கிகளையும், 8 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளையும் 27 நிதிக் கம்பனிகள் மற்றும் 19 பொதுக் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தன.

5. முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

1980களின் இறுதியிலும் 1990களின் தொடக்கத்திலும் முறிவடைந்த நிதிக் கம்பனிகளில் ஒன்பது கம்பனிகளினது நிருவாகமும் முகாமைத்துவமும் நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தன. இவற்றுள் ஆறு கம்பனிகள் 2004 இறுதியில் ஒடுக்கி விடுவதன் கீழ் இருந்தன. இவ்வாண்டில், ஒரு முறிவடைந்த நிதிக் கம்பனி தொடர்பாக ஒடுக்கி விடுதலுக்கான மனு ஒன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மற்றுமொரு முறிவடைந்த கம்பனியை மூடிவிடுவதற்கான மனு ஒன்றினை சமர்ப்பித்தலுக்கான ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

6. பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

நிதி வியாபாரத்திலான அதிகார பூர்வமற்ற நடத்தை மற்றும் பிரமிட் திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்களில் முக்கியமாக பொதுமக்களுக்கு அறிவூட்டும்முகமாக திணைக்களம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்தியது.

(அ) பின்வருவன செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

(i) 2004 பெப்புருவரியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பட்டியலொன்று

(ii) 2004 பெப்புருவரி, மே, ஒத்தோபர் மாதங்களில் முறையே நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான நிதி வியாபாரங்களை நடத்திக் கொண்டிருந்த மூன்று கம்பனிகளின் பெயர் விபரங்கள்.

(iii) பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல் தொடர்பான பத்திரிகை அறிக்கை 2004 மேயில் வெளியிடப்பட்டது.

(iv) பிரமிட் திட்டங்கள் தொடர்பான பொது மக்களுக்கான விபரமான அறிவித்தல் 2004 யூனிலும் அதனை தொடர்ந்து மேலும் பல குறுகிய அறிவித்தல்களும்

(v) பிரமிட் திட்டங்களைப் பற்றி திணைக்களத்திலுள்ள அலுவலர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள்.

(ஆ) வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றியும் பத்திரிகைகளில்

நேர்காணல் மூலமாகவும், அங்கீகரிக்கப் படாத வைப்புக்களின் ஏற்புமற்றும் சில தரப்பினரால் தொழிற்படுத்தப்படும் பிரமிட் திட்டங்கள் என்பன தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டல்களை மேற்கொண்டதுடன் பிற அமைப்புக் களினால் நடாத்தப்படும் பொது மக்களுக்குக் கிடைக்கத்தக்க முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய ஆய்வரங்குகளில் மூலவள ஆட்களாகவும் பங்குபற்றினர்.

7. நிதி வியாபாரங்களின் அங்கீகாரமற்ற நடத்தை மற்றும் தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலான புலனாய்வுகள்

சட்ட பூர்வமற்ற முறையில் நிதி வியாபாரங்களை நடாத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட பல நிறுவனங்களின் விவகாரம் தொடர்பாக திணைக்களமானது புலனாய்வுகளை மேற்கொண்டது. இரண்டு கம்பனிகள் தொடர்பாக புலனாய்வு பூர்த்தியாக்கப்பட்டு அறிக்கைகள் நாணயச்சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் நாணயச் சபையானது இவ்விரு கம்பனிகளும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் நிதி வியாபாரங்களை நடாத்தியதாக தீர்மானமெடுத்தது. இக் கம்பனிகள் தொடர்பாக நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வித சட்ட அங்கீகாரமுமின்றி நிதி வியாபாரத்தினை ஒரு கம்பனி நடாத்தியது என்ற தீர்மானத்தினை நாணயச்சபை மேற்கொண்டதன் விளைவாக 2004 இல் திணைக்களமானது நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கத் தவறிய அக்கம்பனிக்கு எதிராக சட்ட நடிவடிக்கையினை தொடங்கியது.

2004 இல் நாணயச்சபைக்கும் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கும் எதிராக இரு கம்பனிகளினால் செய்யப்பட்டிருந்த இரண்டு மனுக்களை மேன்முறை யீட்டு நீதிமன்றம் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தனது தீர்ப்பினை வழங்கியிருந்தது. திணைக்களப் பணிப்பாளர் தங்களிடமிருந்து தங்கள் வியாபாரம் தொடர்பாக தகவல்களையும் சான்றுகளையும் கேட்டிருந்ததை பல நிலைகளில் ஆட்சேபித்து கம்பனிகள் அவர்மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தன. நீதி மன்றத் தீர்ப்பில், மேன் முறையீட்டு நீதிமன்றம் எடுத்துக்கூறிய முக்கிய தத்துவம் யாதெனில், கம்பனிகள் 'கொடுகடன் முதலீடுகள் ' என்ற பெயரில் வைப்புக்கள் எடுத்தலை மேற்கொண்டனரா என்பதை முடிவு செய்வதற்கு பணிப்பாளர், தகவலையும் சான்றுகளையும் கோர உருத்துடையவர் என்பதேயாகும்.

வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம்

வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் தமது, அறிவாற்றலைப் பகிர்ந்தளித்தல் மற்றும் மத்திய வங்கி யினதும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினதும் ஆளணியின் தொழில்திறனை மேம்படுத்துதல் போன்ற தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இத்தகைய தொழிற்றிறனை தரமுயர்த்துவது ஒருபுறம் தொழில்நுட்ப வளர்ச்சிகளிலிருந்தும் நிதியியல் புத்தாக்கத்திலிருந்தும் எழுகின்ற சவால்களை எதிர்கொள்ளுவதற்கும் ஒரு மேம்பாடடைந்த உற்பத்தித் திறனின் ஊடாக தமது நிறுவனங்களின் பெறுமதியை கூட்டுவதற்கும் மிகவும் அத்தியாவசியமாகும். 2004 இல், வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் முன்னைய ஆண்டின் 71 இற்கு எதிராக 69 குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. வங்கித் தொழிற்பாடுகள் மற்றும் வங்கி மேற்பார்வை, நிதியியல்துறை அபிவிருத்தி, பொருளாதார முகாமைத்தவம் போன்ற துறைகளின் பரந்த அளவிலான விடயங்களை இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடக்கியிருந்தன. தகவல் தொழில்நுட்பம், மொழித்தகைமை மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சி என்பன மீதான பல நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமாக இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டன. வங்கித்தொழில் ஆய்வு நிலையமானது கிராமியத்துறையின் தேவைகயைப்பூர்த்தி செய்வதற்காக

அட்டவணை II-15
2004இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

	பயிற்சி நிகழ்ச்சித் திட்ட. எண்ணிக்கை	பயிற்சி பெறுவோர்			மொத்தப் பயிற்சி மணித்.
		இ.ம.வ	ஏனையவை	மொத்தம்	
வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் வங்கிமேற்பார்வையும்	15	86	350	436	186
நிதியியல்துறை அபிவிருத்தியும் பொருளாதார முகாமைத்துவமும்	5	35	106	141	60
தகவல் தொழில்நுட்பம்	23	311	10	321	738
மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகள்	7	172		172	436
முகாமை	2	16	43	59	24
கிராமியத்துறை	5	-	123	123	84
சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	12	131	46	177	381
மொத்தம்	**69**	**758**	**716**	**1,474**	**2,033**

மூலம்: வ.க.ஆ.நிலையம், இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II-16

2004இல் நடத்தப்பட்ட ஞாபகார்த்த விரிவுரைகளும் பொது ஆய்வரங்குகளும்

நாள்	விடயம்	விரிவுரையாளர்
29 சனவரி 04	இலங்கையின் பொதுக்கல்வி மீதான தேசிய கொள்கையை நோக்கி	பேராசிரியர் ஆர்.பி.குணவர்த்தன தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
16 பெப்புருவரி 04	கொடுப்பனவு முறை சட்டச்சீர்திருத்தம்: செயற்பரப்பும் கூறும்	பேராசிரியர் பெஞ்சமின் ஜிவா யோக் பல்கலைக்கழகம், கனடா
26 பெப்புருவரி 04	இறைக் கூட்டமைப்பு சனநாயக ஆளுகையும் (சுதந்திரதின ஞாபகார்த்த விரிவுரை)	பேராசிரியர் றெபர்ட் பி இமான் பென்சில்வேனியா பல்கலைக்கழகம ஐ.அமெரிக்கா
23 மார்ச்சு 04	முதியோர் வருமானப் பாதுகாப்பு: ஓய்வூதியம்	கலாநிதி உஸ்வத்த ஆராய்ச்சி ஆலோசகர், இலங்கை மத்திய வங்கி
13 மே 04	2003 மத்திய வங்கி ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை (குடியரசு தின ஞாபகார்த்த விரிவுரை)	முனைவர் பி.டபிள்யு. ஆர்.பி. ஏ.யு. ஹேரத் மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
17 யூன் 04	இஸ்லாமாபாத்திற்கு அப்பால் நகருதல்: தென் ஆசிய பொருளாதார ஒன்றித்தினை நோக்கி	பேராசிரியர் றெஹேமான் சொபான் தலைவர், கொள்கை விவாத நிலையம் பங்காளதேசம்
26 ஓகத்து 04	தென் ஆசியாவின் பொருளாதார அபிவிருத்தியும் உலகமயமாக்கலின் தாக்கமும் (இலங்கை மத்தியவங்கி 54ஆவது ஆண்டு நிறைவு உரை)	முனைவர் இசாட் குசெயின் ஆளுநர், பாக்கித்தான் ஸ்ரேட் வங்கி
23 செத்தெம்பர் 04	பயிர் உற்பத்தித்திறன், உணவுப் பாதுகாப்பு வேளாண்மையாளர் வருமானம்	பேராசிரியர் யூ. பி. டீ. எஸ் வைத்தியநாத பணிப்பாளர் நாயகம் தேசிய வேளாண்மை வணிகக் கழகம்
26 ஒத்தோபர் 04	சிறிய தொழில் முயற்சி அபிவிருத்திக்கு நுண்பாக நிதி ஒரு கருவியாகும்: வாய்ப்புக்களும் கட்டுப்பாடுகளுக்கும் (வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விரிவரை)	பேராசிரியர் எஸ். எஸ். கொலம்பகே இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9 திசெம்பர் 04	இலங்கையின் வாழ்வியல் முறையும் வாழ்க்கை நிலையும் மாற்றமுறுகிறதா? இலங்கை மத்திய வங்கியின் 2003/ 04 நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டின் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டவை	முனைவர்(திருமதி) அனிலா டயஸ் பண்டாரநாக்க பணிப்பாளர், புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

மூலம்: வ.க.ஆ. நிலையம் இலங்கை மத்திய வங்கி

சில நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் இவற்றில் முக்கியமாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் அலுவலர்களும் அரசு சார்பற்ற அமைப்புக்களின் கள உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர். ஏனைய அமைப்புக்களும் நிறுவனங்களும் விடுத்த கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக வங்கித் தொழில் ஆய்வு நிலையம் 12 சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியது. இதற்கு மேலாக அதன் பொது விரிவுரைத் தொடர்களில் 2004 இல் 10 பிரபல்யமிக்க பேச்சாளர்கள் நடைமுறை ஆர்வமுள்ள தலைப்புக்களில் பொது ஞாபகார்த்த விரைவுரைகளை வழங்கினர்.

பயிற்சி

வங்கியானது அதன் அலுவலர்களை மிகச் சிறந்த சொத்தாக கருதுகின்றது. ஆகவே துரிதமாக மாறிச்செல்லும் உலக நிதி நிலைமைகளின் மத்தியில்

அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு பணியாற்றுவதற்குரிய முக்கிய காரணியாக அலுவலர்களின் தொழில் தேர்ச்சியையும் திறமையும் அபிவிருத்தி செய்வது அவசியமானதாகும். இந்த முடிவினை எட்டுவதற்கு, ஊழியர்களும் முகாமைத்துவமும் சுறுசுறுப்பான கற்றல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இணைந்து பணியாற்றுவரென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பின்னணியில் அலுவலர்கள் தாமாகவே கல்வி பெற்று, பயிற்சி பெற்று அறிவாற்றல், நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்வதற்கான சூழலை உருவாக்குவதற்காக வங்கி தமது பயிற்சிக் கொள்கையினை மீளவரைவு செய்தது. தொழில்சார், தொழில்நுட்ப தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக சிறப்பாக சிரேஷ்ட மட்டத்திலுள்ளவர்களின் தலைமைதாங்கும் பண்புகளை கட்டியெழுப்புதற்காக முகாமைத்துவ துறையில் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதன் முக்கியத்துவத்தினை வங்கி அடையாளம் கண்டுள்ளது. இத்தேவையை உணர்ந்து வங்கி மூத்த வங்கி அலுவலர்களுக்கு வெளிக்கள தொழில்சார் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றில் பங்கேற்பதன் மூலமாக முகாமைத்துவத் தேர்ச்சி, குழு வேலைத்திட்டம், தந்திரோபாயத் திட்டமிடல், தீர்மானம் எடுத்தல், சவால்களை எதிர்நோக்கும் திறமை போன்ற துறைகளில் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்புக்களை வங்கி வழங்கியது.

ஆய்வுக்குரிய ஆண்டில் 203 அலுவலர்கள் வெளிநாட்டு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பயிற்சி பெற்ற வேளையில், உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 966 ஆகக் காணப்பட்டது. உள்ளூரில் பயிற்றப்பட்ட அலுவலர்களில் பெரும்பாலானவர்கள் அதாவது 545 அலுவலர்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சி போன்ற துறைகளில் பயிற்றப் பட்டனர். 301 அலுவலர்கள் பல்வேறு உள்ளூர் பயிற்சி நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பயிற்றப்பட்டனர்.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள பிரபல்யம் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பினை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு நிதி வழங்கும் கொள்கையினை வங்கி தொடர்ந்து பின்பற்றியது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 அலுவலர்கள் தமது பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளை வெளிநாட்டில் தொடங்கிய வேளையில் 6 அலுவலர்கள் தமது பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்ததன் பின்னர் வங்கியில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர். குறுங்கால பயிற்சிகளிலும், பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளிலும் பயிற்சி பெற்ற அலுவலர்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை II-17 இலும் II-18 இலும் தரப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டுக் காலத்திலும் வங்கி தமது வாராந்த ஆய்வரங்குத் தொடர்களைத் தொடர்ந்து நடாத்தியது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தொடர்பான தமது சிறப்புத் துறைகளில் அனுபவம் பெற்ற மூலவள ஆட்கள் அலுவலர்களுக்கு நடைமுறையில் முக்கியமாக கருதப்படுகின்ற துறைகளில் உரையாற்றுவதற்கென வரவழைக்கப்பட்டனர். குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்கள் தாம் புதிதாக பெற்றுக் கொண்ட அறிவாற்றலை வங்கியில் உள்ள மற்றைய அலுவலர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான அங்கமாகவும் பயன்படுத்துகின்றது. இத்திணைக்களம் 2004 இல் 44 ஆய்வரங்குகளை நடாத்தியதுடன்

அட்டவணை II-17
அலுவலர்களின் பயிற்சி
குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
ஆய்வரங்கு - 2003, 2004

பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை

திணைக்களம்	வெளி நாடு		உள்நாடு (வ.தொ.ஆ)	
	2003	2004	2003	2004
1. பொருளாதார ஆராய்ச்சி	23	36	57	70
2. வங்கி மேற்பார்வை	19	22	48	45
3. தகவல் தொழில்நுட்பம்	7	15	6	54
4. செயலகம்	6	12	42	43
5. ஊ.சே.நிதியம்	5	7	60	83
6. பொதுப்படுகடன்	10	5	22	24
7. பிரதேச அபிவிருத்தி	9	14	40	47
8. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்		4	19	24
9. நாணயம்	3	4	28	72
10. மனித மூலவள அபிவிருத்தி		4	26	33
11. செலாவணிக் கட்டுப்பாடு	4	6	24	46
12. முகாமைச் கணக்காய்வு	3	7	20	70
13. பணிமனை		2	26	38
14. புள்ளிவிபரம்	5	9	31	32
15. வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வை	3	10	35	27
16. நலன்புரி	1		24	21
17. பயிற்சி	2	2	11	12
18. பாதுகாப்புப் பணிகள்			22	33
19. சட்டம்	2	5	9	28
20. தகவல் (நூலகம் உட்பட)		5	31	48
21. நிதித் திணைக்களம்	2	6	24	32
22. உள்நாட்டு தொழிற்பாடுகள்	4	7	12	26
23. பன்னாட்டு தொழிற்பாடு	8	15	13	19
24. கொடுப்பனவு தீர்ப்பனவு	5	6	12	36
25. முகாமை அபிவிருத்தி நிலையம்	1			
26. அரச கணக்காய்வு				3
மொத்தம்	122	203	642	966

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) பிரதேச அலுவலகங்கள் உட்பட

அட்டவணை II-18
அலுவலர் பயிற்சி
பட்டப்பின்படிப்பு ஆய்வுகள் 2003/ 2004

ஆண்டு	பட்டப்பின் படிப்பிற்கு அனுப்பப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கைகளை	பட்டப்பின்படிப்பினை முடித்துக்கொண்டு திரும்பிய அலுவலர்களின் எண்ணிக்கை	2004 திசெம்பர் 31இல் உள்ளவாறு பட்டப்பின் படிப்பைத் தொடரும் அலுவலர்களின் எண்ணிக்கை	
			முனைவர் பட்டம்	முதுமாணி / பட்டப்பின்படிப்பு டிப்புளோமா
2003	6	10	1	10/ 3
2004	3	6	1	6/ 2

அவற்றில் 11 மத்திய வங்கிக்கு வெளியிலிருந்து வந்த மூலவள ஆட்களினாலும் எஞ்சிய 33 மத்திய வங்கி அலுவலர்களாலும் நடாத்தப்பட்டன.

நலன்புரி

நலன்புரித் திணைக்களம் தொடர்ந்தும் பலவித நலத்துறை வசதிகளை வங்கி ஊழியர்கள், ஓய்வூதியக்காரர்கள், மற்றும் அவர்களது பதிவு செய்யப்பட்ட தங்கியிருப்போர் என மொத்தம் 9,083 பேருக்கு வழங்கியது. இந்த வசதிகள் மருத்துவ நன்மைத் திட்டங்கள், வங்கியிலுள்ள மருத்துவ நிலையம், சலுகைக்கடன் வசதிகள் மற்றும் ஏனைய துணை வசதிகள் என்பவற்றை உள்ளடக்கும். 2004 இல் மருத்துவ நன்மைத் திட்டமானது மேலதிக மருத்துவ வசதிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் இது காலவரையிலும் ஊழியர்கள் மட்டும் அனுபவித்து வந்த சில வசதிகளை ஓய்வூதியக்காரர்களுக்கும் வழங்குதல் என்பன மூலம் விரிவடைந்தது. உண்மைச் சொத்துக்கள், வீடுகளின் கட்டுமானம் என்பவற்றின் செலவின அதிகரிப்புக் களையும் சந்தை வட்டி வீதக் குறைப்பினையும் கவனத்திலெடுத்து, 2004 ஏப்பில் 1ஆம் நாளன்று வீடமைப்புக் கடன்களுக்கான புதிய பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

முக்கிய மாற்றங்களாவன:

(அ) கடனின் அளவினை ரூ.1.5 மில்லியனிலிருந்து ரூ.2.0 மில்லியனாக அதிகரித்தல்

(ஆ) வங்கி ஊழியர்களினால் குடியிருப்பதற்கென வீடொன்றினைக் கட்டுவது அல்லது கொள்வனவு செய்வது தொடர்பான வட்டிவீதத்தினை ஆண்டொன்றிற்கு 3.8 சதவீதத்திலிருந்து 2.0 சதவீதமாகக் குறைத்தல்

(இ) அவர்கள் குடியிருக்கும் வீட்டில், திருத்தங்களை மேற்கொள்ளுதல், புதுப்பித்தல் மற்றும் விஸ்தரிப்பு என்பவற்றுக்கான மேலதிகக் கடன் வசதிகள்

(ஈ) மேற்கூறப்பட்ட நோக்கம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கும் நிறுவன மொன்றிலிருந்து ஊழியரொருவர் பெற்ற கடன் தொகையிலிருந்து மீட்சி பெறுவதற்குரிய வகையில் கடன் வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்துதல்.

ஏனைய செயற்பாடுகள்

வங்கி மருத்துவ நிலையத்தில் மருத்துவ சிகிச்சை பெறும் வங்கி ஊழியர்களின் தனிப்பட்ட தரவுகளை கணனி மயப்படுத்தும் நடவடிக்கை ஊழியர்களின் எதிர்கால நல நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டது.

வங்கியின் அலுவல்சார் நிகழ்வுகளை வங்கிப் பணிமனையில் நடாத்துவதற்கு இயலச் செய்வதற்கு வசதியாக உணவு வழங்கல் பணிகள் விரிவுபடுத்தப்பட்டமையானது செலவினத்திலும் குறைப்பினை ஏற்படுத்த வழி வகுத்தது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களினதும், ஓய்வூதியக்காரர்களினதும் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2004 திசெம்பர் 28 இல் பாதிக்கப்பட்ட பிரிவினரை அடையாளங்கண்டு நிவாரணம் அளிப்பதற்கானவொரு அனர்த்த நிவாரண நிதியத்துடன் செயலணி குழு ஒன்றினையும் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

மனிதவளங்களின் முகாமைத்துவமும் அபிவிருத்தியும்

மனிதவளங்களின் முகாமைத்துவமும் அபிவிருத்தியும் தொழிற்பாடுகள் உள்நாட்டிலும் பூகோள ரீதியாகவும் எழுகின்ற நிதிச் சூழல்களில் எழுகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு தகுதியடைய, ஆற்றல்மிக்க, துடிப்பானதொரு தொழிற்படையினை பேணுவதன் மூலம் மையக் குறிக்கோள்களை எய்து வதற்காக வங்கியின் பல்வேறு திணைக்களங்களினாலும் மேற்கொள்ளப்பட்டன.

மனிதவள முகாமைத்துவமும் அபிவிருத்தியும் தொகுதியானது மனித வளங்கள், பயிற்சி, வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம், முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் மற்றும் நலன்புரி போன்ற ஐந்து திணைக்களங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த ஐந்து திணைக்களங்களில் மனிதவள திணைக்களமானது ஆட்சேர்ப்பு, பதவியில் அமர்த்துதல், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், செயலாற்று முகாமைத்துவம், ஓய்வு பெறுதல் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் தந்திரோபாய தொழிற்பாடுகளான மாற்றங்களை முகாமைப்படுத்தி மத்திய வங்கியில் "செயலாற்றுகை கலாசாரத்தினை" அறிமுகப்படுத்தல் என்பவற்றுக்கு பொறுப்பாக விளங்குகின்றது. அனைத்து மனிதவள முன்முயற்சிகளுக்கான கொள்கைகளும் நடைமுறைகளும் மனிதவள அபிவிருத்தித் திணைக்களத்தினால் விருத்தி செய்யப்படுகின்றது.

செயலாற்றுகை முகாமைத்துவம்

புதிய வங்கி செயலாற்றுகை முகாமைத்துவ முறையானது 2003 இற்கு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் 2004 இற்கான செயலாற்றுகை முகாமைத்துவ முறையானது 2005 முதலாம் காலாண்டில் பூர்த்தியாக்கப்படும் என

எதிர்பார்க்கப்படுகின்றது. 2005ஆம் ஆண்டிற்கான திணைக்கள இலக்கு நிர்ணய செய்முறையானது தொடர்பான திணைக்களங்களால் 2004 இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டு எதிர்காலத்திற்கான செயலாற்று அடிப்படையிலான மதிப்பீட்டு செய்முறைக்கான வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

பதவி உயர்வு

புதிய செயலாற்றுகை முகாமைத்துவ முறையுடன் ஒத்திசைவான வகையில் பதவி உயர்வுக் கொள்கைத் திட்டம் வரையப்பட்டு நடைமுறைப்படுத்துலுக்கு முன்னராக ஊழியர்களின் பிரதிநிதிகளிடமிருந்து அதனைப் பற்றிய கருத்துக்கள் கேட்டறியப்பட்டது. 2003ஆம் ஆண்டில் கொடுபட வேண்டிய பதவி உயர்வுகள் கவனத்தில் எடுக்கப்பட்டு தகுதிவாய்ந்த அலுவலர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

தொழில் தருநர் - தொழிலாளர் உறவுகள்

சம்பள திருத்தங்கள் இறுதியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கும் ஊழியர் பிரதிநிதிகளுக்கு மிடையில் மூன்று ஆண்டு காலப்பகுதிக்கான கூட்டு ஒப்பந்தம் ஒன்று கையொப்பமிடப்பட்டதுடன் இவ் ஒப்பந்தமானது 2005 திசெம்பர் 31ஆந் திகதி வரைக்கும் செல்லுபடியாகும். 2004ஆம் ஆண்டுக் காலத்தில் தொழில் ரீதியான இணக்கம் காணப்பட்டதுடன் ஊழியர் பிரதிநிதிகளுடன் ஆரோக்கியமான உறவுகளும் பேணப்பட்டு வந்தன.

ஆட்சேர்ப்பு

தகுதியடைப்படையிலான ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுத்தலுக்கான கொள்கையும், நியமங்களும் இலங்கை மத்திய வங்கியின் மனித வளத் தேவைகளை எதிர்கொள்ளுவதற்கென தகுதியும் தேர்ச்சியும் பெற்ற பரீட்சார்த்திகளை கவருவதனை குறிக்கோளாக கொண்டு மேலும் மேம்படுத்தப்பட்டது. 2004 இறுதியில் உயர்பதவி வகுப்புக்கான வெற்றிடங்கள் விளம்பரப்படுதத்பட்டு 3750 விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப் பட்டன. 2150 அளவிலான விண்ணப்பதாரர்கள் தகுதிகாண் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகமை பெற்றவர்களாக விருந்தனர். 2005 மார்ச்சு- ஏப்பிறலில் உயர்பதவி வகுப்பிற்கு புதிய அலுவலர்களைச் சேர்ப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மனிதவளத் திட்டமிடல்

2004ஆம் ஆண்டில் 25 ஊழியர்கள் இலங்கை மத்திய வங்கிப் பணியிலிருந்த ஓய்வு பெற்றதுடன் 3 ஊழியர்கள் தாமாகவே விலகிச் சென்றனர். 2004ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கிப் பணியில் 416 உயர்பதவி அலுவலர்களும் 619 உயர் பதவியல்லா அலுவலர்களும் 122 சிற்றூழியர்களும் காணப்பட்டனர். இவ்வாண்டில் பெரும்பாலான எழுதுவினைஞர்கள் மற்றும் செயலகப் பணிகளும் ஏனைய உதவிப் பணிகளும் வெளி மூலங்களில் இருந்தே பெறப்பட்டன.

ஈ - மனிதவள முறையினை நடைமுறைப்படுத்தல்

மனிதவள அபிவிருத்தித் திணைக்களம் அதன் மனிதவள தொழிற்பாடுகள், செயன்முறைகள் என்பவற்றை தன்னியக்கப்படுத்தல் மூலம் ஆற்றலினையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்காக உயர் தொழினுட்பங்களை பயன்படுத்துவதற்கு பெரும் முயற்சி எடுத்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் மையமாக தீர்மானமெடுப்பதற்காக முகாமைத்துவத்திற்கு வலையமைப்பினூடாக பூரணப்படுத்தப்பட்ட மனிதவள தகவல்களை வழங்குவதாகும். ஈ - மனிதவள முறையானது இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட மென்பொருள் பிரயோகத்தின் மூலம் ஆட்சேர்ப்பிலிருந்து ஓய்வுபெறல் வரையிலான மனிதவள செய்முறைகளை ஒழுங்குபடுத்தி ஒன்று சேர்த்தலை இயலக்கூடியதாக செய்யும்.

ஆளுநர் கலந்து கொண்ட கூட்டங்கள்

2004[1] சனவரி-யூன் 30 ஆம் நாள் வரையான காலப்பகுதியில் ஆளுநர் திரு.ஏ.எஸ். ஜயவர்த்தன பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

1. 2004 மார்ச்சு 15-18 ஆம் நாள் வரை நேபாளத்தில் நடைபெற்ற சார்க் நிதி/ வங்கிகளின் பன்னாட்டுத் தீர்ப்பனவு கருத்தரங்கில் கலந்து கொண்டார்.
2. 2004 ஏப்பிறல் 17-28 காலப்பகுதியில் ஜி 24, ப.நா.நிதிய மாநாடுக் குழு மற்றும் அபிவிருத்திக் கூட்டங்களில் - வாசிங்டன் டி.சி. யில் இடம்பெற்ற வசந்த காலக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

2004 யூலை-திசெம்பர் 31 ஆம் [1] நாள் வரையான காலப்பகுதியில் ஆளுநர் திரு. சுனில் மென்டிஸ் பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

1. 2004 செத்தெம்பர் 25-2004 ஒத்தோபர் 11 ஆம் நாள் வரையான காலப்பகுதியில் வாசிங்டன்

அடிக்குறிப்பு 1

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன 2004 யூன் 30 ஆம் நாளிலிருந்து ஓய்வு பெற்றார்.

அடிக்குறிப்பு 2

திரு. சுனில் மென்டிஸ் 2004 யூலை 1ம் நாளன்று ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

டி.சி யில் இடம்பெற்ற ஜி 24, ப.நா.நிதிய மாநாடு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின்/ உலக வங்கியின் அபிவிருத்திக் குழுவின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

நியமனங்கள்

1. முன்னைய ஆளுநரின் பதவிக்காலம் முடிவடைந்ததுடன் நாணயவிதிச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க மேதகு சனாதிபதிக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் அவரால் 6 ஆண்டுக்காலப் பகுதிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக திரு. சுனில் மென்டிஸ் நியமிக்கப்பட்டார்.

2. வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு.ஜி.எல். அமரசேன, 2004 பெப்புருவரி 10 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களத்தின் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

3. நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளரான திரு.எஸ். விஜேசிங்க, 2004 மார்ச்சு 26 ஆம் நாளிலிருந்து நாணயத் திணைக்களத்தின் பதில் கண் காணிப்பாளராக நியமிக்கப்பட்டனர்.

4. ஆளுநரின் உதவியாளரான முனைவர் (திருமதி) ஆர். ஜயமகா, 2004 ஏப்பிறல் 19 ஆம் நாளிலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

5. வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற செல்வி.சி. அபேநாயக்க, 2004 மே 21 ஆம் நாளிலிருந்து நாணயச்சபையின் செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

6. பின்வரும் பதவி உயர்வுகளும், நியமனங்களும் 2004 யூன் 01 ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

   I. பொதுப்படுகடன் திணைக் களத்தின் கண்காணிப்பாளரும் பதிவாளருமான, திரு.கே.ஜி.டி.டி. தீரசிங்க, ஆளுநரின் உதவியாளராக.

   II. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளர், திரு.பி.டி.ஜே. பர்னாந்து, ஆளுநரின் உதவியாளராக.

   III. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர், முனைவர் ஏ.ஜி. கருணாசேன, ஆளுநரின் உதவியாளராக.

   IV. பொதுப்படுகடன் திணைக் களத்தின் மேலதிகப் பணிப் பாளரும் தற்பொழுது கைத்தொழில், சுற்றுலா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராக விடுவிப்பில் இருக்கும், முனைவர் யூ. விதானபத்திரன, ஆளுநரின் உதவியாளராக.

   V. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர், திரு.வை.எம்.டபிள்யூ.பி. வீரசேகர, ஆளுநரின் உதவியாளராக.

   VI. ஊழியர் சேமநிதியத் திணைக் களத்தின் துணைக் கண் காணிப்பாளர், திரு.வை.ஏ.டீ. சில்வா, பணிமனைத் திணைக் களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

   VII. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர், திருமதி.பி. லியனகே, பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக.

   VIII. உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர், திரு.ஏ. கமலசிறி, உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் கண்காணிப்பாளராக.

   IX. பொதுப்படுகடன் திணைக் களத்தின் துணைக் கண் காணிப்பாளர், முனைவர் டபிள்யூ.எம். ஹேமசந்திர, பொதுப்படுகடன் திணைக் களத்தின் பதில் மேலதிகப் கண்காணிப்பாளராக.

X. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர், திருமதி.ஜே.பி. மாம்பிட்டிய, தகவல் தொழில் நுட்பத் திணைக்களத்தின் பதில் மேலதிக பணிப்பாளராக.

XI. பொதுப் படுகடன் திணைக்களத்தின் துணைக் கண்காணிப்பாளர், செல்வி.கே. சரவணமுத்து, தகவல் திணைக் களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

XII. வங்கி மேற்பார்வைத் திணைக் களத்தின் துணைப் பணிப்பாளர், திரு.பி. சமரசிறி, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

XIII. புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர், திரு.டி. வசந்த, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

XIV. வங்கி மேற்பார்வைத் திணைக் களத்தின் துணைப் பணிப்பாளர், திருமதி. ஜே.ஏ.என். திஸ்ஸநாயக்க, முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

XV. புள்ளி விபரவியல் திணைக் களத்தின் துணைப் பணிப்பாளர், திரு.ஏ.ஜீவந்தர, நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராகவும் பின்னர் 2004 நவெம்பர் 22 ஆம் நாளிலிருந்து பதில் கண் காணிப்பாளராகவும் நியமிக்கப் பட்டார்.

XVI. கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர், திரு.கே.பி. திஸ்ஸாகருண, கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

XVII. வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் துணைப் பணிப்பாளர், திரு.எம்.வி.எம். பர்னாந்து, வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக.

XVIII. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், முனைவர் பி.டபிள்யு.ஆர்.பி.ஏ.யு. ஹேரத், 2004 யூன் 01 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராக.

7. பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர்.எச்.என். தேநுவர, பொதுப் படுகடன் திணைக்களத்தின் கண் காணிப்பாளராகவும் பதிவாளராகவும் தமது பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் மேலதிக பணிப்பாளர் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக 2004 யூன் 01 ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். பின்னர் 2004 ஓகத்து 04 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் மேலதிக பணிப்பாளர் பதிவிக்கு திரும்பி2004 ஓகத்து 30 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

8. நலன்புரி திணைக்களத்தின் பணிப்பாளர். திருமதி.பி.ரி. பெரேரா, 2004 ஓகத்து 2ஆம் நாளிலிருந்து சட்ட சீர்திருத்தங்கள் செயற்றிட்டத்திற்கான சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

9. நலன்புரித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.சி.கே. பரணவிதான, 2004 ஓகத்து 02 ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2004 ஓகத்து 04 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளராகவும் 2004 ஒத்தோபர் 14 ஆம் நாளிலிருந்து வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

10. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மேலதிக கட்டுப் பாட்டாளர், திரு.எல்.வை. தர்மசேன, 2004

ஓகத்து 04 ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், திரு.எச்.எம்.பி. ஹேரத், 2004 ஓகத்து 04 ஆம் நாளிலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மேலதிகக் கட்டுப் பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

12. பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிகக் கட்டுப்பாட்டாளர், திருமதி.சி. பிரேமரத்ன, நிதி அமைச்சிற்கு பகுதிநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டு மீண்டும் முழுநேர அடிப்படையில் வங்கிப் பணிக்கு மீண்டதுடன் 2004 செத்தெம்பர் 01 ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிக பணிப் பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2004 ஒத்தோபர் 14 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரும், பதிவாளருமாக நியமிக்கப்பட்டார்.

13. ஆளுநரின் உதவியாளர் திரு.ஆர்.ஏ. ஜயதிஸ்ஸ, பன்னாட்டு நாணய நிதியத் திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப் பாளராக பணியாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டு 2004 ஒத்தோபர் 11 இலிருந்து மீண்டும் வங்கிப் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஓய்வு பெறல்

1. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஏ.எஸ். ஜயவர்த்தனவின் பதவிக்காலம் 2004 யூன் 30 ஆம் நாள் முடிவடைந்தது.

2. திரு.ஜி.எல். அமரசேன, பணிமனைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் 2004 பெப்புருவரி 09 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றர்.

3. திருமதி.சி.எம். ஆரியரத்ன, நாணயத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் 2004 மார்ச் 26 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

4. திரு.பி.எம். நாகாவத்த, துணை ஆளுநர், 2004 ஏப்பிறல் 19 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

5. திரு.ஜே.எம்.ரி.பி. ஜயசுந்தர, மதியுரையாளர் மத்திய வங்கித் தொழில் வலுப்படுத்தல் செயற்றிட்டம் 2004 ஏப்பிறல் 20 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

6. செல்வி.சி. அபேநாயக்க, ஆளுநரின் உதவியாளர் 2004 மே 20 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றதுடன் அவரது ஒப்பந்த அடிப்படையிலான நாணயச்சபையின் செயலாளர் பணி 2004 நவெம்பர் 20 ஆம் நாளன்று முற்றுப்பெற்றது.

7. திரு.எஸ். விஜேசிங்க, நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் 2004 நவெம்பர் 21 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. உதவி ஆளுநர், முனைவர்.யூ. விதானபத்திரன, கைத்தொழில், சுற்றுலா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்குச் செயலாளராக.

2. பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் பணிப்பாளர், முனைவர். பி.டபிள்யூ.ஆர்.பி.ஏ.யூ. ஹேரத், பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறை வேற்றுப் பணிப்பாளராக.

3. திரு.எஸ்.ஆர். ஆட்டிகல, உயர் பதவி வகுப்பு தரம் III - நிதியமைச்சிற்கு.

4. திரு.எம். மகிந்தசாலிய, உயர் பதவி வகுப்பு தரம் I - நிதியமைச்சிற்கு.